# அத்தியாயம் 9 — முக்கியமான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் சாராம்சம்[1]

அறிக்கையில் உள்ளடங்கியுள்ள முக்கியமான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் சாராம்சம் கீழே தரப்பட்டுள்ளது.

## *அத்தியாயம் இரண்டு: யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீதான அவதானிப்புகள்*

9.1 பல தசாப்த காலப் பயங்கரவாதம் மற்றும் பதில் வன்முறைகள் என்பவற்றால் துயர்களை அனுபவித்த நாட்டுக்கும், அதன் மக்களுக்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒரு குறுகிய காலம் நீடித்த ஓய்வையே கொண்டு வந்தது. எந்தளவிற்கு ஸ்திரமற்றதாகவும் மற்றும் ஈற்றில் வினைத்திறனற்றதாகவும் இருந்து, அவசியமான திடமானதொரு அரசியல் அல்லது பாதுகாப்புக் கட்டமைப்பை வழங்காத போதிலும் கூட, யுத்த நிறுத்த ஒப்பந்தமானது பேச்சுவார்த்தை மூலமானதொரு தீர்வுக்கு இட்டுச் செல்லக்கூடியதொரு செய்முறைக்கான ஓர் அத்திவாரம் இடுவதை சம்பந்தப்பட்ட தரப்புகள் அனைத்தும் மேற்கொள்வதற்கான ஓர் வாய்ப்பை வழங்கியது. எவ்வாறாயினும், நிகழ்வுகள் நடந்தேறியவாறு இவையெதுவுமே நிறைவேறவில்லை என்பது ஈற்றில் நிதர்சனமாகியது.

9.2 ஒரு புறத்தே அமைதிச் செயன்முறைகளின் அனுசரனையாளராகவும் மறுபுறத்தில் இலங்கை கண்காணிப்புக் குழுவின் தலைமை என ஏற்றுக்கொள்ள முடியாத இரண்டு பாத்திரங்களையும் நோர்வே எடுத்துக் கொண்டது உட்பட, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் கருத்தியல் ரீதியான தவறுகள் மற்றும் அமுல்படுத்துதல் குறைபாடுகள் என்பவற்றோடு ஒரு நிலையான அமைதிச் செயன்முறைக்கு முன்னகர்த்தும் ஆற்றல் வழங்கத் தவறியமை என்பன அரசுக்கும், அரசு தரப்பல்லாத செயற்பாட்டாளர்களுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு வெற்றிகரமான மாதிரியென அது நிரூபிக்கப்

[1] The LLRC's Final Report was released to the public in December 2011. Up until the public release of this unofficial translation, in mid-March 2012, the government has not released to the public domain a translation of the report in Tamil or Sinhala. Bizarelly, Azzam Ameen, a Sri Lankan journalist on 1st March publicly tweeted that the President's office has official translations of the report in all three languages, which if true, begs the question as to why a more public release of the report in Sinhala and Tamil hasn't occurred and isn't encouraged. This unofficial translation of the LLRC Report's recommendation to Tamil was commissed by the Centre for Policy Alternatives (CPA) with a view to making key content in the LLRC final report more widely known and accessible.

A Sinhala translation of the report, also commissioned by CPA, is available here – http://www.scribd.com/doc/86023693/LLRC-Final-Report-Chapter-9-Sinhala-Translation

The official version of the LLRC report in English is available for download here - https://www.box.com/s/z6v176mf74dp8ly5qzuc

படவில்லையென்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. ஈழம் எனும் பிரகடனப்படுத்தப்பட்ட இலட்சியம் தவிர்ந்த பேச்சுவார்த்தை மூலமான ஏதேனும் தீர்வில் தமிழீழ விடுதலைப் புலிகளால் தெளிவாக வெளிக்காட்டப்பட்ட ஆர்வமின்மை மற்றும் நாட்டின் ஜனநாயக முறைமையில் பங்கேற்கும் பிரதான தமிழ் அரசியல் கட்சிகள் உட்பட வேறுபட்ட அரசியல் கட்சிகள் மத்தியில் முக்கியமான தேசியப் பிரச்சினைகளுக்கு இணக்கமான அணுகுமுறையின்மை என்பவையும் இந்த மகிழ்ச்சியற்ற மற்றும் பாதிப்படையச் செய்யும் அனுபவத்துக்குப் பங்களித்தன.

9.3 யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் கருத்தியல் ரீதியானதும் மற்றும் அமுல்படுத்துதல் ரீதியானதுமாகிய இருவகைக் குறைபாடுகளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் நன்கு பயன்படுத்திக் கொண்டதுடன், ஆட்புல நன்மைகளையும் மற்றும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரத்தையும் ஸ்திரப்படுத்திக் கொண்டது. அது, சம அந்தஸ்து மற்றும் பரஸ்பரத்தன்மையின்மை என்பவற்றிலிருந்து பயன்பெற்றது; ஆயுதங்களைக் கைவிடுதல் மட்டுமன்றி, அரசியல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான ஏதேனும் ஏற்பாடுகளின்மையையும் உபயோகித்துக் கொண்டது; இலங்கைக் கடற்படையின் சட்டG+ர்வமான கடல் நடவடிக்கைகளை விலக்குவதற்கும் அதன் மூலம் ஐக்கிய நாடுகளின் 2001 ஆம் ஆண்டு பாதுகாப்பு சபைத் தீர்மானம் 1373 உட்பட, தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு எதிராக சட்ட விரோத ஆயுதக் கடத்தல்களுக்கு வசதியளித்து யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளைத் துஷ்பிரயோகித்தது; மீறல்களைத் தடுப்பதற்கு எந்தவொரு நம்பிக்கையான உறுதிப்படுத்தும் அதிகாரம் இல்லாததிலிருந்தும் நன்மையடைந்தது; சிறுவர்களைப் படைகளில் ஈடுபடுத்தும் வெறுக்கத்தக்க நடைமுறைக்கு எதிராக ஒரு பயனுறுதியான அதிகாரத்தை மட்டுமன்றி எந்த மனித உரிமைகள் கடப்பாடுகளும் முற்றிலும் இல்லாததையும் மறைமுகமாகத் துஷ்பிரயோகித்தது.

## *அத்தியாயம் மூன்று: நிகழ்வுகளின் விவரித்தல்கள் மட்டும்*

## *அத்தியாயம் நான்கு: மோதல்களின் இறுதிக் கட்டம் தொடர்பாக சர்வதேச மனிதாபிமான சட்டப் பிரச்சினைகளின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள்*

### *பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகள்*

9.4 சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களின் சூழ்நிலையில் இலங்கை அனுபவத்தை மதிப்பீடு செய்யும் பொழுது, தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களை மீட்பதற்குப் பொதுமக்களின் பாதுகாப்புக்கு உச்சக்கட்ட முன்னுரிமை அளித்த இராணுவத் தந்திரோபாயங்கள் குறித்து ஆணைக்குழு திருப்தியடைகிறது. இது தொடர்பில், மோதல்களின் இறுதிக் கட்டங்களில் தங்களது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பாதுகாப்புப் படைகளின் நகர்வுகள் திட்டமிடப்பட்ட மந்தகதியைக் கொண்டிருந்தது, இது பொது மக்கள் பாதிப்பை தவிர்ப்பதற்கு அல்லது அவற்றைக் குறைப்பதற்கு கவனமாகத் திட்டமிடப்பட்ட தந்திரோபாயத்திற்கு அத்தாட்சியாக இருந்ததையும் ஆணைக்குழு கவனத்தில் கொள்கிறது.

9.5 இந்தக் காரணிகள், இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான கொள்கை ஒன்றின் உருவாக்கத்தில் பொதுமக்கள் உயிர்களின் பாதுகாப்பு முக்கியமானதொரு அம்சமாகும்

எனும் நிலைப்பாட்டுடன் உறுதியானவையாக இருந்தன. மேற்கூறப்பட்ட அத்தியாயம் 4 இன் பிரிவு II இல் பந்திகள் 4.106, 4.107, 4.109, 4.110 மற்றும் 4.111 என்பவற்றினூடாக மேலதிக புலன்விசாரணைகளைத் தேவைப்படுத்தும் பிரத்தியேகமான சம்பவங்கள் இருந்த போதிலும், அவை திட்டமிட்டே பொதுமக்களை இலக்காகக் கொள்வது எனும் கொள்கையொன்றின் அம்சமாகும் என்ற ஏதேனும் கூற்றுக்கு எதிரான எதிர்நிலையைக் கொண்டிருந்தன.

*யுத்த சூன்ய வலயங்கள்*

9.6 உண்மையில் மோதல்களின் இடைநடுவில் சிக்கி, பொதுமக்கள் உயிரிழப்புகள் ஏற்பட்ட போதிலும் கூட, யுத்த சூன்ய வலயங்களிலிருந்த பொதுமக்களை பாதுகாப்புப் படைகள் திட்டமிட்டே இலக்கு வைக்கவில்லையென ஆணைக்குழு அதன் முன்னுள்ள அனைத்துக் காரணிகள் மற்றும் நிலைமைகள் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு தீர்மானிக்கின்றது. மேலும், மோதல் பகுதிகளிலிருந்து பாதுகாப்பான பிரதேசங்களுக்கு தப்பியோட முயன்ற பொதுமக்களை தமிழீழ விடுதலைப் புலிகள் இலக்கு வைத்தமையும், கொன்றமையும், கண்ணிவெடிகளினால் ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தல்கள் மற்றும் அவற்றின் விளைவாக பொதுமக்களுக்கு ஏற்பட்ட இறப்புக்கள் மற்றும் காயங்கள் மற்றும் நந்திக் கடலைக் கடப்பதில் உள்ளிருந்த அபாயங்கள் ஆகிய அனைத்தும் கூட்டாகப் பொதுமக்கள் பாதிப்புகளுக்குப் பங்களித்தன. அத்தோடு, தமிழீழ விடுதலைப் புலிகளின் துப்பாக்கி நிலைகள் மீதானதொரு தாக்குதல் சம்பந்தப்பட்ட இராணுவத் தாக்குதலின் குறிக்கோளுக்கான தொடர்புபட்டதும் மற்றும் விகிதாசாரப் பங்களிப்பையும் வழங்கும் என்பதில் ஒரு உண்மையான எதிர்பார்ப்பு காணப்படுவதையும் நியாயமானதாகவே முடிவு செய்யலாம்.

9.7 மேற்படி தீர்மானங்களை எட்டியபின், பாதுகாப்புப் படைகளால் திட்டமிட்ட வகையில் பொதுமக்கள் இலக்கு கொள்ளப்படாதவிடத்து, யுத்த சூன்ய வலயத்திற்குள் சூட்டு வலுவைத் திருப்பி உபயோகித்த பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கை சூழ்நிலையின் விகிதாசார அளவிற்கு அதிகமாக இருந்ததா என்ற கேள்வியைக் கவனத்தில் கொள்வதும் ஆணைக்குழுவின் பொறுப்பாகும். மேலே விபரித்தவாறு நிலைமையின் சிக்கலான தன்மைக்கு, தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, அனைத்து அம்சங்கள் மீதும் மிகவும் கவனமான பரிசீலனைகளைக் கருத்தில் கொண்ட பின்னர், சந்தர்ப்ப சூழ்நிலைகளில் நடைமுறைச் சாத்தியமான அனைத்து ‘‘சாத்தியமான பாதுகாப்பு முன்னேற்பாடுகளும்’’ எடுக்கப்பட்டும் மற்றும் வேறொரு சாத்தியமான தெரிவுகளும் சாத்தியமாக இல்லாதபோது பாதுகாப்புப் படைகள் முன்னொருபோதும் இல்லாதவொரு நிலைமையை எதிர் கொண்டதென ஆணைக்குழு அபிப்பிராயம் கொள்கிறது.

9.8 இந்தச் சந்தர்ப்ப சூழ்நிலையில், இராணுவ நடவடிக்கைகளின்போது உயிரிழப்பு, காயம் அல்லது சொத்துக்களுக்கான சேதம் தொடர்பாக அரசின் பொறுப்புக்களைத் தீர்மானிக்கும் கேள்விகளில், அனைத்து சந்தர்ப்ப சூழ்நிலைகளுடனும் இணைந்ததாக போதியளவான அறிக்கைப்படுத்தலுடன் எந்த நிலைமைகளின் கீழ் ‘‘மோதல் நடவடிக்கை’’ நடைபெற்றதென நியாயசபை ஒன்றின் முன் ஒரு மீளுருவகப்படுத்தலை பெற்றுக் கொள்வதை, கோட்பாட்டு அதிகாரங்களைக் குறிப்பிட்டு சர்வதேச நியாயசபைகள் ‘‘அசாத்தியத்திற்கு அடுத்ததாகும்’’ என விபரித்ததை இந்த சந்தர்ப்ப சூழ்நிலையில் நினைவு கூர்வதும் பொருத்தமானதாகும்.

*பொதுமக்களின் உயிரிழப்புகள் அல்லது காயங்களின் குறிப்பிட்ட சந்தர்ப்பங்கள்*

9.9 ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட பொதுமக்களின் உயிரிழப்புக்கள் சம்பந்தப்பட்ட சில சம்பவங்களின் ஒரு மீளுருவகப்படுத்தலுக்கு முயற்சிப்பதில் இதே போன்ற சிரமங்களுக்கு ஆணைக்குழு முகங்கொடுத்தது. அத்தகைய சம்பவங்கள் சரியாக எத்தகைய சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் நடைபெற்றது (மேலே அத்தியாயம் 4 பிரிவு II இல் பந்திகள் 4.106, 4.107, 4.109, 4.110 மற்றும் 4.111 விபரிக்கப்பட்டவாறு) என்பதைத் தீர்மானிப்பதில் ஆணைக்குழு சிரமங்களைக் கொண்டிருந்தது. இருந்த போதிலும், பாதிப்பை ஏற்படுத்த வேண்டும் என்றவொரு உள்நோக்கத்துடனானவையாக இவை இல்லாதிருந்தாலும் கூட, பொதுமக்கள் உயிரிழப்புகள் அல்லது காயங்களை ஏற்படுத்தியதிற்கு பாதுகாப்பு படைகளின் ஈடுபாட்டின் சாத்தியம் குறித்ததாகவே சான்றுகள் சுட்டிக்காட்டுகின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களில், அத்தகைய சம்பவங்கள் எத்தகைய சந்தர்ப்பங்களின் கீழ் நடைபெற்றிருக்கலாம் என்பதை மேலும் முழுமையாக உறுதிப்படுத்திக் கொள்வதும், மற்றும் அத்தகைய புலன்விசாரணைகள் தவறான நடத்தையை வெளிப்படுத்தின், சட்ட நடவடிக்கையை மேற்கொண்டு தவறு செய்தவர்களை தண்டிப்பதும், அரசின் தரப்பிலானதொரு கடமையென ஆணைக்குழு வலியுறுத்துகின்றது. மேலே குறிப்பிட்ட சம்பவங்கள் மற்றும் மேலதிக புலன் விசாரணைகள் வெளிப்படுத்தக் கூடிய வேறு ஏதேனும் சம்பவங்கள் ஆகிய இரண்டும் தொடர்பாக தனிப்பட்ட இழப்புகளுடன் பாதிக்கப்பட்டவர்கள் சமரசத்திற்கு வருவதற்கு உதவும் ஓர் மனிதாபிமான ரீதியான சமிக்கையாக கொல்லப்பட்டவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் நெருங்கிய இரத்த உறவினர்களுக்கு பொருத்தமான பரிகாரத்தை வழங்குவதற்கும் கவனம் அளிக்கப்படல் வேண்டும்.

*வைத்தியசாலைகள்/தற்காலிக வைத்தியசாலைகள்*

9.10 அனைத்து சந்தர்ப்பங்களிலுமான கவனமானதொரு பரிசீலனை, ஷெல் வீச்சுக்கள், வைத்தியசாலைகள் மீது விழுந்து சேதங்களை ஏற்படுத்தியதையும் மற்றும் உயிரிழப்புகளையும் விளைவித்தது என்பதில் ஆணைக்குழுவைத் திருப்திப்படுத்தியது. எவ்வாறாயினும், ஆணைக்குழுவின் முன் முன்வைக்கப்பட்ட சான்றுகள் சம்பவ நேரம், சரியான இடவமைவு மற்றும் ஷெல் வீசப்பட்ட திசை என்பவற்றிலிருந்து, சம்பவங்களின் சரியான தன்மை பற்றி ஒரு குழப்பமான தோற்றத்தையே சுட்டிக்காட்டுகின்றன.

9.11 இந்தப் பின்னணியில், கேள்விக்குட்படுத்தப்பட்ட நடவடிக்கைகளுக்கான பொறுப்பை, உறுதியான சாட்சியத்தின் அடிப்படையில் தீர்மானிப்பதே ஆணைக்குழுவினால் எதிர்கொள்ளப்பட்ட சவாலாகும்.

9.12 அதன் தீர்மானத்தை மேற்கொள்வதில், ஆணைக்குழுவினால் எதிர்நோக்கப்பட்ட சிரமங்கள் இரண்டு வகையாகும்:

அ. சம்பந்தப்பட்ட பகுதிகளில், மோதலின் தீவிரம் என ஊகிக்கக்கூடிய காரணத்தால் ஷெல் வீச்சினால் ஏற்பட்ட நிலக்குழிகளின் தன்மை பற்றிய ஒரு பகுப்பாய்வு மீதான உடனடிப் புலன் விசாரணை இருக்கவில்லையென்பது ஆணைக்குழுவிற்கு புலப்படுகின்றது.

ஆ. ஆணைக்குழுவிற்கு தங்கள் சாட்சியங்களை அளித்த நபர்கள் எவருமே வைத்தியசாலைகள் மீது வீழ்ந்த ஷெல்கள், தனியே இலங்கை இராணுவ தரப்பிலிருந்து அல்லது தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்தே உண்மையில்

ஏவப்பட்டது என்பதை நிச்சயமாக உறுதிப்படுத்துவதற்கான ஒரு நிலையில் அவர்கள் இருந்தனர் என்பதை உறுதியாக தெரிவிப்பதற்கு இயலாதிருந்தனர். ஆணைக்குழுவின் முன் தோன்றிய பொதுமக்கள் இருதரப்புகளிலிருந்தும் ஷெல்கள் வீசப்பட்டதாகத் தெரிவித்தனர். 'ஷெல் ஒன்று வந்து வீழ்ந்ததும், பொதுவான எதிர்பார்ப்பு அது இராணுவ தரப்பிலிருந்தானது என்பதாகும் - சரியாக சொல்ல முடியாது', என பொதுமக்களில் ஒருவர் குறிப்பிட்டார். மற்றொரு முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிப் போராளி தனது சாட்சியத்தில், உண்மையில் புதுமாத்தளன் வைத்தியசாலை மீது தமிழீழ விடுதலைப் புலிகளால் தவறுதலாக ஷெல் வீசப்பட்டது எனவும் அதற்கு பின்னர் அவர்கள் மன்னிப்புக் கோரியதாகவும் தெரிவித்தார்.

9.13 இவ்விதமாக தொழில்நுட்ப ரீதியான ஒரு முதனிலைச் சான்று இல்லாததினாலும், மற்றும் பொதுமக்களின் துணைச்சாட்சியங்களும் உண்மையில் தெளிவற்றவையாகவும் மற்றும் ஷெல் வீசியமைக்கு பொறுப்பாக ஒரு தரப்பா அல்லது மற்றைய தரப்பா என்ற நிச்சயமானதொரு முடிவுக்கு நியாயப்படுத்தாதினாலும் வைத்தியசாலைகளுக்கு ஷெல் வீசி உயிரிழப்புகள்/சொத்துச் சேதம் என்பவற்றை ஏற்படுத்தியமைக்கு யார் பொறுப்பானவர்கள் என நிச்சயமானதொரு தீர்மானத்தை எட்டும் ஆணைக்குழுவின் பணியை மிகவும் கடினமாக்கியது.

9.14 ஷெல் வீச்சுகளுக்கு பொறுப்பானவர்களாக ஒரு தரப்பையோ அல்லது மறுதரப்பையோ தீர்மானிப்பதில் நிச்சயமானதொரு முடிவுக்கு ஆணைக்குழு வரமுடியாத நிலையில் இருந்த போதிலும், பொதுமக்களால் அளிக்கப்பட்ட பல சாட்சியங்களின் படி, ஷெல்கள் உண்மையில் வைத்தியசாலைகள் மீது வீழ்ந்து அவற்றிற்கு சேதத்தை ஏற்படுத்தியதுடன் சில சந்தர்ப்பங்களில் பொதுமக்களின் உயிர்களுக்கு இழப்புகள் அல்லது அவர்களுக்கு காயங்களையும் ஏற்படுத்தியமையால் தகுதியானதொரு விசாரணையின் பின்னர் ஒரு மனிதாபிமான சமிக்ஞையாக பொருத்தமான பரிகாரத்தின் விரைவான உதவிக்கு கவனம் அளிக்கப்படல் வேண்டும். இது நல்லிணக்கச் செயன்முறைகளில் நம்பிக்கையை ஏற்படுத்தும்.

***மோதல் பகுதிகளில் பொதுமக்களுக்கு உணவு மற்றும் மருந்துகள் உட்பட மனிதாபிமான நிவாரணங்களின் விநியோகம்.***

9.15 2009 இன் முற்பகுதிகள் வரை தமிழீழ விடுதலைப் புலிகளால் பிடித்து வைக்கப்பட்டிருந்த பொதுமக்களுக்கான உணவு விநியோகம், அகதிகளுக்கான போசனை உள்ளெடுத்தலுக்கு சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மட்டங்களுக்கு அண்ணளவாக ஏறத்தாழ ஓர் நியாயமான போதுமான மட்டத்தில் இருந்தன. இவை ஜனவரி 2009 வரை தரைமார்க்கமாக அனுப்பிய உணவுத் தொடரணிகள் மூலம் சாத்தியமானது. எவ்வாறாயினும், இந்த போதுமான கட்டங்கள் 2009 இன் பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாத முதற் பாதியில் மோதல்கள் தீவிரமடைய தொடங்கியதிலிருந்து குறைவடையக் காணப்பட்டதுடன், நந்திக்கடலுக்கு குறுக்காக ஒடுங்கிய புதுமாத்தளன் நிலப்பகுதியில் தமிழர் விடுதலைப் புலிகள் பிடித்து வைக்கப்பட்ட பெருமளவிலான மக்களுக்கு அத்தியாவசியமான வழங்கல்களை வழங்குவதற்கு கடல்மார்க்க விநியோகப் பாதையை அரசாங்கம் தேடுவதற்கு கட்டாயப்படுத்தியது. ஆணைக்குழுவின் முன்னுள்ள சான்றுகளின் படி, இந்த விநியோகங்கள் தொடரும் மோதல்களின் மத்தியில் மனிதாபிமான விநியோகங்களின் தொடர்ச்சியானதொரு பாய்ச்சலைப் பேணுவதில் கடுமையான ஒருங்கிணைத்தல் ஏற்பாடுகளின் சிரமங்களுக்கிடையிலும் மேற்கொள்ளப்பட்டன என்பது புலனாகின்றது.

9.16 முக்கியமாக இலங்கை அரசாங்கத்தின், குறிப்பாக அரசாங்க அதிபர்கள் மற்றும் பாதுகாப்பு படைகள் அதேபோன்று இறுதி யுத்த சூன்ய வலயங்களில் களத்தில் நின்று தன்னலம் கருதாத சேவைகளை வழங்கிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் உலக உணவுத்திட்டம் போன்ற சர்வதேச முகவர் அமைப்புகள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களின் காரணமாக பாதிக்கப்பட்ட பொதுமக்கள் எதிர்நோக்கிய நிலைமைகளைச் சீராக்குவதற்கு அப்போது நிலவிய சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் சாத்தியமான உயர்ந்தபட்ச அளவிலான உணவு விநியோகங்கள் கடல்மார்க்கமாக வழங்கப்பட்டமை ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

9.17 மோதல்களின் பல்வேறு தீவிரம் மற்றும் அத்தகைய சூழ்நிலைகளில் தெளிவாக காணப்படக்கூடிய விநியோகக் குறைபாடுகள் என்பவற்றினால் நிர்ப்பந்திக்கப்பட்ட முன்னொருபோதும் இல்லாத கட்டுப்பாடுகள் இருந்த போதிலும் தகுந்த உணவு விநியோகங்களுக்கு, தமிழர் விடுதலைப் புலிகளின் நடைமுறைகள் இருக்கின்ற மட்டுப்படுத்தப்பட்ட உணவு வகைகளின் ஒரு நியாயமான மற்றும் ஒப்புரவான விநியோகத்தை மட்டுப்படுத்தியது. இலங்கை அரசாங்கம் விசேடமாக அத்தியாவசிய வழங்கலுக்கான ஆணையாளர் நாயகம் மேலே குறிப்பிட்டவாறான சர்வதேச முகவர் அமைப்புக்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர் ஸ்தாபனங்கள் என்பன மோதல்களின் இறுதி வாரங்கள் பலவற்றின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு சாத்தியமான அதிகளவுக்கான வழங்கல்களை உறுதிப்படுத்துவதில் போற்றுதலுக்கான சேவைகள் மற்றும் உதவிகளை வழங்கின.

9.18 எவ்வாறாயினும் இந்த முயற்சிகளோடு ஆனவையாக இல்லாமல், குறிப்பாக தீவிரமடையும் மோதல்களுடன் தங்களது போசாக்குத் தேவைகளைத் திருப்திப்படுத்துவதற்கு உடன் கிடைக்கக் கூடியதாகவுள்ள போதுமான உணவு வழங்கல்கள் விடயத்தில் பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருந்தனர் என்பதே உண்மையாகும். பெப்ரவரி 2009 இன் பின்னர் நிலவியதாக காணப்பட்ட மிக மோசமான நிலைமைகள் மேலே உள்ள அத்தியாயம் 4 ல் விபரமாக தரப்பட்டுள்ளன.

9.19 அதன் முன்னுள்ள விடயங்களை ஆராய்ந்த பின்னர், செயற்படுவதிலான பெரும் ஏற்பாட்டுச் சிரமங்களின் மத்தியிலும் கூட, சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் ஒருமைப்பாடு என்றொரு உணர்வோடு, சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன், குறிப்பாக, மேற்குறிப்பிட்ட முகவர் அமைப்புகள் மற்றும் அதே போன்று சிவில் சமூகக் குழுக்கள் என்பவற்றுடன் இணைந்து இலங்கை அரசாங்கமும் சிக்குண்டிருந்த போது மக்களுக்கு உணவு மருத்துவ வழங்கல்கள் மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுத்தது என ஆணைக்குழு காண்கின்றது.

9.20 யுத்த சூனிய வலயங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளால் பணயக் கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டிருந்த பொதுமக்களின் வேறுபட்ட எண்ணிக்கையை தொடர்பாக அதன் முன்பாகவுள்ள உண்மையைக் குறிப்பிடுவதற்கும் ஆணைக்குழு விரும்புகின்றது. சம்பந்தப்பட்ட சிவிலியன் அதிகாரிகளிடமிருந்து ஆவணச்சான்றுடனான கணிப்பீடுகளை உறுதிப்படுத்துவதற்கு ஆணைக்குழு தன்னாலான சிறந்த முயற்சிகளை எடுத்த போதிலும் எந்தவொரு மூல ஆவணத்தையும் பெற்றுக் கொள்வது சாத்தியமாக இருக்கவில்லை. எவ்வாறாயினும் அத்தகைய ஆவணம் இல்லாமை, அச்சந்தர்ப்ப சூழ்நிலையின் கீழ் நடைமுறைச் சாத்தியமாக மேற்கொள்ளப்பட்டவற்றில் ஒரு தீர்மானமிக்க தாக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் உலக உணவுத்திட்டம் போன்ற சர்வதேச ஒத்துழைப்புடன் மேலே விபரிக்கப்பட்டவாறு இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட கடுமையான முயற்சிகள், ஒரு போரிடும் முறையாக பொதுமக்களை பட்டினி போடும் நோக்கத்திற்காக யுத்த சூனிய வலயங்களிலுள்ள பொதுமக்களின்

தொகையை குறைத்து காண்பிப்பதற்கு வேண்டுமென்றேயானதொரு உள்நோக்கத்தைக் கொண்டிருந்தது என எந்தவகையிலும் சாத்தியமாக அனுமானிப்பதற்கு தேவைப் படுத்தவில்லை.

*மருத்து வழங்கல்கள்.*

9.21 சாதாரண சூழ்நிலைகளின் கீழ் பொருத்தமாகும் இலட்சிய நிலை நியமங்களின் அனைத்துக் காரணிகள் (அத்தியாயம் 4, பிரிவு II இல் விபரிக்கப்பட்டவாறு) மீதானதொரு கவனம் கொள்ளுதலின பின் ஆணைக்குழு வரக்கூடியதற்கான ஒரேயொரு சாத்தியமான முடிவு, மருந்துகளுக்கானதொரு பற்றாக்குறை மற்றும் மருத்துவ வசதிகள் போதியதாக இல்லாதிருந்தமை என்பதாகும். எவ்வாறாயினும், இந்தக் காரணி மோதலின் தீவிரத்தின் மத்தியில் நிலவிய அசாதாரண சூழ்நிலையிலும் மற்றும் மோதல்கள் நடைபெற்ற இடங்களுக்கு வைத்தியசாலைகள் அமைந்திருந்த அருகாமை என்பவற்றின் சூழ்நிலையிலும் இட்டு நோக்கப்படல் வேண்டும்.

9.22 அதன் முன்னளிக்கப்பட்ட சான்றுகளின் தீர்மானமற்ற தன்மையால், மோதலின் இறுதி நாட்களின் போது மோதல் பகுதிகளில் பொதுமக்களுக்கான மருத்துவ வழங்கல்களின் விடயம், மனிதாபிமானக் கரிசனைகளைக் கொண்டிருப்பதால் மேலும் ஆராய்தல்களைத் தேவைப்படுத்தும் ஒரு விடயமாக உள்ளதென்பதை ஆணைக்குழுவும் அங்கீகரிக்கின்றது. அத்தகையதொரு ஆராய்தல் காயமடைந்த பொதுமக்கள் எண்ணிக்கை, காயங்களின் வகைகள், காயமடைந்த சிகிச்சையளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் மற்றும் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான தற்காலிக வைத்தியசாலைகளின் செயற்றிறன் போன்ற சம்பந்தப்படட அனைத்துக் காரணிகளையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் இவற்றுக்கெதிராகவே உண்மையான மருத்துவ வழங்கல்கள் மதிப்பிடப்பட முடியும்.

***சரணடைதல்/கைது என்பவற்றின் பின்னர் குற்றஞ்சாட்டப்படும் காணாமற் போதல்கள்.***

9.23 அதன் முன் மேற்கொள்ளப்பட்ட சாட்சிகளின் முறையீடுகள் தொடர்பில் (அத்தியாயம் 4 பிரிவு II இன் பந்திகள் 4.242 முதல் 4.259 வரை குறிப்பிடப்பட்டவாறு) குறிப்பிட்ட ஆட்கள் இராணுவப் பாதுகாப்பில் சரணடைவதை நேரடியாக கண்டதாக பல எண்ணிக்கையிலான மக்கள் தெரிவித்து சாட்சியமளித்ததையும், அத்தகைய குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளுக்கு அவசியமான புலன்விசாணையை மேற்கொள்வதுடன் அத்தகைய புலன்விசாரணைகள் இராணுவத்தின் தனிப்பட்ட உறுப்பினர்கள் தரப்பிலான ஏதேனும் சட்டவிரோத நடவடிக்கைக்கான சான்றை அளிக்குமாயின், சட்ட நடவடிக்கையை மேற்கொண்டு தவறு செய்தவர்களைத் தண்டிப்பது அரசின் தெளிவான கடமையென்பதை ஆணைக்குழு வலியுறுத்துதல் வேண்டும். இது தொடர்பில், உத்தியோகபூர்வ பாதுகாப்பில் சரணடைந்த பின்னர் காணமற்போனதாக ஒரு சம்பவம் நிரூபிக்கப்படுமிடத்து, அது குற்றவியல் விளைவுகளை ஏற்படுத்தும் ஒரு குற்றத்தை உருவாக்கும் என்பதையும் ஆணைக்குழு வலியுறுத்துதல் வேண்டும். இதனால், இந்த சம்பவங்களில் முழுமையானதொரு புலன்விசாரணையை ஆரம்பிப்பதும் மற்றும் தேவையானவிடத்து சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது முக்கியமானதொன்றாவதுடன் அவை சரணடைதல் செயன்முறைகளின் போதும் மற்றும் பொதுமக்கள் இராணுவம் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு கடந்து வரும் பொழுதும் ஒரு முன்னுதாரணமான விதத்தில் பெருமளவில் நடந்து

கொண்ட இராணுவத்தின் நற்பெயரையும் காப்பாற்றும், ஒரு சிலரின் அத்தகைய நடவடிக்கைகளினால் அந்நற்பெயர் களங்கபடுதல் கூடாது.

***தமிழீழ விடுதலைப்புலிகளின் நடத்தை***

9.24 தமிழீழ விடுதலைப் புலிகளாலான மனித உரிமைகளின் பாரிய மீறல்கள் மனித உரிமைகள் அத்தியாயத்திலும் மற்றும் இணைந்துள்ள பின்னிணைப்புகளிலும் விபரமாகக் கையாளப்பட்டுள்ளன.

9.25 தமிழீழ விடுதலைப் புலிகளால் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் மூலக் கோட்பாடுகளின் பாரிய மீறல்கள் அத்தியாயம் 4 இன் பிரிவு II இல், குறிப்பாக யுத்த சூன்ய வலயங்கள் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், தீர்மானிக்கும் அவதானங்களின் மூலம், பின்வருவனவற்றின் மேல் கவனத்தைத் திருப்புவது, ஆணைக்குழு மீதான கடமையாகிறது.

அ. தங்களது இராணுவ உபாயத்தை முன்னேற்றுவதற்கு பொதுமக்களை மனிதக் கேடயங்களாக உபயோகித்தமை, அதனுடன் இணைந்ததாக;

ஆ. பொதுமக்கள் நிலைகள் மத்தியில் இராணுவ உபகரணங்களை அமைக்கும் செய்முறையும் மற்றும் உபயோகித்தலும்,

இ. பாதுகாப்பான பகுதிகளுக்கு தப்பிச் செல்வதற்கு எத்தணித்த பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடாத்தியமை.

ஈ. மோதல்களின் இறுதிக் கட்டங்களில் கூட சண்டையில் ஈடுபடுத்துவதற்காக இளம் சிறுவர்களை கட்டாயமாக படைகளில் சேர்த்தமை,

உ. பொதுமக்கள் ஆபத்துகளுக்கு முகங் கொடுக்க நேரிடும் எனத் தெரிந்தும் மோதல் வலயங்களுக்கு வெளியேயும் கூட கண்ணிவெடிகள் மற்றும் மாற்றியமைக்கப்பட்ட வெடிக்கும் பொருட்களை புதைத்தமை,

ஊ. அவர்களது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான துணைச் சேவைகளை வழங்குவதற்காக பொதுமக்களைப் பலவந்தமாக உபயோகித்தமை, அதன் மூலம் பொதுமக்கள் மற்றும் போராளிகள் என்பவர்களுக்கிடையில் வேறுபடுத்தி அடையாளப் படுத்துவதை குறிப்பாக சனநெருக்கடி மிகுந்த இறுதி யுத்த சூன்ய வலயங்களில் அநேகம் சாத்தியமற்றதாக்கியமை, மற்றும்

எ. தற்கொலைத் தாக்குதல்கள், மேற்கொள்வதைத் தொடர்ந்து உபயோகித்து அப்பாவிப் பொதுமக்கள் உயிர்களுக்கு இழப்பு ஏற்படுத்தியமை,

இவையனைத்தும், சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் கோட்பாடுகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகலாளான அப்பாட்டமான கரிசனையின்மையைக்கு ஆதாரமாக உள்ளது மட்டுமன்றி, பொதுமக்கள் உயிர்களுக்கு மதிப்பளிக்காத ஒரு எதிரியுடன் போராடுகையில் ஒரு இராணுவ முன்னேற்றத்தை ஏற்படுத்துவதில் இராணுவம் முகங்கொடுத்த சவால்களையும் கூட சுட்டிக்காட்டுகிறது.

9.26 வழக்கு தொடர்வதற்கான முதல் தோற்றச் சான்றுகளை புலன்விசாரணைகள் வெளிப்படுத்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களுக்கு எதிராக

குற்றங்களைச் சாட்டுவதில் முக்கியமான மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டக் கோட்பாடுகளின் மீறல்களின் முறையான விபரங்கள் கவனத்திற்கு எடுக்கப்படல் வேண்டும். அதன் மூலம் அத்தகைய பாரிய தன்மையிலான குற்றங்களுக்கு ஈடான தண்டனை வழங்கப்பட முடியும்.

***உள்நாட்டு மோதல்களுக்கு சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் பிரயோகங்கள் மீதான அவதானிப்புகள்.***

9.27 அரசு தரப்பல்லாத ஆயுதக் குழுக்கள் ஈடுபடுகின்ற உள்நாட்டு மோதல்களைக் கட்டுப்படுத்தும் சட்டக் கட்டமைப்பின் முதிர்ச்சியடையாத தன்மையினால், பொதுமக்களுக்கு வழமையாக அளிக்கப்பட்ட பாதுகாப்புக்கு, அரச தரப்பல்லாத ஆயுதக் குழுக்களினால் சுயநலத்துடனான உதாசீனப்படுத்தல், உதாரணத்துக்கு போர் உபாயங்களுக்குள் ‘பாதுகாப்பு வலயங்களை’ ஒருங்கிணைத்தல் மற்றும் பொதுமக்களை மனிதக் கேடயங்களாக உபயோகித்தல் போன்ற அத்தகைய நிலைமைகளில் தொடர்ச்சியாக எழுகின்ற பிரச்சினைகள், அரசுகள் மற்றும் அரசு தரப்பில்லாத ஆயுதக்குழுக்கள் ஈடுபடுகின்ற உள்நாட்டு மோதல்களுக்கு பிரயோகமாகின்ற நடைமுறையிலுள்ள சட்டக் கட்டமைப்பில் தெளிவற்ற பகுதிகளை விட்டு வைக்கின்றன. இதன் விளைவாக, ‘பாதுகாப்பு வலயங்களிற்குள்’ அரசு தரப்பல்லாத ஆயுதக் குழுக்களினால் ஸ்தாபிக்கப்பட்ட இராணுவ நிலைகள் போன்ற போர் உத்திகளை இல்லாமல் செய்வதைத் தேவைப்படுத்தும் நிலைமைகளைக் கையாள்வதற்கான எதிர் நடவடிக்கைகளை அரசு எடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படும் பொழுது பொதுமக்களே ஆபத்திலிடப்படுகின்றனர்.

9.28 இலங்கையின் முன்னொருபோதும் இல்லாத அனுபவம் வெளிக்காட்டியவாறு, பொதுமக்களுக்கான பாதுகாப்பை வழங்குவதற்காக பேச்சுவார்த்தை மூலமாக யுத்த சூன்ய வலயங்களின் அறிவித்தலுக்கு, எவ்விதத்திலும் இணங்கி கொள்வதற்கு உத்தேசம் கொண்டிராததும் மற்றும் ஒரு தலைப்பட்சமாக அரசினால் அவை பிரகடனப்படுத்தப்பட்ட பின் அவற்றை தமது போர்த் தந்திரத்தையும், செயற்பாடுகளையும் முன்னெடுப்பதற்கு அரச தரப்பல்லாத ஆயுதக் குழுக்கள் உபயோகிக்குமிடத்து (உதாரணத்திற்கு, யுத்த சூன்யவலயத்தினுள், பொதுமக்களை மனிதக் கேடயங்களாக உபயோகித்தல்) அரச மற்றும் களத்திலான கட்டளை அதிகாரிகள் ஒரு புறத்தே பொதுமக்களைப் பாதுகாப்பதற்கும், மறுபுறத்தே யுத்த சூன்ய வலயத்திலிருந்து எழும் எதிரியின் சூட்டு வலுவை நிறுத்துவதற்குமான இக்கட்டை எதிர்நோக்கினர்.

9.29 ஒரு தலைப்பட்சமான ஒரு யுத்த சூன்ய வலய பிரகடனத்தின் மூலம், தந்திரோபாய நோக்கங்களுக்காக பொதுமக்கள் சூழ்ந்துள்ள பகுதியின் மத்தியில் ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கானதொரு வாய்ப்பை இலங்கை அரசாங்கம் அறியாமல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கியதா, என்றொரு விவாதத்திற்கு இலங்கை அனுபவம் உண்மையில் இட்டுச் சென்றது.

9.30 யுத்த சூன்ய வலயங்களின் புனிதத்தைப் பாதுகாப்பது தொடர்பிலான சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களுடன் இணங்குவது தொடர்பில் அரசு அல்லாத ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளை உறுதிப்படுத்தும் கேள்வி உட்பட, ஓர் பெரும் எண்ணிக்கையிலான கடினமான பிரச்சனைகள் எழுகின்றன. உள்நாட்டு மோதல் நிலைமைகளில் வழக்கிலுள்ள சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களுக்கான சமகாலச் சவால்களுக்கு கவனம் செலுத்துவதில் அத்தகைய நிலைமைகளைக் கையாள்வதுடன் பொருத்தமான தரநியமங்கள் மற்றும் நடைமுறைகளின் உருவாக்கம் மிக அவசியமானதொரு தேவையாகின்றது.

9.31 அத்தியாயம் 4 இல் விபரிக்கப்பட்டவாறு, உள்நாட்டு மோதல்களினால் விடுக்கப்படும் அனைத்துச் சிக்கல்கள் மற்றும் சவால்களைக் கவனத்தில் கொண்டு, நாடுகளுக்கிடையிலான மோதல்களைக் கட்டுப்படுத்தும் சர்வதேச சட்டத்தின் பொதுக் கோட்பாடுகளில் உள்ளவாறு அரசுகள் மற்றும் அரசல்லாத ஆயுதக் குழுக்கள் என்பவற்றுக்கிடையிலான மோதல்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு சட்டக் கட்டமைப்பின் கவனமான நிர்மாணம், அரசல்லாத ஆயுதக் குழுக்களினால் சர்வதேச மனிதாபிமானச் சட்டக் கோட்பாடுகளுடனான கூடுதல் இணக்கப்பாட்டை உறுதிப் படுத்துவதற்கான பதிலை வழங்கக்கூடும். சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் பிரயோகத்துக்கான சமகாலப் பொருத்தத்தின் இந்த சிக்கலான விடயங்கள் நாடுகளின் சர்வதேச சமூகம் மற்றும் ஐக்கிய நாடுகள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சம்பந்தப்பட்ட சர்வதேச ஸ்தாபனங்களின் உடனடிக் கவனத்தைப் பெறுதல் வேண்டும், அதன் மூலம் உள்நாட்டு மோதல்களில் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் பிரயோகத்தில் தற்போதிருக்கும் இடைவெளியை நிரப்புவதற்கு பொருத்தமான சட்டச் சாதனங்கள் இடப்படும்.

9.32 இது, அப்பாவி மனித உயிர்களின் துன்பமான இழப்பை ஏற்படுத்திய இலங்கையின் 30 வருட நீண்ட மோதலில் இருந்து கற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தெளிவான பாடமாகும். இந்த அனுபவங்களிலிருந்து வரையப்பட்ட ஒரு பயனுறுதியான சட்டக் கட்டமைப்பை உருவாக்குவது மோதலின் அனைத்துப் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சர்வதேச சமூகம் கொண்டுள்ள ஒரு தெளிவான கடப்பாடாகும்.

***பாதிக்கப்பட்டவர்கள் பிரச்சினை மீதான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள்.***

9.33 பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மற்றும் தடுத்து வைக்கப்பட்டவர்கள் ஆகியோர்களினால் ஆணைக்குழுவின் முன் சமர்ப்பிக்கப்பட்ட நேரடிச் சாட்சியங்கள் மற்றும் ஏனைய சான்றுகளின் அடிப்படையில், மக்களுக்கு துன்பம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு பாதுகாப்பு படைகளால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் யுத்த சூன்ய வலயங்கள் உட்பட பொதுமக்கள் பகுதிகளில் பொதுமக்களுக்கு இறப்பு மற்றும் காயங்களை ஏற்படுத்திய துப்பாக்கிப் பிரயோகச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளமை தெளிவாகின்றது.

9.34 ஒரு மனிதக் கேடயத்தின் பின்னால் பாதுகாப்பைத் தேடும் தற்கொலைக் கலாச்சார அடிப்படையைக் கொண்ட ஓர் பயங்கரவாதக் குழுவை ஈடுகட்டுவதில் பாதுகாப்புப் படைகளால் முகங்கொடுக்கப்பட்ட சிக்கலான சவால்களை ஆணைக்குழு கண்டுணர்ந்து கொள்கின்றது. ‘உடலங்களைக் கணக்கெடுப்பதை விட உயிர்களைக் காப்பாற்றுவதே’ பாதுகாப்புப் படைகள் மற்றும் ஏனைய அதிகாரிகளினதும் முன்னுரிமை மற்றும் இயல்புணர்வாக இருந்தது என்பதையும் ஆணைக்குழு பாராட்டுகிறது. எவ்வாறாயினும், பிரதேசத்திலுள்ள சிவில் நிர்வாக அதிகாரிகளினாலோ அல்லது பாதுகாப்பு அதிகாரிகளினாலோ உத்தியோகபூர்வப் பதிவுகளோ அல்லது போரின் பின் பொதுமக்கள் பாதிப்புகள் பற்றிய ஒரு மதிப்பீடோ காணப்படவில்லை என்பதை ஆணைக்குழு கவலையுடன் கவனத்தில் கொள்கிறது. பாதுகாப்புப் படைகள் தங்களது சொந்தத் தரப்பில் பாதிப்படைந்தவர்களின் எண்ணிக்கையும் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் பாதிப்படைந்தவர்களது ஒரு மதிப்பீட்டையும் கொண்டிருந்த வேளையில், சுகாதார அமைச்சிடமிருந்தான தரவுகள் தவிர்ந்த பாதிப்படைந்த பல்வேறுபட்ட அமைப்புகள், ஊடக ஸ்தாபனங்கள் மற்றும் அதிகாரங்களினால் வெளியிடப்பட்டவை பாதிப்படைந்த பொதுமக்களின் பெரிதும் மாறுபட்ட எண்ணிக்கைக்கு வழிவகுத்தது.

9.35 சிவில் நிர்வாகம் அல்லது இராணுவம் ஆகிய இரண்டினதும் முறையான உறுதிப்படுத்தும் செயன்முறைகள் இல்லாத யதார்த்தம், பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கையாக மிகவும் அதிகரித்த தன்மையிலானதொரு ஊகத்தின் உறுதிப்படுத்தாத மேலோட்டமான பொதுப்படுத்தலுக்கு பங்களித்தது.

9.36 எவ்வாறாயினும், மோதல்களின் இறுதிக் கட்டத்தின் போது கணிசமான பொதுமக்கள் பாதிப்பு உண்மையில் ஏற்பட்டது. என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு நேரில் கண்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் அதற்கு முன்னாலுள்ள சான்றுகள் உள்ளன என்பது ஆணைக்குழுவின் கவனத்திற்குரிய கருத்தாகும். இது சூடுகளுக்கு இடையில் அகப்பட்டுக் கொண்டமை, தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களை இலக்கு வைத்து வேண்டுமென்றே துப்பாக்கி பிரயோகம் செய்தமை, அதேபோன்று மோதல் நிலைமையின் தீவிரங்கள், புவியியல் நிலப்பரப்பின் ஆபத்து, தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனிதக்கேடயங்களாக உபயோகித்தமை மற்றும் பயணக் கைதிகளை ஆபத்துக்களிலிருந்து வெளியேறுவதற்கு அனுமதியளிக்காமை என்பவற்றின் காரணங்களினால் ஏற்பட்டவையாக காணப்படுகின்றன.

9.37 ஆகையால், பின்வரும் நடவடிக்கைகளை ஆணைக்குழு பரிந்துரைக்கிறது:

அ. அவதானிப்பு 4.359 vi (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்ட குறித்த சம்பவங்கள் மற்றும் பொதுமக்கள் மீதான வேண்டுமென்றேயான தாக்குதல்கள் என்பவற்றை புலன்விசாரித்தல். புலன்விசாரணைகள் ஏதேனும் குற்றங்கள் புரியப்பட்டதாக வெளிப்படுமிடத்து, குற்றமிழைத்தவர்கள் மீது வழக்கு தொடருவதற்கு/தண்டனை வழங்குவதற்கு பொருத்தமான சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

ஆ. பொதுமக்களுக்கான உயிரிழப்பு மற்றும் காயங்கள், அதேபோன்று மோதல் காலத்தின் போதான சொத்துக்களின் சேதம் என்பவை பற்றிய தன்மை மற்றும் சந்தர்ப்பங்களை உறுதிப்படுத்துவதற்கு நாட்டின் அனைத்தும் பகுதிகளிலுமுள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்களை உள்ளடக்கிய ஒரு தொழில்சார் முறையில் வடிவமைக்கப்பட்ட குடித்தன மதிப்பாய்வொன்றை நடாத்தல் வேண்டும்.

***சனல் 4 காணொளி மீதான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள்***

9.38 சனல் 4 காணொளி தொடர்பாக அத்தியாயம் 4 இன் பிரிவு V இல் கொண்டிருந்த கருத்துப்பாடுகளின் குறிப்பிடுதல்களுடன் மேற்கொள்வதற்கு பின்வரும் அவதானிப்புகள்/ பரிந்துரைகளை ஆணைக்குழு கொண்டுள்ளது.

அ. காணொளி உள்ளடங்கியுள்ள சாட்சிகள் 'உண்மையானவை' அல்லது 'அரங்கேற்றப்பட்டவை' என எவ்வகையிலானவையாக இருப்பினும் காண்பிக்கப்பட்ட சம்பவங்கள் உண்மையில் கொடூரமானவை மற்றும் அதிர்ச்சி அளிப்பவையாகும்.

ஆ. காணொளி செயற்கையாக உருவாக்கப்பட்ட சம்பவங்களை ஆராய்வதாக இலங்கை அரசாங்கம் உறுதியாக குறிப்பிட்ட வேளையில் ஐக்கிய நாடுகளின் விசேட விசாரணை அறிக்கையாளர்களினால் அமர்த்தப்பட்ட தொழில்நுட்ப நிபுணர்கள் காணொளியானது கைதிகளாக பிடிக்கப்பட்டவர்கள் போலத் தோன்றும் ஆட்கள் சம்பந்தப்பட்ட விசாரணைகளற்ற படுகொலை மற்றும் பாலியல் தாக்குதல் என்பவற்றுக்கு சாத்தியமான முதல் தோற்ற சான்றுகளை வழங்குவதாக வலியுறுத்தினர். எவ்வாறாயினும், அரசாங்கம் அதே போன்று விசாரணை அறிக்கையாளரின் நிபுணர்கள் ஆகிய இருதரப்புகளும் காணொளியில் தொழில்நுட்ப

ரீதியான பல தெளிவற்ற தன்மைகள் இருப்பதாக சுட்டிக்காட்டின என்பதுடன், அவை இன்னமும் தெளிவுபடுத்தப்படாமல் உள்ளது.

இ. சுயாதீன நிபுணர்களான கலாநிதி சத்துர டி சில்வா மற்றும் பேராசிரியர் இ.ஏ.யபான்டிஸ் ஆகியோர்கள் முன்வைக்கப்பட்ட தொழில்நுட்ப விடயங்கள் மற்றும் தடயவியல் கேள்விகள் காணொளியின் உண்மைத் தன்மை பற்றி, விசேடமாக காணொளியில் இலத்திரனியல் ரீதியான மாற்றங்கள் மற்றும் செயற்கையான ‘இரத்த தோற்றப்பாடு’ உருவாக்கம் என்பவற்றின் சாத்தியம் குறித்தான மேலும் முக்கியமான சந்தேகங்களை எழுப்பியது.

ஈ. ஒளிபரப்புக் காணொளியில் ஒரு பிரதி கிடைக்காமை, அத்தகைய தொழில்நுட்ப ஐயப்பாடுகளின் தீர்மானிக்கும் விளக்கங்களைக் கண்டுபிடிப்பதில் உதவவில்லை.

உ. விளைவாக, காணொளி மற்றும் அதன் உள்ளடக்கங்கள் என்பவற்றின் உண்மைத் தன்மை பற்றி கணிசமான சந்தேகத்தை ஏற்படுத்தும் தீவிரமான தன்மை கொண்ட குழப்பத்தை ஏற்படுத்தும் தொழில்நுட்ப மற்றும் தடயவியல் கேள்விகளை ஆணைக்குழு கண்டது. உடலங்களில் காணப்படும் காயங்கள் உபயோகிக்கப்பட்ட ஆயுதங்கள் மற்றும் நெருக்கமான தூரத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தின் விளைவாக ஏற்படும் காயங்கள் என்பவற்றுடன் முரண்பட்டு காணப்படுவதும் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் யாரேனுமொருவர் இந்த காட்சிகளை பதிவு செய்து அல்லது இவற்றை உருவாக்கி சம்பந்தப்பட்ட ஒளிபரப்பாளருக்கு கிடைக்கச் செய்துள்ளார் என்பதையும் ஆணைக்குழு குறிப்பிடுவதற்கு விரும்புகிறது. ஆணைக்குழுவினால் ஈடுபடுத்தப்பட்ட நிபுணர் காணொளியின் காட்சிப்பகுதிகள் ஓர் இயற்கையான சுற்றுச் சூழலில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக காணப்படுவதையும், மற்றும் பாதிக்கப்பட்டவர்களாகச் சொல்லப்படும் சில உடலங்கள் பௌதீக ரீதியான அல்லது இலக்க முறையிலான ‘மாற்றியமைக்கும் வேலைப்பாடுகளைக்’ கொண்டிருக்கவில்லையென்பதை அவதானிக்கிறார்.

ஊ. மேலும் விரிவான தகவல்களை வழங்குவதற்கு ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப் பட்ட வேண்டுகோளுக்கு ஒளிபரப்பாளர் சாதகமான முறையில் பதிலளிக்கவில்லை என்பதற்கு ஆணைக்குழு கவலை தெரிவிக்கின்றது. இந்த சம்பவம் குறித்தான உண்மைகளை ஸ்தாபிப்பதற்கு இந்தக் காணொளி காட்சிகளை தொலைக்காட்சி நிலையங்களுக்கு வழங்கிய ஸ்தாபனங்களினாலும், மற்றும் இந்த காணொளியை ஒளிபரப்பிய தயாரிப்பாளர்/ஒளிப்பரப்பாளர் ஆகியோர்களினலான ஒத்துழைப்பும் அத்தியாவசியமாகும்.

9.39 இருக்கின்ற சான்றுகளின் அடிப்படையிலும் மற்றும் மேற்குறிப்பிட்டவற்றை கவனத்தில் கொண்டும் இந்த விடயத்தை உண்மையை நிலைநாட்டுவதற்கும் அல்லது காணொளி காட்சிகளில் இருந்து வேறுவகையில் எழும் குற்றச்சாட்டுகளுக்கு ஓர் சுயாதீன புலன்விசாரணையை முன்னெடுப்பதற்கும் ஆணைக்குழு பரிந்துரைக்க விரும்புகிறது.

9.40 இரண்டு காரணங்களுக்காக இந்த நடவடிக்கை அவசியமானதும் மற்றும் அவசரமானதுமென ஆணைக்குழு கருதுகின்றது.

அ. முதலாவதாக, காட்சிகளை வழங்கிய தகவல் அறிந்தவர்களாலும் மற்றும் திரு.அல்ஸ்ரன் மற்றும் திரு.ஹெய்ன்ஸ் ஆகியோர்களினால் நியமிக்கப்பட்ட நிபுணர்களாலும் கோரப்பட்டவாறு, காணொளி கைதிகளாக பிடிக்கப்பட்டிருப்பவர்கள்

மற்றும் வன்புணர்ச்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் சாத்தியமானவர்களின் விசாரணைகள் அற்ற படுகொலைகளின் உண்மையான சம்பவங்களின் சாட்சியங்களை பிரதி பலிக்கின்றன. அவை தெளிவான சட்டவிரோத நடவடிக்கைகளாததால் புலன் விசாரணை மேற்கொண்டு குற்றமிழைத்தவர்கள் மேல் சட்ட நடவடிக்கை எடுப்பது அவசியமாகும். அத்தோடு, இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாட்டை பாதுகாத்த படைவீரர்களின், குறிப்பாக, சண்டைகளின் போது மிகவும் மனிதாபிமானற்ற உத்திகளை உபயோகித்ததாக பரவலாக கண்டனம் செய்யப்பட்ட பயங்கரவாத குழுவிற்கு எதிராக சுத்தமாகவும் மற்றும் தொழில்சார் முறையில் தங்கள் போர் நடவடிக்கைகளை மேற்கொள்கையில் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான படை வீரர்களின் நற்பெயருக்கான களங்கத்தை நீக்கி, அவர்களது கௌரவம் மற்றும் தொழில்சார் மதிப்பையும் காப்பாற்றுவதும் அரசாங்கத்தின் கடப்பாடாகும். ஒரு சிலரின் ஏதேனும் குற்றங்கள் இருப்பின், அவை சேவையில் சிறந்த பாரம்பரியத்தை நிலைநிறுத்திய பலரின் கௌரவத்திற்கு அபகீர்த்தியை கொண்டுவருவதற்கு அனுமதித்தல் கூடாது.

ஆ. மறுபுறத்தே காணொளி செயற்கையாக உருவாக்கப்பட்டோ அல்லது நிபுணர்கள் பலர் வலியுறுத்துமாற்போல சம்வங்கள் அரங்கேற்றப்பட்டிருப்பதாகவே இருப்பின், விடயம் மிகவும் கடுமையாவதுடன், இந்த விடயத்தில் உண்மைகளை நிலைநாட்டுவதும், அதே அளவிற்கு கட்டாயமானதாகின்றது. காணொளியில் உண்மைத் தன்மை மீது தெரிவிக்கப்பட்ட சில முக்கியமான சந்தேகங்களை ஆணைக்குழு பகிர்ந்து கொள்வதுடன் அவை உண்மையாக இருக்கும் பட்சத்தில் அந்த காணொளியை உருவாக்கிய எவராயினும், மற்றும் அதனை ஒளிபரப்பிய ஸ்தாபனமும் முற்றிலும் தவறான தகவல்களின் ஒரு தீவிரமான தூண்டுகளுக்கு பொறுப்பானவர்களாக நிறுத்தப்படல் வேண்டுமென வலுவாக உணர்கிறது. அத்தகைய நடத்தை இலங்கை மக்களுக்கும் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து அப்பாவி உயிர்களைப் பாதுகாப்பதற்காக தொழில்சார் முறையில் சண்டையிட்டும் மற்றும் தங்கள் உயிர்களைப் அர்ப்பணித்த படைவீரர்களுக்கும் பெரும் அவப்பெயரையும், அநீதியையும் ஏற்படுத்தும். அதே போன்று, கருத்து வெளியிடும் சுதந்திரத்தின் கருதுகோளுக்கான ஓர் அடியாகவும் பிரதிபலிக்கும். இத்தகைய நடவடிக்கைகள், இலங்கையில், நல்லிணக்கம், ஆறுதல்படுத்தல் மற்றும் மீள்நிர்மாணம் என்பவற்றுக்கான ஒரு சாத்தியமான செயன்முறையை முன்னெடுத்து, பலப்படுத்தும் உள்நாடு மற்றும் சர்வதேசம் ஆகிய இரண்டினதும் தற்போதைய முயற்சிகளுக்கான பாதையில் மோசமான பாதிப்புகளையும் பெரும் தடைகளையும் இடுமென ஆணைக்குழுவும் கரிசனை கொள்கிறது.

9.41 ஆகையால், உண்மையை நிலைநாட்டும் நோக்கில் அல்லது இந்த குற்றச்சாட்டுகளுக்கு நாட்டின் சட்டங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுப்பதற்குமாக ஒரு சுயாதீனப் புலன்விசாரணையை இலங்கை அரசாங்கம் முன்னெடுப்பதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. அதே போன்று தகவல்கள் மற்றும் தகவலளிப்பவர்களின் இரகசியத்தன்மை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் வசதியளிப்பதற்குமாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமென ஆணைக்குழு உணர்கிறது. இந்தப் பணிக்கு வசதியளிப்பதற்கு அவசியமான தகவல்களை அளிப்பதன் மூலம், சம்பந்தப்பட்ட அனைவரையும், விசேடமாக மூலக் காட்சிகளை வழங்கிய நிறுவனங்கள் மற்றும் ஒளிபரப்புச் செய்த ஸ்தாபனம் என்பவற்றை, அவர்களது முழுமையான ஒத்துழைப்பை அளிப்பதற்கு ஆணைக்குழு வலியுறுத்தி வேண்டிக் கொள்கிறது.

## *அத்தியாயம் ஐந்து : மனித உரிமைகள் மீதான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள்.*

### *பொதுவானவை*

9.42 பொது அமர்வுகள் மற்றும் மோதல் பகுதிகளிலான அதன் கள விஜயங்களின் போதும், மோதல்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் என்பவற்றின் மீறல்களைக் குற்றம் சாட்டி ஆணைக்குழுவின் முன் பெருந்தொகையான முறையீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இவை கடத்தல்கள், கட்டாய அல்லது தன்னிச்சையில்லாத காணாமற் போதல்கள், எதேச்சாதிகாரமாக தடுத்து வைத்தல்கள், பேச்சு, நடமாடுதல், ஒன்றிணைதல் என்பவற்றுக்கான சுதந்திரத்தின் மீறல்கள், மதச் சுதந்திரம் மற்றும் ஊடக சுயாதீனத்திற்கான சுதந்திரம் போன்றவற்றின் மீறல்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. உள்ளக இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகள் மற்றும் பெண்கள், சிறுவர்கள் மற்றும் உடல் ஊனமுற்றவர்கள் போன்ற இடராபத்துக் கொண்ட குழுக்கள் தொடர்பான பிரச்சனைகள் மீதும் முறையீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த மனித உரிமைகள் மீதான அதன் பரிந்துரைகள் நல்லிணக்கச் செயன்முறைக்கு மிகவும் முக்கியமானவை என ஆணைக்குழு கருதுகிறது.

### *காணாமற் போன ஆட்கள், காணாமற் போதல்கள் மற்றும், ஆட்கடத்தல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள்.*

9.43 பொது அமர்வுகள் மற்றும் மோதல் பகுதிகளிலான அதன் கள விஜயங்களின் போது, மோதல்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை, உரிமைகள் மற்றும் சுதந்திரம் என்பவற்றின் மீறல்களைக் குற்றஞ்சாட்டி மேற்கொள்ளப்பட்ட அதிகளவு எண்ணிக்கையிலான முறையீடுகளால் ஆணைக்குழு அதியதிர்ச்சிடைந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆட்கடத்தல்கள் மற்றும் காணாமற் போதல்களின் ஓர் கணிசமான எண்ணிக்கையும் கூட ஆணைக்குழு செவிமடுத்து, மேற்கொள்ளப்பட்ட முறையீடுகளில் பெரும் எண்ணிக்கையிலானவை ஆட்கடத்தல்கள், சட்டவிரோதக் கைதுகள், எதேச்சாதிகாரமான தடுத்து வைத்தல்கள் மற்றும் தன்னிச்சையில்லாத காணாமற் போதல்கள் என்பவற்றினால், சில சமயங்களில் வருடக் கணக்கில் இருக்குமிடம் தெரியாதவர்கள் தொடர்பானவையாக இருந்தன.

9.44 முறையீடுகளைச் மேற்கொண்ட பலரும், காணாமற் போனதாகக் குற்றஞ்சாட்டப்படும் சம்பவங்களிலான நிச்சயமான நடவடிக்கைகள் அதே போன்று தடுப்பு முறைமைகள் என்பன நல்லிணக்க செயன்முறையில் முக்கியமானதொரு தாக்கத்தைக் கொண்டிருக்கும் என ஆணைக்குழுவின் மேல் நம்பிக்கை கொண்டனர். முறையீடுகள் மேற்கொள்ளப்பட்ட போது, இத்தகைய சம்பவங்கள் மீளவும் நடைபெறாதிருப்பதற்கு கடந்த கால அனுபவங்களிலிருந்தான பாடங்களை உறுதிப்படுத்துவதற்கான அடிப்படைத் தேவையின் மீது மீண்டும் மீண்டுமான நினைவூட்டுதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

9.45 முறையீடுகளை மேற்கொண்ட பொதுமக்கள் மத்தியில் குற்றப்புலனாய்வுகள், சட்ட அமுல்படுத்தல் மற்றும் பொலிஸ் நிர்வாகம் என்பன மிகவும் மோசமான முறையில் அரசியல் தலையீடுகளால் பாதிக்கப்பட்டு அதன் விளைவாக குற்றவியல் நீதிமுறைமையில் ஒரு நம்பிக்கையிழப்பை ஏற்படுத்தியுள்ளதாக பலமான கரிசனை உள்ளது.

9.46 மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகள் உட்பட, பொது அமர்வுகள் மற்றும் கள விஜயங்களின் போது, ஆட்கடத்தல்கள், கட்டாயமான அல்லது தன்னிச்சையின்றிய காணாமற் போதல்கள் மற்றும் எதேச்சாதிகாரமான தடுத்து வைத்தல்கள் குற்றச்சாட்டுக்கள்

குறித்து மேற்கொள்ளப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான முறையீடுகளால் ஆணைக்குழு அதிர்ச்சியடைந்து, பல சந்தர்ப்பங்களில், பொலிஸ் நிலையம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பவற்றில் இவற்றுக்கு முதலிலேயே முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. சில சம்பவங்களில், முன்னைய விசாரணை ஆணைக்குழுக்களுக்கு சமர்ப்பணங்ளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இருந்தும், நெருங்கிய இரத்த உறவினர்கள் காணாமல் போன பேர்கள் பலரினதும் இருப்பிடங்கள் இன்னமும் தெரியவில்லை என தொடர்ந்தும் முறையிடுகின்றனர். ஆகையால், இந்தக் குற்றச்சாட்டுக்கள் புலன்விசாரணை செய்யப்பட்டு குற்றமிழைத்தவர்கள் நீதியின் முன்கொண்டு வரப்படுவதை உறுதிசெய்வறத்கு சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளைப் பணிப்பதற்கான கடப்பாட்டை அரசாங்கம் கொண்டுள்ளது.

9.47 சரணடைதல் அல்லது கைது மூலம் அரசாங்க அதிகாரிகளால் கட்டுக்காவலிற்கு எடுக்கப்பட்ட நபரெவரினதும் பாதுகாப்பு மற்றும் பத்திரமான தன்மை என்பவற்றை உறுதிப்படுத்துவது அரசின் பொறுப்பாகும் என்பதை ஆணைக்குழு வலியுறுத்துவதற்கு விரும்புகிறது.

9.48 காணாமற் போன ஆட்களின் பிரச்சினை மீது கவனம் செலுத்துவதற்கான விரிவானதொரு அணுகுமுறை அவசரத்துக்கானதொரு விடயமாக கண்டறியப்படல் வேண்டும். அன்றேல் அது ஏதேனும் உள்ளினைந்ததும் மற்றும் நீண்ட கால நல்லிணக்கச் செயன்முறைகளில் தீவிரமானதொரு தடையை இடும். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து கடந்த காலத்திலான காணாமற் போதல் சம்பவங்கள் மற்றும் அவற்றின் மீதான புலன்விசாரணை முயற்சிகள், இணைந்ததாக, இந்த விடயம் குறித்து கவனம் செலுத்துவதற்கும் மற்றும் எதிர்காலத்தில் இவை போன்ற சம்பவங்கள் நிகழாதிருப்பதை தடுப்பதற்கு ஒரு விசேட பொறிமுறையை முன்னைய ஆணைக்குழுக்கள் பரிந்துரைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்தப் பரிந்துரைகள், மனித உரிமைகளின் பின்னணிச் சூழலில் எழுந்துள்ளவையாகவும் அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்களினால் அமுல் படுத்தப்படாது விட்டமையினாலும் இந்தத் தீவிரமான பிரச்சினை மீது கவனம் செலுத்துவதற்கு உதவுவதினால், உடனடியான அமுல்படுத்தலை அவை அவசியமாக்குகின்றன. முன்னைய ஆணைக்குழுவின் அந்த முக்கியமான பரிந்துரைகளுக்கு பயனுறுநிலை அளிப்பதற்கு தொடர்ச்சியாகத் தவறுவது விமர்சனங்கள் எழுவதை விளங்கிக் கொள்ளத்தக்கதாக்குவதுடன் அரசாங்கம் நியமிக்கும் ஆணைக்குழுக்கள் தொடர்பில் ஐயப்பாட்டுடன் நம்பிக்கையின்மையைத் தோற்றுவிக்கும் என்பதுடன் அத்தகையதொரு நிலையிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் தப்புவதற்கு முடியாது.

9.49 காணாமற் போன ஆட்களின் உறவினர்கள், அவர்களது அன்பிற்குரியவர்களின் இருப்பிடங்களை அறிந்து கொள்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளார் என்பதை ஆணைக்குழுவும் வலியுறுத்துகின்றது. அத்தகைய ஆட்களுக்கு என்ன நடைபெற்றது என்பது பறிய உண்மையை அறிவதற்கும் மற்றும் விடயத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான உரிமையையும் அவர்கள் கொண்டுள்ளனர். நல்லிணக்கம் என்பது ஒரு செயன்முறையாகும். காணாமற்போனவர்கள் மோதலில் பலியானவர்களாக அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தில் பலியானவர்களாக என யாராக இருப்பினும் அவர்கள் பற்றிய தேடுதலை முடிவுறுத்துதல் என்பது நெருங்கிய உறவினர்களுக்கு நீண்டதும் சிக்கலானதுமான பயணத்தில் கடினமான உணர்வு பூர்வமான முதலாவது படியாகும். இது, இழப்பீடு உட்பட பொருத்தமான சட்ட நிவாரணங்களை அவர்கள் நாடுவதற்கும் இயலச் செய்யும்.

9.50 சம்பந்தப்பட்ட முகவரமைப்புகளுடன், விசேடமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் காணாமற் போனவர்கள் எங்கேயுள்ளனர் என்பதை தேடிக் கண்டு பிடிப்பதற்கும் அவர்களை குடும்பத்துடன் மீள ஒன்றிணைப்பதை உறுதிப்படுத்துவதற்கும் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளால் அனைத்து முயற்சிக்கும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இந்த விடயம் தொடர்பில் ஏற்படும் முன்னேற்றங்கள் குறித்து குடும்பங்கள் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

9.51 பிரச்சினையின் சிக்கலான தன்மை, அளவு மற்றும் காணாமற் போன ஆட்களின் எண்ணிக்கை என்பவற்றைக் கருத்தில் கொண்டும் மற்றும் சம்பந்தப்பட்ட புலன் விசாரணைக்கு எடுக்கும் கால அளவின் தன்மையையும் கவனத்தில் கொண்டு, காணாமற் போனதாகக் குற்றஞ்சாட்டப்படும் சம்பவங்களை புலன்விசாரணை செய்வதற்கும் மற்றும் பொருத்தமான வகையில் குற்றவியல் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஏதுவாக சட்டமா அதிபருக்கு சான்றுகளை வழங்குவதற்குமாக புலன்விசாரணைகளுக்கென விசேட ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படல் வேண்டுமென ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. இந்த ஆணையாளரின் அலுவலகம், புலன்விசாரணைகள் மற்றும் சட்டநடவடிக்கைகளுக்கு அவசியமான தகவல்களைத் திரட்டி அவற்றை படிமுறைப்படுத்துவதற்கு அனுபவமிக்க புலன் புலன்விசாரணையாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இந்தப் பொறிமுறை வெவ்வேறுபட்ட அமைப்புகளால் தற்போது பேணப்பட்டு வரும் காணாமற் போன ஆட்கள் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் ஒருங்கிணைத்து, தேசிய மட்டத்தில், தரவுகள் சேகரிப்பின் ஒரு மையப்படுத்திய முறையை வடிவமைத்தல் வேண்டும்.

9.52 இறப்புச் சான்றிதழ்கள் மற்றும் அவசியமானவிடத்து நிதிரீதியான இழப்பீடு என்பன, பொருத்தமான சர்வதேசத் தராதரங்களை கவனத்தில் கொண்டு முன்னுரிமைக்கானதொரு விடயமாகக் கவனம் கொள்ளப்படல் வேண்டும். இது விடயத்தில், நபரொரவர் காணாமற் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டும், அவர் உயிருடனிருந்தால் அவரைப் பற்றி இயல்பாகக் கேட்டறிந்திருக்கக் கூடியவர்களுக்கு, அவரது இருப்பிடம் பற்றிய தகவல்கள் எதுவும் ஒரு வருட காலத்துக்கு மேலாகத் தெரியாதிருந்தும் மற்றும் அவரது காணாமற் போதல் இலங்கையில் நிகழ்ந்த ஏதேனும் பயங்கரவாத அல்லது நாசகார செயற்பாடு அல்லது உள்நாட்டுக் கலவரங்கள் என்பவற்றின் காரணத்தினாலானதாக அமைந்திருப்பின், அவரின் நெருங்கிய இரத்த உரித்தான உறவினர் அந்நபரின் ஒரு இறப்பும் சான்றிதழுக்கு விண்ணப்பிக்க முடியுமெனும் ஏற்பாடுகளை அளிக்கும் இறப்புகள் பதிவுச் சட்டத்திற்கான அண்மைய திருத்தத்தையும் ஆணைக்குழு கவனத்தில் கொள்கிறது. இந்த சட்டத்தின் பயனுறுதியான அமுல்படுத்தலுக்கு அவசியமான அனைத்து ஏற்பாடுகளும் நிர்வாக மட்டத்தில் ஒரு அறிவிக்கப்பட்ட கால ஏற்பாட்டினுள் மேற்கொள்ளப்படல் வேண்டும். குறிப்பாக, ஊடகங்கள் மற்றும் கிராமசேவகர்கள் போன்றவர்களினூடாக விசேடமாக மோதல்களினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், இந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் நடைமுறைகள் மற்றும் நிவாரணங்களைப் பெறுவதற்கு வசதியளிக்கும் முகமாக சட்டத்தின் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கு போதுமான விளம்பரம் அளிக்கப்படல் வேண்டும்.

9.53 உத்தியோகபூர்வ பதிவுகள் எதுவுமின்றி கட்டுக்காவலில் எடுக்கப்பட்ட ஆட்கள் தொடர்பான ஒரு தொகையான குற்றச்சாட்டுக்களை ஆணைக்குழு செவிமடுத்தது. ஆதலால், சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளால், ஆட்களை அவர்களது கட்டுக்காவலில் எடுக்கும் பொழுது, கைது தொடர்பான ஒரு உத்தியோகபூர்வ பற்றும்சீட்டை வழங்குதல் மற்றும் தடுத்து வைக்கப்படும் இடத்தின் விபரங்களை வழங்குதல் போன்ற பொருத்தமான சட்ட ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்படல் வேண்டுமென ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

9.54 பிரயோகமாகும் சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கைகளில் இலங்கை ஏற்றுக் கொண்ட அதன் கடப்பாடுகளுக்கு இணங்கியதாகவும் மற்றும் அதன் தேசிய கட்டங்களின் தேவைப்பாடுகளுக்கு அமைவாகவும், பின்வரும் முறைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அ. கைது செய்யப்பட்ட பேர் சட்டத்திற்கு அமைவான வகையில் கையாளப்படுவதற்கு அமைவாக ஒரு நீதவான் முன்னிலையில் தாமதமின்றி முன்னிறுத்தப்படல் வேண்டும்.

ஆ. தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடத்திலான ஏதேனும் மாற்றம் கைது செய்யப்பட்ட நபரின் குடும்பத்திற்கும் மேலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் தாமதமின்றி அறிவிக்கப்படல் வேண்டும்.

இ. தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு நீதவான் ஒவ்வொரு மாதமும் விஜயம் செய்தல் வேண்டும்.

ஈ. தடுத்து வைக்கப்பட்டிருத்தலில் இருந்தான விடுதலைகள் நீதிமன்றத்தினூடாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

9.55 பொலிசாரினால் ஒரு கைது, தடுத்து வைத்தல் மற்றும் இடம் மாற்றுதல் அல்லது ஆட்கடத்தல்கள் முறைப்பாடுகளை பதிவதற்கு தவறுதல் அல்லது மறுத்தல் மற்றும் அதனை புலன்விசாரணை செய்யத் தவறுதல் என்பன ஒரு குற்றவியல் குற்றத்தை ஏற்படுத்துவதாக அமையும் என்பதோடு அத்தகைய தவறிழைப்பவர்கள் சட்ட நடவடிக்கைக்கு முன்கொண்டு வரப்படல் வேண்டும்.

9.56 சில சம்பவங்களின் உண்மை நிலைகள் பொதுப் பாதுகாப்பு தொடர்பில் எந்தவொரு குற்றத்தையும் வெளிப்படுத்தாத போதிலும் அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் பெரும் எண்ணிக்கையிலான ஆட்கள் கைது செய்யப்பட்டும் மற்றும் தடுத்து வைக்கப்பட்டதாகவும் ஆணைக்குழு குற்றச்சாட்டுக்களைக் கேட்டது. இந்த விடயத்தில், அவசரகால சட்டவிதிகளை நீக்கும் அரசாங்கத்தின் தீர்மானம் ஓர் முக்கியமானதும் மற்றும் நல்லிணக்கம் மற்றும் சாதாரண நிலையை மீள்நிலைநாட்டுவது நோக்கியதான சாதகமான நடவடிக்கையென ஆணைக்குழு கவனத்தில் கொள்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வந்ததுடன் சட்டவாட்சியின் மேன்மையை நிலைநிறுத்தும் நாட்டின் சாதாரண சட்டங்களின் கீழேயே ஆட்சி மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதே மக்களின் விருப்பாக இருந்தது என்பதை ஆணைக்குழுவின் முன் அளிக்கப்பட்ட பல முறையீடுகள் தெளிவாக எடுத்துக்காட்டின. அவசரகாலக் கட்டத்தை நீக்குவதன் மூலம் முழுமையான நன்மைகளை பொதுமக்கள் பெற்றுக் கொள்வர் என்பதும் மற்றும் ஏதேனும் மேலதிக சட்டவிதிகள் அத்தகைய நன்மைகளின் முழுமையான அனுபவித்தலை பாதிக்கமாட்டாது எனும் நம்பிக்கையையும் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

9.57 பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஒரு நீண்ட காலத்திற்கு காவலில் ஆட்கள் தடுத்து வைத்திருக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களையும் ஆணைக்குழு அவதானித்தது. இது விடயத்தில், பொதுப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் ஏதேனும் ஒழுங்கு விதிகள் அல்லது பயங்கரவாத தடைச் சட்டம் என்பவற்றின் கீழ் காவலில் வைத்திருக்கப்படும் ஆட்களின் தடுத்து வைத்தல்கள் மற்றும் கைது என்பவற்றை கண்காணித்து ஆராய்வதற்கு ஒரு சுயாதீனமான ஆலோசனைக் குழு நியமிக்கப்படல் வேண்டுமென ஆணைக்குழு பரிந்துரைக்கிறது.

9.58 தங்களது குடும்ப உறுப்பினர்களின் இருப்பிடங்களை, சில சந்தர்ப்பங்களில் பல வருடங்களுக்கு அறியாத மனக்கவலையை ஆற்றுவதற்கு குடும்பங்கள் உதவியளிக்கப் படல் வேண்டும். காணாமற் போனவர்களே குடும்பத்திற்கான வருமான மீட்டுபவர்களாக

இருக்குமிடத்து நிதிரீதியாகவும் குடும்பங்கள் உதவியளிக்கப்படல் வேண்டும். அவசியமான போது சட்ட உதவிகளும் கூட வழங்கப்படல் வேண்டும்.

9.59 இந்த விடயத்தில் விரிவாகக் கவனம் செலுத்தும் முகமாகவும் மற்றும் எதிர்காலத்தில் இந்த நிகழ்வுகளை இல்லாதொழிப்பதற்கும் அதேபோன்று இருக்கின்ற இடைவெளியை நிரப்புவதற்குமாக, கட்டாயமான அல்லது தன்னிச்சையில்லாத காணாமற் போதல்களை விசேடமாக குற்றியல்படுத்துவதற்கு உள்நாட்டுச் சட்டவாக்கம் கட்டமைக்கப்படல் வேண்டுமென ஆணைக்குழு பலமாகப் பரிந்துரைக்கிறது.

9.60 அத்தோடு அவை மீண்டும் நிகழமாட்டாது எனும் வகையில் கடந்த சம்பவங்களிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களை உறுதிப்படுத்துவதற்கான ஒரு அடிப்படைத் தேவையும் உள்ளது. இது தொடர்பில், பாடசாலைச் சிறுவர்கள், இளைஞர்கள், பாதுகாப்புப் படை உறுப்பினர்கள் மற்றும் பொலிஸ் போன்றவர்கள் இலக்காகக் கொண்டு விரிவான, நாடு முழுவதிலுமாக மனித உரிமைகள் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான தேவையையும் ஆணைக்குழு வலியுறுத்துகிறது.

***தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் நடாத்தப்படும் விதம்***

9.61 ஆணைக்குழு பல்வேறு புனர்வாழ்வு மையங்களுக்கு விஜயம் செய்ததுடன், புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படும் தொழில்சார் மற்றும் பராமரிப்பு முறைகளினால் திருப்தியடைந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து ஏற்படும் நல்லெண்ணம், நம்பிக்கை மற்றும் தொழில்முறை செய்திறன் கட்டியெழுப்புதல் என்பன நல்லிணக்கம் நோக்கி நிச்சயமாகப் பங்களிக்கும்.

9.62 ஆணைக்குழு பல்வேறு தடுப்பு முகாம்களுக்கு விஜயம் செய்ததுடன் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் அதே போன்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியது. கடும் போக்குடைய தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் தடுத்து வைத்திருக்கப்படும் பூசா தடுப்பு மையத்தில் தடுத்து வைத்திருக்கப் பட்டிருப்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட முறையீடுகள், பல்வேறு இளம் சந்தேகநபர்களால் தெரிவிக்கப்பட்ட, எந்த சந்தர்ப்பங்களின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகளால் அவர்கள் கட்டாயமாக ஆட்சேர்க்கப்பட்டார்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து தப்புவதற்கான அவர்களது முயற்சிகள் மற்றும் அவர்கள் எவ்வாறு மீளவும் ஆட்சேர்க்கப்பட்டனர் என்பது போன்ற விபரங்களைக் கொண்டிருந்தது. குற்றச்சாட்டுக்கள் எதுவும் சுமத்தப்படாமல் அவர்கள் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் அதன் விளைவாக அவர்கள் கல்விக்கான சாத்தியங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த விடயம் ஆணைக்குழுவின் இடைக்காலப் பரிந்துரைகளில் ஏற்கனவே கையாளப் பட்டுள்ளதுடன், அதில், அத்தகைய சந்தர்ப்பங்களில், ஒவ்வொரு சம்பவமாக ஆராய்ந்து, பொருத்தமான வகையில் ஒரு நடவடிக்கைச் செயன்முறையைப் பரிந்துரைப்பதற்கான ஒரு விசேட பொறிமுறை உருவாக்கப்படல் வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

9.63 தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் நெருங்கிய இரத்த உறவினர்கள், தடுத்து வைக்கப்பட்டுள்ள அவர்களது குடும்ப உறுப்பினர்களின் இருப்பிடங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமையைக் கொண்டுள்ளனர். ஆதலால், அத்தகைய தகவல்களை குடும்பங்கள் பெற்றுக் கொள்ளும் வழிவகைகளுடன் தடுத்து வைத்திருக்கப்படுபவரின் பெயர், தடுத்து வைத்திருக்கப்படும் இடம், அதே போன்று இடமாற்ற விபரங்கள் என்பவை நெருங்கி இரத்த உறவினருக்கு கிடைக்கும் வகையில், தடுத்து வைத்திருக்கப்பட்டுள்ளவர்களின் ஒரு பட்டியலை உள்ளடக்கிய விரிவான மையப்படுத்திய ஒரு தரவுத் தளத்திற்கான தேவையொன்று உள்ளது.

9.64 தடுத்து வைக்கப்பட்டவர்கள் தொடர்பான இடைக்காலப் பரிந்துரைகளின் முழுமையான அமுல்படுத்தலை உறுதிப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்பதை வேண்டி அரசாங்கத்தை வலியுறுத்துவதற்கு ஆணைக்குழு விரும்புகிறது.

9.65 தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை சந்திப்பதற்கான உரிமைய நெருங்கிய இரத்த உறவினர் கொண்டுள்ளனர். ஆகையால், இந்தக் கொள்கையை மீறும் எந்த நடவடிக்கைகளும் நீக்கப்படல் வேண்டும். சில நெருங்கிய இரத்த உறவினர்களுக்கு வாய் வார்த்தை மூலமான தகவல்கள் மட்டுமே வழங்கப்பட்டதை ஆணைக்குழு அவதானித்தது. மேலும், வெகுதூரத்திலிருந்து பயணம் செய்தும், தடுத்து வைத்திருப்பவர்களை நேரில் காண்பதற்கு சில குடும்ப உறவினர்கள் அனுமதிக்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் தொண்டர் ஸ்தாபனங்கள் என்பவற்றின் ஒத்துழைப்புடன், நெருங்கிய இரத்த உறவினர்கள் தங்களது குடும்ப உறுப்பினர்கள் தடுத்து வைத்திருக்கப்படும் இடங்களுக்கு பயணிப்பதற்கான தற்போதைய போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கிறது.

9.66 பல்வேறு தடுப்பு முகாம்களுக்கு, விசேடமாக உயர்பாதுகாப்பு வசதிகள் கொண்ட ஓமந்தை மற்றும் பூசா தடுப்பு முகாம்கள் என்பவற்றுக்கு ஆணைக்குழு விஜயம் செய்தது. ஓமந்தை முகாம் இப்பொழுது மூடப்பட்டுள்ளதை ஆணைக்குழு குறிப்பிடுகின்றது. தடுத்த வைக்கப்பட்டுள்ளவர்களுடனான தனிப்பட்ட சந்திப்புக்கள் உட்பட, இந்த தடுத்து வைத்திருக்கும் இடங்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அணுகுதல்களுடன் இந்த மையங்களில் தடுத்து வைத்திருக்கப்பட்டுள்ளவர்கள் குறித்தான அதிகாரிகளின் கரிசனையுடனான மனோபாவத்தை ஆணைக்குழு பாராட்டுதல்களுடன் குறிப்பிடுகிறது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடனான இந்த ஒத்துழைக்கும் கொள்கையை ஆணைக்குழு வரவேற்பதுடன், தடுத்து வைத்திருக்கப்பட்டிருப்பவர்களின் நலன்களை உறுதிப்படுத்துவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் அதனையொத்த ஏனைய மனிதநேய ஸ்தாபனங்களுடனான ஒத்துழைக்கும் கொள்கை மற்றும் ஆக்கப்பூர்வமான ஈடுபாடு என்பவற்றை அரசாங்கம் மேம்படுத்துவதற்கும் வலுவாகப் பரிந்துரைக்கிறது.

9.67 தடுத்து வைத்திருக்கும் அனைத்து இடங்களும், அவை தடுத்து வைப்பதற்கு முறையாக அனுமதிக்கப்பட்ட இடங்களாக இருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அனுமதிக்கப்பட்ட இடங்கள் தவிர்ந்த ஏனைய எந்த இடங்களிலும் எந்தவொரு நபரும் தடுத்து வைக்கப்படல் கூடாது. ஆட்களைக் கைதுசெய்து காவலில் தடுக்கும் போது கைது செய்தலுக்கானதொரு உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு மற்றும் தடுத்து வைக்கப்படும் இடத்தின் விபரங்களை வழங்குதல் போன்ற கடுமையான சட்ட ஏற்பாடுகள் கட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளால் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும்.

9.68 குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆட்சேர்ப்பினால் தங்களது கல்வி நடவடிக்கைகள் குழம்பியதும் மற்றும் தங்களது முறைசார் கல்வியை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கின்றதுமான வயதில் குறைந்த தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மீது விசேட கவனம் செலுத்தப்படுவதற்கும் ஆணைக்குழு பரிந்துரைக்கிறது. புலன்விசாரணை மற்றும் அவர்களின் வழக்குகளின் விரைவான முடித்து வைத்தலுக்கு முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும். இது தொடர்பில், தேசிய பரீட்சைகளுக்க தடுத்து வைக்கப்பட்டுள்ள பலரும் தோற்றுவதற்கு புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்கள் இயலச் செய்தன என்பதை ஆணைக்குழு பாராட்டுதல்களுடன் குறிப்பிட்டுக் கொள்கின்றது.

9.69 இளம் பிள்ளைகளுடனான, உடல்ரீதியாக ஊனமுற்ற மற்றும் காயங்களிலிருந்து குணமடைகின்ற மற்றும் மருத்துவ இடையீடுகள் தேவைப்படுகின்றது போன்ற விசேட நிலையிலுள்ளவர்களை இனங் காண்பதற்கு முறையானதொரு பரிசீலிப்புச் செயன்முறை

பிரயோகத்தில் இடப்படுதல் வேண்டும். அவர்களுக்குத் தேவையான விசேட உதவிகள் அவர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும். நீண்ட காலங்களுக்கான தடுத்து வைத்தல்கள் மற்றும் உறவினர்களைச் சந்திப்பதற்கு வழியில்லாது இருப்பவர்கள் சிலருக்கு உளவளத்துணை தேவைப்படும் சில நிலைமைகளும் காணப்படலாம்.

9.70 ஆணைக்குழுவின் இடைக்காலப் பரிந்தரைகளின் அடிப்படையின் பேரில் கணிசமான எண்ணிக்கையிலான தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பான வழக்குகளை செயன்முறைப்படுத்துவதற்கு அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை ஆணைக்குழு பாராட்டிக் குறிப்பிடுகின்றது. எவ்வாறாயினும், தடுத்து வைக்கப் பட்டிருப்பவர்களில் சிலர், குற்றச்சாட்டுக்கள் ஏதும் சுமத்தப்படாது நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறித்து ஆணைக்குழு தனது கரிசனையைத் தெரிவித்துக் கொள்கிறது. குற்றச்சாட்டுக்கள் இருப்பின் அவற்றைக் கொண்டு வருவதன் மூலமும் அல்லது ஏதேனும் குற்றவியல் குற்றம் புரியப்பட்டதற்கான சாட்சிகள் இல்லாதவிடத்து அவர்களை விடுவிப்பதன் மூலமும் இந்த வழக்குகளை விரைவாக அகற்றுவதற்கான தீர்மானம் மிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென ஆணைக்குழு மீண்டும் வலியுறுத்துகின்றது.

9.71 புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்கள் தொடர்பில், அவர்கள் பொது வாழ்க்கையின் பிரதான நீரோட்டத்தில் ஒன்றிணைக்கப்பட்டதை உறுதி செய்வதற்கு அரசாங்கம் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல் வேண்டும். இந்த நோக்கத்துக்காக ஈற்றில் நிதி மற்றும் மனிதவளம் ஆகிய இரு வளங்களையும் வழங்கக் கூடிய சிவில் சமூக ஸ்தாபனங்களின் ஓர் கூடுதலான வகிபாகத்தை அரசாங்கம் ஆர்வத்துடன் ஊக்குவித்தல் வேண்டுமென்பது ஆணைக்குழுவின் கருத்தாகும்.

### *சட்டவிரோத ஆயுதக்குழுக்கள்*

9.72 விசேடமாக, பரிசீலனைக்குட்பட்ட காலத்தின் போது சட்டவிரோத ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகள், ஆணைக்குழுவின் தீவிர கரிசனைக்குரியதாக இருந்தது. மோதல் பகுதிகளுக்கான அதன் கள விஜயங்களின் போது ஆணைக்குழுவின் முன் மேற்கொள்ளப்பட்ட பல முறையீடுகளுக்கமைய, அத்தகைய குழுக்களின் முனைப்பான பிரசன்னமும் மற்றும் நடவடிக்கைகளும் பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி, குற்றவிலக்களிப்புக்கான ஒரு சூழலுக்கு பங்களிப்பதாகத் தோன்றியது. இந்தக் குழுக்களினாலான ஆட்கடத்தல், தவறான தடுத்து வைத்தல்கள் மற்றும் பணம் பறித்தல் எனக் குற்றஞ்சாட்டப்படும் எண்ணற்ற சம்பவங்கள் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகள் உயிர் வாழ்வதற்கான உரிமை போன்ற மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதித்தன. கடத்தப்பட்ட பெரும்பாலானவர்கள் எங்கேயுள்ளனர் என்பது இதுவரை தெரியாதுள்ள வேளையில் சிலர் இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டனர். இந்த நடவடிக்கைகள், உண்மையென நிரூபிக்கப்படின், மக்களின் அடிப்படைச் சுதந்திரம் மற்றும் அடிப்படை உரிமைகளின் ஒரு மீறலை அவை ஏற்படுத்துகின்றன.

9.73 உண்மையை உறுதிப்படுத்துமொரு நோக்கிலும் மற்றும் போதுமான சாட்சியங்கள் காணப்படுமிடத்து குற்றிமிழைத்தவர்களுக்கு எதிராக குற்றவியல் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கிலும் சட்டவிரோத ஆயுதக் குழுக்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முறையான புலன்விசாரணைகள் நடாத்தப்படல் வேண்டும் என்பது ஆணைக்குழுவின் கருத்தாகும்.

9.74 மேற்கொள்ளப்படும் நல்லிணக்கச் செயன்முறைகளுக்கு ஒரு கடுமையான இடையூறை அவை ஏற்படுத்துவதால் இந்த சட்டவிரோத ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக்

களைவதற்கும் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி இடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இது தொடர்பில். அனைத்து சட்டவிரோத ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களைவதற்கு ஆணைக்குழு அதன் இடைக்காலப் பரிந்துரைகளில் தெரிவித்தவற்றை மீளவும் வலியுறுத்துகிறது. இது விடயத்தில், சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதை ஆணைக்குழு கவனத்தில் கொள்ளும் வேளையில் தீர்மானம் மிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படாமையை இட்டு அது வருத்தம் தெரிவிக்கின்றது. ஒரு கால வரையறை மற்றும் உறுதிப்படுத்தும் செயன்முறையின் பகுதியாக இந்த விடயம் மீது கவனம் செலுத்துவதற்கு தீர்மானமிக்க நடவடிக்கை எடுக்கப்படுவது அத்தியாவசியமாகும். ஆணைக்குழுவின் இடைக்காலப் பரிந்துரைகள் தொடர்பில் நேரத்திற்கே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், உதயன் செய்திப் பத்திரிகை, ஆசிரியர் மீதான அண்மைய தாக்குதல் போன்ற மோசமான சம்பவங்கள் தவிர்க்கப்பட்டிருக்கலாமென்பது ஆணைக்குழுவின் கருத்தாகும்.

***சிறுவர்களின் கட்டாய ஆட்சேர்ப்பு***

9.75 மோதல்களினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான கள விஜயங்களின் போது, சிறுவர்களின் கட்டாய ஆட்சேர்ப்பு தொடர்பாக பல முறையீடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், பெற்றோர்களின் கூற்றுப்படி, இந்தச் சிறுவர்கள் பலரின் இருப்பிடங்கள் இதுவரை தெரியாதுள்ளது. சிறுவர்களின் கட்டாய ஆட்சேர்ப்பென்பது மோதல் காலங்களின் போது தமிழீழ விடுதலைப் புலிகளால் புரியப்பட்ட மிக மோசமான குற்றங்களின் வகைகளிலொன்றாகும்.

9.76 கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய குழுக்களால் வயது குறைந்த சிறுவர்களின் ஆட்சேர்ப்பு பற்றிய கரிசனைகளும் தெரிவிக்கப்பட்டன. இந்தப் பின்னணியில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தால் மேற்கொள்ளப்படும் சிறுவர் கட்டாய ஆட்சேர்ப்பு நடைமுறை நிறுத்தப்படுவதையும் மற்றும் ஆட்சேர்க்கப்பட்ட அல்லது ஆயுதக் குழுவினால் உபயோகிக்கப்பட்ட அனைத்து சிறுவர்களும் விடுதலை செய்யப்பட்டும் மற்றும் குடும்பங்களுடன் மீள் ஒருங்கிணைதலுக்கு உதவிகள் வங்கப்படுவதை உறுதிசெய்வதற்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (TMVP), புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மற்றும் யுனிசெப் ஸ்தாபனம் என்பவற்றுக்கிடையில் 2008 இல் முத்தரப்பு நடவடிக்கைத் திட்டம் கைச்சாத்திடப்பட்டது என்பதைக் குறிப்பிடுவதற்கு ஆணைக்குழு விரும்புகிறது.

9.77 முன்னாள் சிறுவர் போராளிகளின் புனர்வாழ்வு, மோதலிற்கு பின்னான இந்த உடனடியான காலகட்டத்தில் அரசாங்கத்தின் மிகவும் முன்னுரிமைக்குரியதாக இருத்தல் வேண்டும். பல நூற்றுக்கணக்கான முன்னாள் சிறுவர் போராளிகளின் புனர்வாழ்வு மற்றும் ஒருங்கிணைதலை ஏற்படுத்திய அரசாங்கத்தின் புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்களை, குறிப்பாக சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தை ஆணையாளர் நாயகத்தின் சமூக அடிப்படையிலான சீர்திருத்த நிகழ்ச்சித்திட்ட அணுகுமுறையைக் குறிப்பிடுவதில் ஆணைக்குழு மகிழ்ச்சியடைகின்றது. முன்னாள் சிறுவர் போராளிகளின் புனர்வாழ்வுக்கு அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் மற்றும் சிவில் சமூக ஸ்தாபனங்களின் ஒத்துழைப்புடன் சமூக அடிப்படையிலான இதே அணுகுமுறை பின்பற்றப்படல் வேண்டுமென ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

9.78 புனர்வாழ்வு செயன்முறைகளில், புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தைப் பூர்த்தி செய்த பின்னர் விரைவிலேயே சிறுவர்கள், அவர்கள் குடும்பங்களுடன் வாழ்வதற்கு அனுமதிக்கப் படவும், மற்றும் ஒரு ஜீவனோபாயத்தை ஈட்டுவதற்கு உதவவும் மற்றும் அவர்களது முறைசார்ந்த அல்லது முறைசாராக் கல்வியைத் தொடர்வதற்கு உதவவும் சம்பந்தப்பட்ட புனர்வாழ்வு அதிகாரங்களை ஆணைக்குழு கேட்டுக் கொள்கிறது. இது தொடர்பில்,

சிறுவர்கள் தங்களது பெற்றோர்கள் மற்றும் அல்லது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுடன் அவர்களது சொந்த சமூகங்களிலேயே தங்கியிருப்பதன் முக்கியத்துவத்தை ஆணைக்குழு வலியுறுத்துகிறது. அது கலாச்சாரப் பாரம்பரியங்களின் ஓர் உள்ளார்ந்த பகுதியாகுமென்பதுடன் அது மதிக்கப்படுதல் வேண்டும். இது அவர்களது குடும்பங்கள் மற்றும் சமூகங்கள் என்பவற்றுடனான நீண்ட கால மீள ஒன்றிணைதலுக்கும் உதவும்.

9.79 போராளிகளாக சிறுவர்களின் கட்டாய ஆட்சேர்ப்புக்கு முதல் தோற்றத்திலான சாட்சியங்கள் இருக்குமிடத்து, அத்தகைய சம்பவங்கள் புலன்விசாரணை செய்யப்பட்டு குற்றிமிழைத்தவர்கள் நீதியின் முன் கொண்டுவரப்படல் வேண்டும். இது தொடர்பில், சட்டவிரோத ஆயுதக்குழுக்கள்/தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லது ஏதேனும் அரசியல் கட்சியுடன் தொடர்பு கொண்ட குழுக்களால் சிறுவர்களின் கட்டாய ஆட்சேர்ப்பு குறித்து குற்றஞ்சாட்டப்படும் முறைப்பாடுகள், இத்தகைய நடைமுறைகள் எதிர்காலத்தில் நிகழாது என்பதை உறுதிப்படுத்துவதற்கு குற்றமிழைத்தவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கும் நோக்கில் புலன்விசாரணை செய்யப்படல் வேண்டும். தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள், புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மற்றும் யுனிசெப் என்பவற்றுகிடையில் செய்து கொள்ளப்பட்ட நடவடிக்கைத் திட்டத்தை உடன் பயனுறும் வகையில் முழுமையாக அமுல்படுத்துவதற்கு ஆணைக்குழு கோருகின்றது. இதன் மூலம் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தாலான சிறுவர்களின் கட்டாய ஆட்சேர்ப்பு நடைமுறை முடிவுறுவதுடன், ஆட்சேர்க்கப்பட்ட சிறுவர்கள் புனர்வாழ்வின் பின்னர் விடுவிக்கப்பட்டு தங்கள் குடும்பங்கள் மற்றும் சமூகங்களுடன் மீள் ஒன்றிணைக்கப்படுவர்.

9.80 மோதல்களினால் பாதிக்கப்பட்ட முன்னாள் பிரதேசங்களின் அதிகரித்த வேலை வாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை வழங்குவதற்கு தனியார் துறையுடன் சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் கலந்துரையாடுவதற்கு ஆணைக்குழு வலியுறுத்துகிறது. பாடசாலையைத் தவறவிட்ட சிறுவர் போராளிகள் தொடர்பாக சில நெகிழ்ச்சியான தன்மைகளுக்கு இடமளிக்கப்படல் வேண்டும். மேலும் இந்த முன்னாள் சிறுவர் போராளிகள், வருமானத்துடனான தொழில்வாய்ப்பில் ஈடுபடும் அதே வேளை, அவர்களது முறைசார் கல்வித் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு ஊக்குவிக்கப்பட்டு வசதியளிக்கப்படல் வேண்டும்.

9.81 ஆயுத மோதல்களில் ஈடுபட்ட சிறுவர்களைக் கையாள்வதில் அறிவும், அனுபவமும் கொண்ட சம்பந்தப்பட்ட ஐக்கிய நாடுகளின் முகவரமைப்புகள், விசேடமாக யுனிசெப் அமைப்பு மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச அரச சார்பற்ற ஸ்தாபனங்கள், அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் மற்றும் சிவில் சமூக ஸ்தாபனங்கள் என்பவற்றிடமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான சாத்தியங்களையும் அரசாங்கம் ஆராய்தல் வேண்டும். இந்தச் சூழ்நிலையில், யுனிசெப் அமைப்பின் உதவியுடன் குடும்பத்தை தேடிக் கண்டுபிடித்து ஒன்றிணைத்தல் பிரிவை (FTR) ஸ்தாபித்தமையுடன், தரவுகளை சிறுவர்களுடன் ஒப்பிட்டுப் பொருத்துவதில் அது அடைந்த முன்னேற்றம் என்பவற்றை ஆணைக்குழு ஓர் சாதகமான நடவடிக்கையாகக் கருதுகின்றது. தரவுகளை ஒப்பிட்டு பொருத்திப் பார்த்தல் சிறுவர்கள் அவர்களது குடும்பங்களுடன் உண்மையான மீள ஒன்றிணைதலுக்கு இட்டுச் செல்ல முடியுமென்பதால் அரசாங்கம் இந்த முன்னெடுப்பை ஆர்வத்தோடு ஊக்குவித்து உதவுதல் வேண்டுமென்பதோடு அனைத்து முகவரமைப்புகளும், விடேசமாக பாதுகாப்பு அமைப்புகள் இந்தச் செயன்முறைக்கு ஒத்துழைத்தல் வேண்டும். சிறுவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் ஒரு விரிவான நிகழ்ச்சித் திட்டத்தை உருவாக்கி அமுல்படுத்துவதற்கு, அரசாங்கம் வழிநடத்தும் ஒரு தேசிய

பல்துறைச் செயலணியை ஸ்தாபிப்பதற்கும் அரசாங்கம் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

9.82 தாமதமின்றி சட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அல்லது புனர்வாழ்வளித்து மற்றும்/ அல்லது அவர்களை விடுதலை செய்யும் நோக்குடன் வயதில் குறைந்த தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் தொடர்பான சம்பவங்களில், சம்பவம் ஒவ்வொன்றின் அடிப்படையிலும் பரிசீலனை செய்யப்படுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

### *இடர்வாய்ப்பு நிலை கொண்ட குழுவினர்*

#### *பொதுவானவை*

9.83 பெண்கள், சிறுவர்கள், உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் ஊனமுற்றவர்கள் போன்ற இடர்வாய்ப்பு நிலை கொண்ட குழுக்கள் தொடர்பான பல பிரச்சினைகளை மோதல் எழ வைத்தது. கணிசமாகப் பாதிக்கப்பட்ட இக்குழுக்களின் பல கதைகளை ஆணைக்குழு செவிமடுத்தது. தற்போதைய மோதலிற்கு பின்னான சூழ்நிலையில், இக்குழுக்களின் அடிப்படைத் தேவைகளைத் திருப்தி செய்வது அரசாங்கத்தின் முன்னுரிமைக்குரியதொரு விடயமாக இருக்கையில் இடைக்கால மற்றும் நீடித்த காலத்திற்கான நிலையான தீர்வுகள் கண்டறியப்படல் வேண்டும். இவையின்றி ஓர் நீடித்ததும் மற்றும் அனைத்தும் உள்ளிணைந்ததான நல்லிணக்கச் செயன்முறைகள் எட்டப்பட்ட முடியாது.

9.84 ஆணைக்குழுவின் களவிஜயங்களின் போது, பெண்கள், சிறுவர்கள் மற்றும் வயது முதிர்ந்தவர்களே மோதலின் முழுத்தாக்கத்தையும் எதிர்கொண்டு, தங்கள் வாழ்க்கையில் மோசமாகப் பாதிப்படைந்தவர்களாக இருந்தனர் என்பது வெளிப்படையாகியது. பலபெண்கள் அவர்களது கணவர்களை இழந்திருந்தனர் அல்லது அவர்களது இருப்பிடம் தெரியாதிருந்தனர். அந்த மனவேதனை மற்றும் சிரமங்களிற்கிடையேயும், இளம் பிள்ளைகள் மற்றும் வயது முதிர்ந்த பெற்றோர்களுடனான தங்கள் குடும்பங்களுக்கு அவர்கள் தொடர்ந்தும் ஆதரவளித்தனர். இந்த முயற்சிகளில், ஒரு பாதுகாப்பான சூழலில் தாம் வாழ்கிறோம் எனவும் மற்றும் அவர்களது மனித கௌரவம் பாதுகாக்கப்படுகின்றது என பெண்கள் உணருதல் வேண்டும்.

9.85 தங்களது அன்புக்குரியவர்கள் ஒன்றில் உயிருடன் இருக்கிறாரா அல்லது இறந்துவிட்டாரா என்றவொரு உறுதிப்பாட்டைப் பெறவும் அல்லது இறந்துவிட்டாராயின் மதரீதியான கிரியைகள் நடாத்தி மேற்கொண்டு தங்கள் வாழ்க்கையை முன்னெடுப்பதற்குமே அனைத்துக் குடும்பங்களும் விரும்புவதாக அதிகளவு எண்ணிக்கையான தனிப் பட்டவர்களால் தெரிவிக்கப்பட்டதொரு அவதானிப்பை பிரத்தியேகமாக சுட்டிக்காட்டுவதற்கு ஆணைக்குழு விரும்புகின்றது. அந்த அவதானிப்புகள் குறித்து ஆணைக்குழு பரிதாபம் அடைவதுடன், இந்த விடயத்தை முடிவுறுவுறுத்துவதற்கான ஒரு உணர்வைக் கொண்டு வருவதற்கான தேவையையும் அங்கீகரிக்கின்றது. இது ஆற்றுப்படுத்தும் மற்றும் நல்லிணகத்தின் ஏதேனும் அர்த்தமுள்ள செயன்முறைகளுக்கு முக்கியமானதொரு பங்களிக்கும் காரணியாக அமையும்.

#### *பெண்கள்.*

9.86 பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்கள் பலவற்றினதும் மற்றும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்தாபனங்களையும் செவிமடுத்த பின்னரும், மற்றும் மோதலின் பின்னர் இத்தகைய பெண்கள் பெரும் எண்ணிக்கையில் உள்ளனர் (அரசாங்கத் தகவல் மூலகங்களின் படி 59,000 க்கும் அதிகமாக) என்ற உணமையினாலும், இந்தப் பெண்கள் மற்றும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் நன்னிலைகளை, நல்லிணக்கம்

நோக்கிய ஓர் கூட்டு முயற்சியில், அரசாங்கம் மற்றும் ஏனைய அனைத்து அக்கறை கொண்ட செயற்பாட்டாளர்களாலும் முன்னுரிமைக்குரிய ஒரு விடயமாக கவனம் செலுத்தப்பட வேண்டிய தேவையைக் கொண்டதும் மற்றும் மோதலிற்கு பின்னர் முக்கியமானதோர் சவாலாகவும் ஆணைக்குழு அங்கீகரிக்கின்றது.

9.87 பெண்களில் பலர் அவர்களது கணவர்களை இழந்திருந்தனர் அல்லது அவர்கள் இருக்குமிடங்கள் தெரியாதிருந்தனர். சில சம்பவங்களில், அவர்களது கணவர்கள் தடுப்பு முகாம்களில் நீண்ட காலத்துக்கும் மற்றும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாத காலத்திற்குமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இத்தகைய மனவேதனைக்குகிடையிலும், பெண்கள் அவர்களது குடும்பங்களுக்கு ஆதாரவளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டனர். அத்தகைய குடும்பங்கள் பல இளம் பிள்ளைகள் மற்றும் வயது முதிரும் பெற்றோர்களையும் கொண்டிருந்தன. மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, பெண்களின் விசேடமாக அவர்களது குடும்பங்களின் அநேகம் குடும்பத்தலைவர்களாகும் விதவைகளின் உடனடியாக தேவைகள் திருப்தி செய்யப்படல் வேண்டும். இந்த உடனடியாக தேவைகள், தற்போது அவர்களது குடும்பங்கள் உள்ள கடுமையான பொருளாதாரக் கஷ்டங்கள் மற்றும் வறுமை என்பவற்றை குறைப்பதற்காக அவர்களுக்கு ஜீவனோபாயத்திற்கான வழிகள் மற்றும் ஏனைய வருமான மீட்டும் வழிமுறைகளை வழங்குவதன் மூலமான பொருளாதார உதவிகளை உள்ளடக்குகின்றது.

9.88 இந்தப் பணியில் உதவியளிப்பதற்கு, இந்த விடயங்களின் நிபுணத்துவமும் வளங்களும் கொண்ட சர்வதேச ஸ்தாபனங்கள் மற்றும் சிவில் சமூக குழுக்களின் சேவைகளை இணைத்து ஈடுபடுத்துவதற்கு அரசாங்கம் கூடுதலானதும் மற்றும் நிலையான முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும். மிக முக்கியமாக, குடும்பங்கள் மற்றும் கிராமங்களுக்கு ஆதரவளிப்பதன் மூலம் சமூகங்களுக்கு உதவுகின்ற சமூக மட்டத்திலான சங்கங்கள் மற்றும் உதவிக் குழுக்கள் என்பன இது விடயத்தில் ஓர் காத்திரமான பங்கை வகிக்கமுடியும். அத்தகைய சங்கங்களினூடாக, தனியாகிய தாய்மார்கள், அண்மையில் மீள்குடியமர்ந்தவர்கள், மற்றும் உடல் ஊனமானவர்கள் ஆகியோர் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மீது கவனம் செலுத்துவதற்கன முயற்சிகளில் அவற்றை உள்ளூர் அரசாங்க நிறுவனங்கள், அரசியல் தலைமைகள் மற்றும் அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் மற்றும் சிவில் சமூக ஸ்தாபனங்கள் போன்ற ஏனைய உதவி அமைப்புகளின் கவனத்துக்கு உரிய வகையில் தங்களுக்காக செயற்படுவதற்கு அமர்த்திக் கொள்ளலாம். அத்தகைய சமூக வட்டத்திலான உதவியளிக்கும் குழுக்கள், மோதல் காலங்களில் கஷ்டமான நிலைமைகள் மற்றும் சொந்தத் துயங்கள் என்பவற்றின் கீழ் வாழ்ந்ததின் காரணத்தால் ஏற்பட்ட மனவேதனைகளில் உழலும் மக்களின் உணர்வுபூர்வமான மற்றும் ஆன்மிகத் தேவைகள் குறித்தும் கவனம் செலுத்த முடியும். அரசாங்கம் அத்தகைய ஒத்துழைப்பை ஊக்குவித்து, வசதியளிப்பதற்கு ஆணைக்குழு பலமாகப் பரிந்துரைக்கிறது.

9.89 மோதலின் நீடிப்பு காரணமாகவும் மற்றும் குடும்பத்திலுள்ள ஆண்கள் காணாமற் போனதினாலும் பெண்களில் பலர், அவர்களது முறைசார் கல்வியைத் தொடர்வதற்கு முடியாதிருந்தது. மோதல் முடிவடைந்ததொரு சூழலில், அத்தகைய பெண்கள் அவர்களது முறைசார் கல்வியைத் தொடர்வதற்கு அல்லது வேலைவாய்ப்பு மற்றும் அல்லது ஏனைய வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வசதியளிக்கக் கூடிய ஏனைய வகையிலான முறைசாராக் கல்வி மற்றும்/அல்லது தொழிற்பயிற்சி என்பவற்றை அவர்கள் தொடர்வதற்கு வாய்ப்புகளும், தெரிவுகளும் வழங்கப்படல் வேண்டுமென ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

9.90 தாங்கள் ஒரு பாதுகாப்பான சூழலில் வாழ்கிறோம் எனவும் மற்றும் அவர்களது அடிப்படை மனித கௌரவம் காக்கப்பட்டு, பாதுகாக்கப்படுவதை பெண்களும் உணர்தல் வேண்டும்.

அத்தகையதொரு செயன்முறைகளுக்கு அத்தியாவசியமானதொரு முன்நிபந்தனையை மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உருவாக்குவதில் அரசாங்கம் ஒரு பொறுப்பைக் கொண்டுள்ளது என்பது ஆணைக்குழுவின் கருத்தாகும்.

9.91 காணாமற் போனவர்கள் அநேகம் இத்தகைய பெண்களின் கணவர்கள், மகன்கள், தந்தையர் மற்றும் சகோதரர்களாகவும் இருந்து அவர்கள் ஒரு பாரம்பரிய குடும்பத்தின் வருமானம் ஈட்டுபவராகவும் அதே போன்று பாதுகாப்பு அளிப்பவராகவும் இருப்பதால் அவர்களின் ஆட்கடத்தல்கள், எதேச்சாதிகாரமான தடுத்து வைத்தல்கள், நீண்ட மற்றும் முடிவில்லாது தடுத்து வைத்திருத்தல் மற்றும் காணாமற் போதல்கள் என்பன இவர்கள் மேல் நேரடியான தாக்கத்தைக் கொண்டுள்ளன. தங்களது அன்புக்குரியவர்களின் இருப்பிடங்கள் பற்றி அறிவதற்கானதொரு உரிமை, நாட்டின் சமனான பிரஜைகளாக உண்மையை அறிதல் மற்றும் சட்ட நிவாரணங்களுக்கான உரிமையை இப்பெண்கள் கொண்டிருப்பதை அங்கீகரித்தது, இந்த விடயங்கள் ஓர் முன்னுரிமை அடிப்படையில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். இவை, எந்தவொரு வெற்றிகரமானதும், நீடித்ததும் மற்றும் சகலதுமிணைந்த நல்லிணக்கம் செயன்முறைகளுக்கான முன்னிபந்தனைகளாகும்.

9.92 பல அடிப்படை விடயங்கள் மற்றும் தேவைகளுடன் தொடர்பட்டதாக, முகவரமைப்புகளுக்கிடையான ஒரு ஒருங்கிணைந்த, முயற்சியால் மட்டுமே இந்தப் பாரிய சவால் எதிர்கொள்ளப்படமுடியுமென்பதோடு ஒரு நிலையான தீர்வு காணப்பட முடியுமென்பது ஆணைக்குழுவின் கருத்தாகும். இதற்கமைய, மோதலினால் பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர்கள், வயது முதிர்ந்தவர்கள் மற்றும் ஊனமுற்றவர்கள் போன்ற ஏனைய இடர்நேரல் ஆபத்துக் கொண்ட குழுக்களின் தேவைகளை ஓர் விரிவான முறையில் கவனம் செலுத்தி அவசியமான நிவாரணங்களை வழங்கும் முகவரமைப்புக்களுக்கு இடையிலான ஒரு செயலணி, தாமதமின்றி ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும்.

*சிறுவர்கள்*

9.93 சிறுவர்களுக்கான உதவிகளில், அவர்களது கல்வி ஒரு முக்கியமான முன்னுரிமையாகத் தொடர்ந்திருத்தல் வேண்டுமென ஆணைக்குழு பலமாகப் பரிந்துரைக்கின்றது. பாடசாலைகள், ஆசிரியர்கள், பாடசாலை வழங்கல்கள் என்பவற்றை வழங்குதல் மற்றும் புலமைப் பரிசில்கள் போன்ற நிதி மற்றும் ஏனைய வடிவிலான உதவிகள் என்பன இது தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். சிறந்த கல்வி மற்றும் சுகாதார வசதிகளுக்கான ஏற்பாடுகள் மற்றும் சிறுவர் இல்லங்கள், அநாதை இல்லங்கள் என்பவற்றுக்கான தொடர்ச்சியான நிதி மற்றும் பொருள் ரீதியான உதவிகளும் இந்த முயற்சியில் முக்கியமானவையாகும்.

9.94 வன்முறை மோதல்கள் மற்றும் அவர்களது அன்புக்குரியவர்களின், சில சமயங்களில் அவர்களது சொந்தத் தந்தை, தாய் போன்றவர்களின் இழப்பு என்பவற்றுக்கு முகங்கொடுக்க நேர்ந்ததினால் சிறுவர்கள் மனக்காயங்கள் மற்றும் ஏனைய உளவியல் ரீதியான ஒழுங்கற்ற நிலை என்பவற்றினால் துயர்ப்படும் சிறுவர்கள் அங்கு இருப்பார்கள் என்பதை ஆணைக்குழு கவனத்தில் கொள்கிறது. இது அவர்களது வளர்ச்சி மற்றும் கல்வி என்பவற்றை கடுமையாகத் தடைசெய்யலாம். முறைசார் கல்வி முறை, அதே போன்று எந்தப் பகுதிகளில் செயற்படும் ஏனைய சமூக சிவில் சமூகக் குழுக்கள் என்பவற்றினுடாக ஒரு முன்னுரிமைக்குரிய விடயமாக விசேட கவனம் தேவைப்படும். அத்தகைய சிறுவர்களை அரசாங்கம் இனங் காணுதல் வேண்டுமென ஆணைக்குழு பலமாகப் பரிந்துரைக்கின்றது. அவசியமானவிடத்து தொழில்சார் முறையிலான உளவளத்துணை உட்பட, விடேச கவனமும், பராமரிப்பும் இந்தச் சிறுவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

பெண்கள் குடும்பத் தலைவர்களாக உள்ள குடும்பங்களில் வாழும் சிறுவர்களின் இனங்காணுதல் இந்தப் பிரச்சினைக்கு கவனம் செலுத்தும் ஒரு வழியாக இருக்கமுடியும்.

9.95 பாடசாலைகளுக்கான இலகு வழிமுறைகள், சிறந்த சுகாதார நல வசதிகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் சிறுவர் பூங்காக்கள் போன்ற பொழுதுபோக்கு வசதிகள் உட்பட, மோதல்களினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறுவர் வசதிகள் விரும்பும் சிநேகபூர்வமான சூழலை உருவாக்குவதில் விசேட கவனம் செலுத்துவதற்கும் சமூக மற்றும் சிவில் சமூக ஸ்தானங்கள் உட்பட அரசாங்கம், உள்ளூராட்சி அதிகார சபைகள் மற்றும் ஏனைய அக்கறை கொண்ட செயற்பாட்டாளர்களை ஆணைக்குழு வலுவாக ஊக்குவிக்கிறது.

### *வயது முதிர்ந்தோர்கள்*

9.96 மோதல்களினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள வயது முதிர்ந்தவர்கள் பெரிதும் துன்பப்பட்டனர், அத்துடன் அவர்களது பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகள் ஆகியோர்கள் மோதலின் நேரடிப் பாதிப்பிற்கு ஆளாகியதால் சில சமயங்களில் அவர்களது விரிவடைந்த குடும்பத்திற்கு பல வருடங்களுக்காக வருமானம் அளிப்பதற்கு தள்ளப்பட்டனர். சமூகத்தின் இந்தப் பிரிவினர் எதிர்கொள்ளும் உடல்ரீதியான சிரமங்கள், உளவியல் ரீதியான மனவேதனைகள் மற்றும் பொருளாதாரக் கஷ்டங்கள் என்பன கூடுதல் அங்கீகரித்தலைத் தேவைப்படுத்துகின்றன. ஆதலால், ஆணைக்குழு பின்வருவனவற்றைப் பலமாகப் பரிந்துரைக்கின்றது.

அ. மோதல்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நிலைமைகளை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள், வயது முதிர்ந்தவர்கள் அவர்களது விரிவடைந்த குடும்பதைப் பராமரிப்பதிலும் கவனம் செலுத்துவதிலுமான சுமையைக் குறைப்பதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்குதல் வேண்டும்.

ஆ. மோதல் தொடர்பான மனவேதனைகள் உட்பட, இயலாமை மற்றும் ஏனைய நீண்ட கவனிக்காது விடப்பட்ட உடல்நலப் பிரச்சினைகள் காரணமாக வயது முதிர்ந்தவர்களின் விசேட தேவைகளுக்கு அரசாங்கமும் மற்றும் அக்கறை கொண்ட செயற்பாட்டாளர்களும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

9.97 ஆன்மீக மற்றும் கலாச்சார நடவடிக்கைகளுக்கு இலகுவானதும் மற்றும் தடைகளில்லாதுமான வழிமுறைகளுக்கான வசதிகளையேற்படுத்துதல் மனத்துன்பங்களைக் கையாள்வதில் வயது முதிர்ந்தவர்களுக்கு உதவுமென்பது ஆணைக்குழுவின் கருத்தாகும். இது தொடர்பில், ஆணைக்குழு சமூக மற்றும் சிவில் சமூக ஸ்தாபனங்களை, விடேசமாக நிபுணத்துவமும் வளங்களும் கொண்டவற்றை முதியவர்களுக்கு உதவுவதில் ஒரு முக்கிய பாத்திரத்தை வகிப்பதற்கு ஊக்குவிக்கிறது. இது விடயத்தில், ஒரு காத்திரமான பாத்திரத்தை வகிப்பதற்கு உள்ளூர் மத அமைப்புகள் மற்றும் வணக்க ஸ்தலங்கள் மற்றும் மதகுருமார்களையும் கூட ஆணைக்குழு அழைக்கிறது. அத்தகைய முயற்சிகளுக்கு அரசாங்கம் வசதியளித்தல் வேண்டும்.

### *உடன் ஊனமுற்றவர்கள்*

9.98 பல சம்பவங்களில் தங்கள் குடும்பத்துக்கான வருமானமீட்டுபவர்களாக இருந்த மோதல் பகுதிகளிலுள்ள உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவியளிப்பதற்கு அவசரமான ஒரு தேவையுள்ளதை ஆணைக்குழு அங்கீகரிக்கின்றது. உடல், ஊனம் கொண்டவர்களுக்கு உதவுவதில் அனுபவமும், நிபுணத்துமும் கொண்ட சர்வதேச ஸ்தாபனங்களிடமிருந்து உதவிகள் பெறப்படுதல் வேண்டும். குடும்பங்களின் உயிர்வாழ்தலில் உடல் ஊனம் கடுமையானதொரு பொருளாதார தாக்கத்தைக் கொண்டுள்ளதால், பல நிலைமைகளில்

உள்ளவாறு உடல் ஊனமுற்ற உறுப்பினர்களுடனான குடும்பங்களின் பொருளாதாரத் தேவைகளை அரசாங்கமும் முன்னுரிமைக்குரிய ஓர் விடயமாகக் கவனம் செலுத்துதல் வேண்டும். உடல் ஊனமுற்றவர்களின் சமூக, கலாச்சார மற்றும் ஆன்மீகத் தேவைகளும் கூட அதிகாரிகளின் விடேச மற்றும் அவசர கவனங்களைத் தேவைப்படுத்துகின்றன.

9.99 இந்த விடயத்தில் நிபுணத்துவமும் வளங்களும் கொண்ட சர்வதேச ஸ்தாபனங்கள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் என்பவற்றினூடாக அவர்களுக்கான பரஸ்பர ஆதரவு மற்றும் அவசியமான உதவிகளைப் பெற்றுக் கொள்வதில் அவை வசதியளிக்கும் என்பதால் உடல் உள்ளத்துடனான ஆட்களை சமூகக் குழுக்களாக தங்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கு அதிகாரிகள் ஊக்கப்படுத்துதல் வேண்டும்.

9.100 உடல் ஊனத்துடனான ஆட்களின் உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கையோடு இணங்கும் விதத்தில் உடல் ஊனத்துடனான ஆட்களின் உரிமைகள் உய்த்தறியப்படுவதற்கு அவசியமான தேசிய சட்டவாக்கங்கள் இடப்படுவதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. அத்தகைய நடவடிக்கை, பெயரும், எண்ணிக்கையிலான உடல் ஊனமுற்றவர்களை, விசேடமாக மோதல் பகுதிகளில் பாதிப்படைந்தவர்களைப் பாதிக்கும் விடயங்கள் மீது சர்வதேச உதவிகளைப் பெற்றுக் கொள்வதுட்பட ஒரு சாதகமான தாக்கத்தைக் கொண்டிருக்கும்.

***உள்ளக இடம்பெயர்ந்த மக்கள்***

9.101 உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான பிரச்சினைகள் மீது ஆணைக்குழு ஓர் பெரும் எண்ணிக்கையிலான முறையீடுகளைப் பெற்றுக் கொண்டது. அறிக்கையை தயார் செய்யும் வேளையில், மோதல்களின் இறுதிக் கட்டங்களில் இடம்பெயர்ந்த மக்களில் அநேகமானோர் மீளக்குடியேற்றப்பட்டதை அறிவதில் ஆணைக்குழு மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றது. எவ்வாறாயினும், மீள்குடியேற்றப்பட்ட மக்களினதும் மற்றும் தங்கள் வாழ்வை மீள்கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் செயன்முறைகளில் ஈடுபட்டிருப்பவர்களினதும் தொடர்ச்சியான தேவைகளுக்கு கவனம் செலுத்துவது இன்னமும் அவசியமானதாகும்.

9.102 மோதல்களின் இறுதிக்கட்டத்தின் போது இடம்பெயர்ந்த மக்களின் மீள்திரும்புதல் செயன்முறைகள் பெருமளவில் பூர்த்தி செய்யப்பட்டமைக்காக அரசாங்கம் மற்றும் அக்கறை கொண்ட அனைத்துச் செயற்பாட்டாளர்கள் என்பன பாராட்டப்படல் வேண்டும். எவ்வாறாயினும், மீளக் குடியமர்த்தப்பட்ட மக்களின் தொடர்ச்சியான தேவைகளுக்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

9.103 மீள்திரும்பியவர்களில் பலரும் தற்காலிகக் கொட்டில்களிலேயே இன்னமும் வசிப்பதால் மீள்திரும்பியவர்கள் தங்கள் வீடுகளை திருத்துவதற்கு அல்லது நிரந்தரமான வீடுகளைக் கட்டுவதற்கும் உதவிகள் அளிக்கப்படுதல் வேண்டும். இது தொடர்பில் ''சிரமதானம்'' போன்ற சுயஉதவி மற்றும் பரஸ்பர உதவி வேலைத்திட்டங்கள் ஊக்குவிப்படல் வேண்டும். மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் வீதிகள், பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் போன்ற உட்கட்டுமானத் தேவைகளுக்கு போதுமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் குறித்து ஆணைக்குழு திருப்தியைத் தெரிவிப்பதுடன், அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் மற்றும் நன்கொடை சமூகம் உட்பட அக்கறை கொண்ட செயற்பாட்டாளர்களுடனான ஒத்துழைப்புடன் இந்தப் பகுதிகளுக்கான முன்னுரிமையை தொடர்ந்து பேணுவதற்கு ஆணைக்குழு அதிகாரிகளை வலியுறுத்துகிறது. சிவில் சமூகம் போன்ற தன்னார்வக்

குழுக்களின் உதவி மற்றும் ஒத்துழைப்பு என்பன, குறிப்பாக வீடமைப்பு பணிகளில் ஊக்குவிக்கப்படல் வேண்டுமென்பது ஆணைக்குழுவின் கருத்தாகும்.

9.104 மீளக்குடியமர்ந்தவர்களுக்கு சட்டரீதியான நிலவுரிமையை அளிப்பதற்கான ஒரு தேவையுள்ளது.

9.105 தங்களது வாழ்வை மீள்நிர்மாணித்து, மீளக் கட்டியமைப்பதற்கான ஓர் கூட்டுமுயற்சியை மேற்கொள்ளும் சமூகங்களுக்கு கீழ் மட்டத்தில் உதவுவதற்காக சமூக அபிவிருத்திகளில் ஈடுபடுவதற்கு சிவில் சமூகம் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

9106 தன்னிச்சையான மீள்திரும்புதலை நெறிப்படுத்தும் சர்வதேசளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடுகளுக்கமைவாக, தங்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கு நபரொருவரின் சுதந்திரமான நடமாட்டத்தை மதிப்பதற்கானதொரு தேவை அங்குள்ளது. இது தொடர்பில், மீளக்குடியமர்வதற்காக மக்களுக்குத் தயாராக உள்ள பகுதிகள் தொடர்பாக அரசாங்கம் அதன் கொள்கையில் தெளிவாக இருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கொள்கைகள் மற்றும் அவர்களுக்குள்ள தெரிவுகள் பற்றி மக்கள் மத்தியில் கூடுதலான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படல் வேண்டும். மீளக்குடியமர்வதற்கு மக்களுக்கு இருக்கின்ற தெரிவுகள் மீதான அத்தகைய தெளிவானதும், நன்கு திட்டமிடப்பட்டதுமான கொள்கை, மீள்குடியேற்ற நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான சில தப்பபிப்பிராயங்கள் மற்றும் சந்தேகங்கள் குறித்து கவனம் செலுத்துவதற்கு உதவும்.

9.107 அச்சம், கைதுசெய்யப்படல் அல்லது நம்பிக்கையீனம் என்பவற்றுக்கானதொரு சூழ்நிலைக்கு இட்டுச் செல்லாத வகையில் பாதுகாப்புத் தேவைகள் உட்பட மக்களின் தேவைகள் அணுகப்படல் வேண்டும். அத்தகையதொரு பாதுகாப்பு மற்றும் நம்பிக்கையான சூழலில் மட்டுமே, உண்மையான நல்லிணக்கம் நோக்கியதாக மீள்குடியேற்றத்தின் நன்மைகள் பயன்படுத்தப்படலாம்.

9.108 இந்தியாவில் இடம்பெயர்ந்து வாழுகின்றதும் மற்றும் தங்களது சொந்த விருப்பின் பேரில் இலங்கைக்கு திரும்பி மீள்குடியேற விரும்பும் ஆட்களுக்கு அரசாங்கத்தால் வசதிகளேற்படுத்திக் கொடுக்கப்படுதல் வேண்டும் என்பதோடு ஊக்குவிக்கப்படுதலும் வேண்டும். இது தொடர்பில், அவர்கள் இலங்கைக்கு மீள்திரும்பின் அத்தியாவசியமான வசதிகள் கிடைக்கும் வகையில் செய்யப்படல் வேண்டும். இந்த அறிக்கையை எழுதும் பொழுது, இந்தியாவிலிருந்து மீளத் திரும்புவோர்கள் தொடர்ந்து கொண்டிருப்பதை ஆணைக்குழு அவதானிக்கின்றது. இந்தியாவிலிருந்து மீள்திரும்புவோர்கள் மற்றும் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பும் உள்ளூர் இடம்பெயர்ந்த மக்களிற்கும் இடையில் கிடைக்கின்ற வசதிகளின் பாரபட்ச உணவுகளுக்கான இடம் இல்லாதிருப்பதை உறுதிசெய்வதும் முக்கியமானதாகும். இலங்கைக்கான தங்களது மீள்திரும்புதல் தொடர்பாக சிந்தித்து தீர்மானங்களை மேற்கொள்வதற்கு ஏதுவாக ஓர் குறையான இரு தரப்பு கலந்தாலோசனை செயன்முறை மேற்கொள்ளப்படுவதற்கும் பரிந்துரைக்கப் படுகின்றது.

***வடக்கு மற்றும் கிழக்கில் முஸ்லிம் சமூகம் தொடர்பான கரிசனைகள்.***

9.109 1990 ஆம் ஆண்டு ஒக்டோபரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்கள் காரணமாக ஐந்து மாவட்டங்களிலிருந்து (யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி,

முல்லைத்தீவு மற்றும் வவுனியா) இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களின் பிரச்சினை, மோதலின் பின்னான முக்கியமான சவால்களில் ஒன்றாக இருப்பதுடன், நல்லிணக்கச் செயன்முறைகளில் ஒரு முக்கியமான தாக்கத்தையும் கொண்டுள்ளது. இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக மிக மோசமான நிலைமைகளின் கீழ் வசிக்கும் இந்த உள்ளக இடம்பெயர்ந்த மக்களின் நிலை குறித்து ஆணைக்குழுவின் முன் பெரும் எண்ணிக்கையிலான முறையீடுகள் செய்யப்பட்டன.

9.110. வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தொடர்பான இந்த நீடித்த பிரச்சினை மீது கவனம் செலுத்துவதற்கு நிலையான தீர்வுகள் காணப்படல் வேண்டுமென்பதும், அது கவனம் செலுத்தப்படாமல் தொடர்ந்தும் இருப்பின் அது அமைதியின்மை மற்றும் இணக்கப்பாட்டின்மைக்குமான மூலகாரணிகளைக் கொண்டுள்ளது என்பது ஆணைக்குழுவின் கருத்தாகும்.

9.111 இலங்கையின் நீடித்த மோதல்களின் விளைவாகத் தோன்றிய இடம்பெயர்ந்த மக்களின் நீண்ட பிரச்சினைகளில் ஒன்றாக முஸ்லிம் சமூகத்தின் நிலை மீது கவனம் செலுத்தும் தீர்வுகள் காணப்படல் வேண்டும். இது, இந்த இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் அல்லது புகலிடம் அளித்த சமூகத்தில் ஒருங்கிணைத்தலை இலக்காகக் கொண்டவொரு சீரான அரச கொள்கையின் உருவாக்கம் மூலம் அடையப் பெறலாம். இந்தக் கொள்கை இடம்பெயர்ந்த மக்களுக்கு தெரிவிக்கப்படல் வேண்டும். இதன் மூலம், தங்களது சொந்த வாழ்விடங்களில் அல்லது புகலிடம் அளித்த சமூகங்களில் உள்ள மீள்குடியேற்றத் தெரிவுகள் தொடர்பாக சிந்தித்து தீர்மானங்களை எடுக்கலாம்.

9.112 அத்தகைய அரச கொள்கைகள், நிதி உதவிகள் மற்றும் வீட்டு நிர்மாணத்திற்கான உதவி போன்ற ஏனைய பொருள் உதவிகள் உட்பட உதவிப் பொறிமுறைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

9.113 உள்ளக இடம் பெயர்ந்த மக்கள் மற்றும் புகலிடம் வழங்கிய சமூகங்கள் என்பவற்றுடன் விரிவான கலந்துரையாடலின் பின்னர், இந்தப் பிரச்சினை மீது நிலையான தீர்வுகளை ஆராய்வதற்கும் மற்றும் ஒரு விரிவான அரச கொள்கையை உருவாக்கவும் ஒரு விடேச குழு நியமிக்கப்படல் வேண்டும்.

**பேச்சுச் சுதந்திரம் மற்றும் தகவல்களுக்கான உரிமை**

9.114 பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் பத்திரிகையாளர்களின் கொலைகள் தொடர்பான தொடர்ச்சியான அறிக்கைகளாலும் மற்றும் இந்தச் சம்பவங்கள் தீர்மானமிக்கதான முறையில் புலன்விசாரணை செய்யப்பட்டு குற்றவாளிகள் சட்டத்தின் முன் கொண்டு வந்து நிறுத்தப்படுவது மேற்கொள்ளப்படாதுள்ள யதார்த்தங்களினாலும் ஆணைக்குழு ஆழ்ந்த கவலையடைகிறது. ஆணைக்குழுவின் அமர்வுகள் நடைபெற்று வரும் வேளையிலேயே, யாழ்ப்பாணத்தில் உதயன் பத்திகையாசிரியர் மீதான மோசமான தாக்குதலினாலும் ஆணைக்குழு விசனமடைந்தது. ஆணைக்குழு இந்தத் தாக்குதலை கண்டிக்கின்றது. இத்தகைய நடவடிக்கைகள் எந்தவொரு நல்லிணக்க முயற்சிகளினதும் வழியில் பெரும் தடைகளை இடுகின்றன. புலன்விசாரித்தல் மற்றும் குற்றவாளிகள் மீது சட்டநடவடிக்கை தவறுதல் என்பன நல்லிணக்கச் செயன்முறைகள் மற்றும் சட்டவாட்சி என்பவற்றை பாழ்படுத்துவதாகவே அமையும்.

9.115 உலகளாவியளவில் அடிப்படை மனித உரிமைகளாக கருதப்படும், பேச்சுச் சுதந்திரம் மற்றும் தகவல்களுக்கான உரிமை என்பன எந்தவொரு நல்லிணக்கச் செயன் முறைகளிலும் ஓர் முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன. ஊடகச் சுதந்திரம் மீது

இடப்படும் ஏதேனும் கட்டுப்பாடுகள் மற்றும் இனக்குழுக்கள் மத்தியில் ஒரு அவநம்பிக்கையான சூழலிற்கே பங்களிக்குமாதலினால், ஜனநாயகக் கோட்பாடுகள் மற்றும் அடிப்படை உரிமைகள் கடப்பாடுகளுக்கு அமைவாக ஊடகச் சுதந்திரம் மேம்படுத்தப் படுவது அத்தியவாசியமானதாகும். இதன் மீதான கட்டுப்பாடுகள், ஆக்கபூர்வமான தகவல்கள் மற்றும் கருத்துக்களின் ஓர் பரிமாற்றத்தை தடை செய்வதுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்கச் செயன்முறைகள் மீதும் கடும் தடைகளை மட்டுமே இடுகின்றன. ஆணைக்குழு பின்வருவனவற்றை பலமாகப் பரிந்துரைக்கின்றது:

அ) ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தொல்லைப் படுத்துதல்கள் மற்றும் தாக்குதல்களைத் தவிர்ப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படல் வேண்டும்.

ஆ) அத்தகைய குற்றங்கள் மீது கடுமையான தண்டனை விதிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும், அத்துடன் குற்றவியல் நீதி முறைகளில் பொதுமக்கள் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்காக புலன்விசாரணை, சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அத்தகைய வழக்குகளை முடித்து வைத்தல் என்பவற்றுக்கும் முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

இ) கடந்த காலங்களிலான அத்தகைய சட்ட விரோத நடவடிக்கைகள் முறையாகப் புலன்விசாரிக்கப்படுதல் வேண்டும். அண்மைக் காலங்களில் ஒரு அதிகளவு எண்ணிக்கையிலான ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டதை ஆணைக்குழு கரிசனையுடன் அவதானிக்கின்றது. அத்தகைய குற்றங்கள் நீதித்துறை மீதான மக்கள் நம்பிக்கையை சிதைத்துவிடும். ஆதலால், தீர்மானிக்கும் வகையிலான புலன்விசாரணைகளை விரைவுபடுத்தி அதன் மூலம் குற்றமிழைத்தவர்கள் தாமதமின்றி நீதியின் முன்கொண்டு வரப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்டல் வேண்டுமென ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

ஈ) நல்லிணக்கச் செயன்முறைகளுக்கு பங்களிப்பதில் தகவல் பரிமாற்றங்கள் உதவுவதால், வடக்கு மற்றும் கிழக்கில் ஊடகவியலாளர்களின் சுதந்திரமான நடமாட்டத்தை அரசாங்கம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

உ) தகவல்களுக்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்கு சட்டம் உருவாக்கப்படல் வேண்டும்.

**மதம், ஒன்றிணைதல் மற்றும் நடமாடுதல் என்பவற்றுக்கான சுதந்திரம்**

9.116 நம்பகமானதும் மற்றும் நீடித்ததுமான நல்லிணக்கத்தின் எந்தச் செயன்முறைகளும், தங்களது மதத்தை அனுஷ்டிப்பதில் சுதந்திரமாக ஈடுபடுவதற்கான உரிமை மற்றும் ஒன்றிணைதல் மற்றும் நடமாட்டம் என்பவற்றுக்கான சுதந்திரம் போன்ற ஏனைய சுதந்திரங்களுக்கான மக்களின் உரிமைகள் போன்றவற்றை மதிக்கின்றதும், பாதுகாக் கின்றதுமான ஓர் சூழலின் உருவாக்கத்தை தேவைப்படுத்துகின்றது. மோதல்களினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களைப் பொறுத்த வரை இந்தச் சுதந்திரங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்கச் செயன்முறைகளை ஓர் உண்மையான உள்ளிணைக்கின்ற செயன்முறையாக அவர்களின் நம்பிக்கையையும், உறுதிப்பாட்டையும் மேம்படுத்துமாதலால் இவை குறிப்பாக முக்கியத்துவம் கொண்டவையாக அமைகின்றன. ஆகையால், அத்தகைய உரிமைகள் எந்த அரச நிறுவனங்களாலும், விசேடமாக பாதுகாப்புப் படைகள் மற்றும் பொலிஸினால் எதேச்சாதிகாரமான வகையில் மட்டுப் படுத்தப்படாதிருப்பதை அல்லது மீறப்படாதிருப்பதை அரசாங்கம் உறுதிப்படுத்துதல் வேண்டும். அத்தகைய நிறுவனங்கள், ஓர் நீடித்த நல்லிணக்கச் செயன்முறைகளை

உறுதிப்படுத்தி இந்த உரிமைகளை முழுமையாகப் பயன்படுத்தி, அனுபவிப்பதற்கு மக்களுக்கு உதவுவதில் மாற்றங்களின் முகவர்களாகச் செயற்படுதல் வேண்டுமென ஆணைக்குழு வலுவாக உணர்கின்றது. அத்தகைய நடவடிக்கைகளுக்கு எந்தத் தடைகளையும் இடாது, தங்களது மத அனுஷ்டானங்களில் கலந்து கொள்வதற்கு வசதியளிப்பதன் மூலம், பாதிப்படைந்தவர்கள் மத்தியில் உள்ள நிச்சயமற்றதன்மையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான தேவையை ஆணைக்குழு வலியுறுத்துகின்றது.

9.117 கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளினால் மட்டும் அவசியப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள் தொடர்பான விதிவிலக்குகள் தவிர, வணக்க ஸ்தலங்களுக்கு விஜயம் செய்வதில் எஞ்சியுள்ள ஏதேனும் கட்டுப்பாடுகளை அகற்றுவதற்கு அரசாங்கம் உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இது உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் அமைந்துள்ள வணக்க ஸ்தலங்களுக்கு செல்வதற்கான வழிவகைகளையும் உள்ளடக்குகின்றது. பாதுகாப்பு ஏற்பாடுகள் தேவைப்படுமிடத்து பொலிஸாரின் உதவிகள் வழங்கப்படலாம்.

9.118 மக்கள், சமூகத் தலைவர்கள் மற்றும் மதத் தலைவர்கள் ஆகியோர்கள் கட்டுப்பாடுகளின்றி அமைதியான முறையிலான நிகழ்வுகள் மற்றும் கூட்டங்களை ஏற்பாடு செய்வதற்கு சுதந்திரம் உடையதாக இருத்தல் வேண்டும்.

9.119 வெளிநாடுகளிலிருந்து விஜயங்களை மேற்கொள்பவர்கள் எந்தவொரு முறையற்ற கட்டுப் பாடுகளுமின்றி அண்மையில் மீள்குடியேறிய பகுதிகளிலுள்ள தங்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் விஜயம் செய்வதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும்.

**கடந்தகால விசாரணை ஆணைக்குழு அறிக்கைகள் தொடர்பான பிற்தொடர்ச்சி நடவடிக்கைகள்**

9.120 ஆகஸ்ட் 2005 இலிருந்து எழும் மனித உரிமைகளின் தீவிரமான மீறுதல் தொடர்பான குற்றச்சாட்டுக்களை, குறிப்பாக ஜனவரி 2006 இல் திருகோணமலையில் 5 மாணவர்களின் கொலை மற்றும் ஆகஸ்ட் 2006 இல் பட்டினிக்கெதிரான தொண்டர் நிறுவனத்தின் 17 தொண்டர் ஊழியர்களின் கொலைச் சம்பவங்களின் மேலும் புலன்விசாரணைகள் மற்றும் சம்பந்தப்பட்டவர்கள் மீதான வழக்குத் தொடர்தல் தொடர்பாக புலன்விசாரணை செய்து விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைத்தல்களின் அமுல்படுத்தலுக்கு ஆணைக்குழு பலமாகப் பரிந்துரைக்கின்றது. அத்தகைய நடவடிக்கை சட்டவாட்சிக்கான மதிப்பை உறுதிப்படுத்தும் வலுவான சமிக்கைகளை வெளிப்படுத்துவதுடன், மறுபுறத்தே அது, நலன்படுத்தும் செயன் முறைகளுக்கு பங்களிப்பதற்கும் துணையாக அமையும்.

## *அத்தியாயம் ஆறு: காணி விடயங்கள் மீதான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள்: மீள்திரும்புதல் மற்றும் மீள்குடியேற்றம்*

9.121 ஓர் நீண்ட கால மோதலின் பின்னர் உடனடியாகவே ஒரு நாட்டில் மோதலிற்கு முன்னதான நிலைமையை திரும்ப ஏற்படுத்துவது ஓர் இலகுவான பணியல்ல எனும் உண்மையை ஆணைக்குழு ஏற்றுக்கொண்டாலும், வன்முறைகள், மிரட்டல்கள் மற்றும் இனத்துடைப்புகளால் உந்தப்பட்ட சட்ட விரோத காணி மாற்றங்கள் மற்றும் அந்நியப்படுத்தல்கள் என்பன நிலைபேறுடையவையாகுவதற்கு அல்லது அமைப்பு

முறையாகுவதற்கு அனுமதிக்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்துவது முக்கியமானதாகும். இன ஒற்றுமை மற்றும் தேசிய நல்லிணக்கம் என்பவற்றைப் போஷிப்பதற்கு இது முக்கியமானதாகும், தீர்க்கப்படாது விடப்படின் இது எதிர்காலத்தில் மோதல்களை உருவாக்கும் புள்ளிகளாக உருமாற்றம் அடையும்.

9.122 மீள்திரும்புவதையும் மற்றும் இலங்கையின் மீள்குடியயேற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் மீது கண்ணோட்டம் செலுத்துவோர்களுக்கு, சாரா பன்டுலியானோ அவர்களினால் மாறுபடும் சமூக-அரசியல்-கலாச்சாரச் சூழ்நிலைகளில் உள்ளக இடம்பெயர்ந்த மக்களின் மீள்திரும்புதல் மற்றும் மீள்குடியேற்றம் மீது மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி ஐயந்தெளிவிப்பதாக அமையலாம்.... ‘‘மக்கள் காணிகள் மீதான உரிமைகளைக் கோருதல் மற்றும் மீளக் கோருவதால் மோதலின் பின்னதான காலங்களில் காணிப் பிரச்சினைகள் அதிகம் முன் கொண்டு வரப்படுகின்றன.......... ‘‘மோதலிற்குப் பின்னதான’’ சூழ்நிலையில் கூட, வீடுகளுக்கு மீள்திரும்புவதென்பது அகதிகளுக்கு ஓர் எளிமையான செயன்முறையாக இல்லை.... இது ஒரு சிக்கலான விடயம் என்பதோடு ஒவ்வொரு நிலைமையும் வேறுபட்டதாகும், மோதல்கள் மிகவும் உருமாற்றமடைகின்ற செயன்முறையென்பதுடன் யுத்தத்திற்கு முன்னதான அதே அந்தஸ்து நிலை விரும்பப்படுகின்றதாக இருந்தாலும் கூட, முற்றிலுமாக ஒரு போதும் மீள் ஸ்தாபிக்கப்பட முடியாததாகும்’’ – சாரா பன்டுலியானோ, பட்டயப்படுத்தாத ஆட்புலம், காணிப் பிணக்கு மற்றும் மனிதநேய நடவடிக்கைக்கான வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனம், நவெம்பர் 2009.

9.123 மேற்கூறப்பட்ட காரணப்படுத்தல்கள். இலங்கையின் மோதலின் பின்னதான நிலைமைகளுக்கும் சமனான அழுத்தங்களுடன் பிரயோகமாவதால் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் இந்த யதார்த்தத்தினை கவனத்தில் கொள்கின்றன.

9.124 இலங்கையின் எந்தவொரு பிரஜையும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் காணியை தேடிப்பெற்றுக் கொள்வதற்கு பாரதீனப்படுத்த முடியாத உரிமையைக் கொண்டுள்ளார் என்பதுடன், நாட்டின் சட்டம் மற்றும் அதன் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக, எந்தவொரு கட்டுப்பாடுகளுமின்றி அல்லது எந்தவொரு வகையிலான மட்டுப்படுத்தல்கள் விதிக்கப்படாமலும் தனது விருப்புக்குரிய எந்தவொரு பகுதியிலும் வசிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளார். அரசாங்கங்களின் காணிக் கொள்கை குறித்தவொரு மாகாணத்தின் மக்கட் பரம்பல் மாதிரியை இயற்கைக்கு முரணான வகையில் மாற்றங்களை ஏற்படுத்தவதற்கானதொரு காரணியாக அமைதல் கூடாது. மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசனம் மற்றும் காணிக் குடியேற்றத் திட்டங்களில், அரச காணிகளின் விநியோகம் இலங்கை அரசியலமைப்பிற்கானதாக தொடர்ந்து வழங்கப்படுதல் வேண்டும்.

9.125 இடம்பெயர்ந்த மக்களின் மீள்திரும்புதல் மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கைளையும் மற்றும் இடம்பெயர்ந்த மக்களின் காணிகளின் ஆவணப்படுத்தல், உரித்துடைமைகளிலான பிணக்குகள் மற்றும் உபயோகிப்பவர் உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ‘வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணிகளின் முகாமைத்துவம் தொடர்பாக கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள்’ எனும் தலைப்பில், ஜூலை 2011 இல் பிரேரிக்கப்பட்ட துணைத் திட்டத்தையும் ஆணைக்குழு பாராட்டுகின்றது. இத்திட்டம் ஓர் புத்தாக்க முறையிலானது என்பதுடன் பொருத்தமானவிடத்து, இதன் பொறிமுறைகள் பிரதானமாக முறைசாராத தன்மையானவையாகவும் குறைந்தளவில் அரச அதிகாரப்படிநிலைகள் கொண்டதாகவும் மற்றும் சிக்கலான, கால விரயம் கொண்டதும் மற்றும் வழக்காடுபவர்களுக்கு செலவு

கொண்டதானதுமான முறைசார் நீதிமன்ற முறைகளிலிருந்து இடம்பெயர்ந்த பெரும்பாலான ஆட்களை விடுவிப்பதற்குமாக வடிவமைக்கப்பட்டது என்பதை ஆணைக்குழு கவனத்தில் கொள்கிறது.

9.126 எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட காணி/காணிகளுக்கான தங்களது உரிமை கோரலிற்கு செல்லுபடியாகும் சட்டச் சான்றுகளை மக்கள் கொண்டுள்ளவிடத்து இந்த நிகழ்ச்சித் திட்டமும் மற்றும் இணைந்த பொறிமுறையும் சட்ட நீதிமன்றங்களின் துணைக்கான பிரதியீடு இல்லையென்பதையும் விசேடமாக அது மோதல்கள் தொடர்பான காரணங்கள் காரணமாக ஆவணச் சான்றுகள் இல்லாத மீள்திரும்பும் இடம்பெயர்ந்த மக்கள் அனைவருக்கும், இயலுமான விரைவில் காணிகள் கிடைக்கச் செய்வதற்கும் நாடுகிறது என்பதை பொருத்தமான ஒரு பிரச்சார முயற்சி மூலமாக, தெளிவுபடுத்துவதுடன் மக்களுக்கு உறுதியளித்தல் வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரங்களுக்கு ஆணைக்குழு பலமாகப் பரிந்துரைப்பதற்கு விரும்புகிறது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்கள் மீதான தகவல்களின் போதாமை பற்றி மக்களின் அறிந்த கொள்ளக்கூடிய கரிசனைகளைத் தணிப்பதற்கு இது அவசியமானதாகும்.

9.127 அமுல்படுத்தல் பயனுறுதித்தன்மை மற்றும் பெறுபேறுகளை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் பரிந்துரைகளை ஆணைக்குழு அளிக்கின்றது.

9.128 நிகழ்ச்சித் திட்டத்தின் அமுல்படுத்துதலில், அது திட்டமிடப்பட்டவாறு பூர்த்தி செய்யப் படுவதை உறுதிசெய்வதற்கும் மற்றும் எழுகின்ற ஏதேனும் பிரச்சினைகள் மற்றும் இடையூறுகள் என்பன பயனுறுதியான வகையிலும் மற்றும் தாமதமின்றியும் தீர்த்து வைக்கப்படுவதற்கு உறுதியான ஓர் அரசியல் துணிவுடன் இணைந்ததான ஓர் அரசியலற்ற அணுகுமுறை கடைப்பிடிக்கப்படுவதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. திட்டத்தின் வெற்றிகரமான அமுல்படுத்தலுக்கு தேவையான மனித மற்றும் நிதி வளங்களை அரசாங்கம் வழங்குவதற்கு ஆணைக்குழு பரிந்தரைக்கின்றது.

9.129 அமுல்படுத்துதலில் பக்கச்சார்பின்மை மற்றும் நீதியை உறுதிப்படுத்துவதற்கு பணித்துறை மட்டங்களிலில் தொடங்கி சிவில் நிர்வாகத்திலான ஓர் உறுதியான நிர்வாகத் துணிச்சலும் கூட இங்கு முக்கியமானதாகும். சம்பந்தப்பட்ட அரசாங்க அதிபர்களாலும் மற்றும் பக்கச்சார்பின்மை மற்றும் ஒளிவுமறைவற்ற தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தேசிய மட்டத்தில் காணி ஆணையாளர் நாயகத்தால் அமுல்படுத்துதலின் தரக் கண்காணிப்பு என்பவற்றாலும், நிகழ்ச்சித்திட்டத்தின் அமல்படுத்தல் பணிகளுடனான சிவில் நிர்வாக அதிகாரிகளின் பயனுறுதியான மேற்பார்வைக்கும் ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

9.130 நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றியானது, அரசியல் தலைவர்கள், அமுல்படுத்துவோர்கள் மற்றும் இந்த சந்தர்ப்பத்தில் அரச அதிகாரிகள் மற்றும் பல்வேறுபட்ட அமுல்படுத்தல் குழுக்களின் உறுப்பினர்களாக இருக்கக்கூடிய சமூகத் தலைவர்கள் மற்றும் பயனாளிகளாகிய மீள்திரும்பிய குடும்பங்களின் குடும்பத் தலைவர்கள்/மீள்குடியேறிய இடம்பெயர்ந்த ஆட்கள் ஆகியோர்களால் அதன் கொள்கைகள், நோக்கம், குறிக்கோள்கள் மற்றும் அதன் முறைமை பற்றி தெளிவானதும் மற்றும் ஐயப்பாடற்ற வகையிலுமாக விளங்கிக் கொள்வதில் கணிசமாகத் தங்கியுள்ளது என ஆணைக்குழு நம்புகின்றது. இது தொடர்பில், ஆணைக்குழு பின்வரும் அவதானிப்புகளையும் மற்றும் பரிந்துரைகளையும் மேற்கொள்வதற்கு விரும்புகின்றது. (i) பிரதான காரியங்கள் நன்னோக்கங்களுடனான போதிலும், உத்தேசிக்கப்பட்ட புதிய நிகழ்ச்சித்திட்டம் மீது பரப்புரை செய்யப்பட்ட இது வரையிலான பொதுத் தகவல்கள் உத்தேசிக்கப்பட்ட திட்டத்தின் நோக்கம் மற்றும் முறைமைகள் தொடர்பாக போதுமானளவில் இல்லாத தெளிவையே ஏற்படுத்தியுள்ளன.

பின்வரும் காரணிகள் இத்தகையதொரு நிலைக்கு பங்களித்திருக்கலாம். (அ) ஊடகங்கள் அதே போன்று பல்வேறுபட்ட அரசியல்வாதிகளால் புதிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் ஆராயப்படாத அல்லது போதியளவில் ஆராயப்படாத தகவல்கள் பரப்புரை செய்யப்பட்டமை; மற்றும் (ஆ) காணி அமைச்சினால் தற்போது அமுல்படுத்தப்பட்டு வரும் ஏனைய சில காணி உரித்துக்கள் மற்றும் உபயோகிப்பர் உரிமைகள் நிகழ்ச்சித்திட்டங்களுடன் உத்தேசிக்கப்பட்ட புதிய நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளடக்கம் மற்றும் முறைகள் தொடர்பான தவறுதலான குழப்பம். உத்தேசிக்கப்பட்ட புதிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் காணிகள் ஆணையாளர் நாயகத்தால் அச்சு ஊடகங்களில் மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்ட அண்மைய விளம்பரங்கள், சில கூட்டிணக்கங்களை அளித்த போதிலும், ஊடகங்கள், வலைப் பக்கங்கள் மற்றும் அரசியல் அறிவிப்புகள் மூலமாக வரும் மாற்றுச் செய்திகள் மற்றும் சில சமயங்களிலான குழப்பமான தகவல்களை நீக்குவதற்கு அது போதுமானதாக இருக்கவில்லை.

9.131 ஊடகங்கள் புதிய நிகழ்ச்சித்திட்டத்தின் சரியானதும் மற்றும் தெளிவானதுமான நோக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக, அரசியல் நிலைப்பாடு எதுவுமின்றி காணிகள் ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தால் உத்தேசிக்கப்பட்ட புதிய நிகழ்ச்சித்திட்டம் மீது நன்கு திட்டமிடப்பட்ட ஒரு ஊடகக் கருத்தரங்குக்கு ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

9.132 அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் பல்வேறு குழுக்களுக்கு தெரிவு செய்யப்பட்ட சமூகத் தலைவர்களுக்குமாக நன்கு வடிவமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்களை காணி ஆணையாளர் நாயகம் மற்றும் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிபர்கள் நடாத்துதல் வேண்டுமென ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. அனைத்துப் பயிற்சிகளும் ஒரே மாதிரியானவை மற்றும் அனைத்துப் பிரிவுகள் மற்றும் மாவட்டங்களிலான பயிற்சி நடவடிக்கைகளினூடாகவும் ஒரே விதமான செய்திகளே விடுக்கப்படுவதை உறுதி செய்யும் முகமாக பயிற்சியானது ஓர் குறுகிய, எளிமையான ஆனால் எழுதப்பட்ட பயிற்சிக் கையேட்டினை அடிப்படையாகக் கொண்டதாக இருத்தல் வேண்டும். பயிற்சியின் போது, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உருவகிக்கப்படும் வகி பாகங்கள் அல்லது அதையொத்த பயிற்சி முறைகளுடன் கூடியதாக களத்தில் எதிர்பார்க்கப்படும் பிரச்சினைகளின் சாத்தியமான பல்வேறு வடிவங்கள் குறித்தான குறுகிய சம்பவ ஆய்வுக் கற்கைகளை உருவாக்கலாம். இது, களத்தில் உண்மையான பிரச்சினைகளுக்கு முகங் கொடுப்பதில் அதிகாரிகள் மற்றும் சமூகத் தலைவர்களின் திறமைகள் மற்றும் தன்னம்பிக்கையை அதிகரிக்கும். இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனம் போன்ற ஒரு விசேட பயிற்சி நிறுவனம் பல்வேறு துறைகளில் அரச உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதில் நிபுணத்துவத்தையும் மற்றும் அனுபவத்தையும் கொண்டுள்ளதினால் பயிற்சிகளை ஒழுங்கேற்பாடு செய்வதில் காணி ஆணையாளர் நாயகம் மற்றும் அரசாங்க அதிபர்களுடன் பங்காளராவதற்கு பணிக்கப்பட முடியும். இவை மேலதிக செலவுகளையும் அதே போன்று நேரம் செலவளித்தல்களைக் கொண்டிருந்தாலும் நிகழ்ச்சித்திட்டத்தின் பயனுறுதி மற்றும் பெறுபேறுகளை நிச்சயம் மேம்படுத்தும்.

9.133 நிகழ்ச்சித்திட்டத்தினால் வழங்கப்படும் பல்வேறுபட்ட சேவைகள் தொடர்பாக இடம் பெயர்ந்த ஆட்கள் மேற்கொள்ள வேண்டிய குறித்த நடவடிக்கைகளை உள்ளடக்கி, முக்கியமாக எளிமையான தமிழ் மொழியிலும், அதேபோன்று சிங்கள மொழியிலுமாக ஓர் நன்கு வடிவமைக்கப்பட்ட, குடியேறுபவர்களை மையப்படுத்திய தொடர்பாடல் பிரச்சாரத்தை ஆரம்பிப்பதற்கும், ஆணைக்குழு பரிந்துரைக்கிறது. தொடர்பாடல் பிரச்சார வடிவமைப்பு அதன் வாசகர்களின் (இடம்பெயர்ந்த மக்களின்) அறிவு மற்றும் புரிந்து கொள்ளும் மட்டங்கள், அதே போன்று அவர்களது இருக்கின்ற வலையமைப்புகள்

என்பவற்றை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்; அத்துடன் அவை எளிமையான மொழியில் ‘எப்படிச் செய்வது’ மற்றும் ‘என்ன செய்வது’ என்பது தொடர்பான தகவல்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். இது இடம்பெயர்ந்த மக்கள் நம்பிக்கையுடன் முன்வந்து நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து பயனடைவதற்கு உதவும்.

9.134 காணி ஆவணப்படுத்தல் மற்றும் உபயோகிப்பவர் உரிமை விடயங்களை மேற்பார்வை செய்வதற்காக ஸ்தாபிக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட இரண்டு குழுக்களுள், பிரதேச சிவில் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரின் நியமனத்தை நிகழ்ச்சித்திட்டம் எதிர்பார்க்கின்றதுடன், அந்த உத்தியோகத்தர் பாதுகாப்புபடைகளின் ஒரு உத்தியோகத்தவராகவும் இருப்பர். இரண்டு குழுக்களும் சிரேஷ்ட சிவில் நிர்வாக அதிகாரிகளினால் தலைமை தாங்கப்படுவதுடன், பெரும்பாலான உறுப்பினர்கள் சிவில் நிர்வாகத்திலிருந்தே பெற்றுக்கொள்ளப்படுவர் என ஆணைக்குழு கவனத்தில் கொள்கிறது. பாதுகாப்புப் படைகள் இயலுமான விரைவில் சிவில் நிர்வாகம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்வதற்கு அரசாங்கத்திற்கு ஆணைக்குழு ஓர் கொள்கையாக பலமாக ஆலோசனை அளிப்பதுடன் பரிந்துரையும் செய்கின்றது. உத்தேசிக்கப்பட்ட காணி மீளளிப்புச் செயன்முறைகளில் பாதுகாப்பு படை உத்தியோகத்தர்களின் பங்களிப்பு தொடர்பாக, சில காணிகள் பாதுகாப்பு நோக்கங்களுக்காக தற்போது பாவிக்கப்பட்டு வரும் உண்மையை ஆணைக்குழு அறிந்துள்ளது. அதேவேளையில் அந்தப் பங்குபற்றுதலானது, பாதுகாப்புக் கரிசனைகளைக் கவனத்தில் கொண்டும், ஆனால் மக்களைத் தங்களுக்கு சௌகரியமான பகுதிகளில் குடியமர்வதற்கு அனுமதிக்கும் கொள்கையின் குறிக்கோளுக்கான முதன்மைப்படி, அத்தகைய காணிகளின் அதிகூடிய இடப்பரப்பை விரைவாக விடுவிப்பதற்கு மட்டுப்படுத்தப்பட்டு உயர் அளவில் உபயோகப்படுத்தப்படல் வேண்டும்.

9.135 முதலாவது (விசாரணைக்) குழு மற்றும் இரண்டாவது (விசாரணைக்) குழு என்பவற்றுடன் தொடர்புபட்டதாக அவதானிப்புக் குழுக்கள் மூலம் சமூகக் கலந்தாலோசனை எனும் ஒரு முறையை புதிய நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தியுள்ளதை ஆணைக்குழு கவனத்தில் கொள்கிறது. அவதானிப்புக் குழுக்களைக் கட்டமைக்கும் சமூக உறுப்பினர்கள் புலன்விசாரணை தீர்மானச் செயன்முறைகளைக் கண்காணிப்பதற்கும் மற்றும் அவசியமானவாறு இரண்டு குழுக்களுக்கும் இடவமைவு தொடர்பான குறித்த தகவல்களை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. சில வகையான சமூக கலந்தரையாடல்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டமையை பாராட்டும் வேளையில், ஒவ்வொரு மாவட்ட செயலகப் பகுதிகளிலுமான முதலாவது குழுக்கள் நன்கு விளம்பரப்படுத்தப்பட்ட ‘சமூகக் கலந்தாலோசனைக் கூட்டத்தை’ முதலாவது குழு விசாரணைச் செயன்முறைகளுக்கு முன்னதாக ஒழுங்கேற்பாடு செய்து நடாத்துவதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கிறது. இது, சம்பந்தப்பட்ட பகுதிகளில் மீள்திரும்பிய/மீள்குடியேறிய சமூகங்கள் தங்களது பிரச்சினைகள் மற்றும் கட்டுப்பாடுகளை தெரிவிப்பதற்கும், அதே போன்று புலன் விசாரணைச் செயன்முறையை மேம்படுத்துவதற்கு பயனுள்ளதும் மற்றும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்குமான வாய்ப்பை அளிக்கின்றது. காணிப் பிரச்சினைகள் தொடர்பான புலன்விசாரணைகள் எவ்விதம் நடாத்தப்படுகின்றன, மற்றும் தங்களது பிரச்சினைகளுக்கு நியாயமான விரைவான தீர்வுக்கு வசதியளிப்பதற்கு ஒவ்வொரு வகையிலுமான விண்ணப்பதாரிகள் என்ன வகையான குறித்த நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பவற்றை விளக்குவதற்கும் இந்த மன்றத்தை முதலாவது குழு உபயோகிக்கலாம். இது, தாங்களும் செவிமடுக்கப்படுகிறோம் என்கின்ற நம்பிக்கை உணர்வை மக்களுக்கு அளிக்கும். தங்களது சம்பந்தப்பட்ட பகுதிகளில் என்ன வகையான பிரச்சினைகளை எதிர்பார்க்க முடியுமென்கின்ற ஒரு

முன்கண்ணோட்டததையும் முதலாவது குழு பெற்றுக் கொள்ளும். அத்தகைய சமூகக் கலந்தாலோசனைக் கூட்டங்கள் வழமையான காணிக் கச்சேரி முறையின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடப்பட்டு நடாத்தப்படுவதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

9.136 'சமூகக் கலந்தாலோசனைக் கூட்டங்களில்' ஊடாக மேற்கொள்ளப்பட்ட ஆக்கபூர்வமான ஆலோசனைகளை விரைவாகக் கவனத்தில் கொள்வதற்கானதொரு பொறிமுறையை காணி ஆணையாளர் நாயகம் ஸ்தாபிப்பதற்கும், மற்றும் இந்த யோசனைகளை நிகழ்ச்சித்திட்டத்தின் களமட்ட முறைமைகளை மேலும் மேம்படுத்துவதற்கு பொருத்தமானவையாக கருதுவதற்கும் ஆணைக்குழு பரிந்துரைக்கிறது.

9.137 நிகழ்ச்சித்திட்டத்தின் பயனுறுதியானதும் மற்றும் வினைத்திறனானதுமான அமுலாக்கத்திற்கு உதவியாக ஓர் குறிப்பிட்ட காலத்திற்கு புதிதாக ஆட்சேர்த்தல் மற்றும்/அல்லது விசேட கடமைக்காக பணிக்கப்படுதல் மூலமாக காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்திற்கு மேலதிக நிர்வாக சேவை ஊழியர்களை தற்காலிகமாக விசேட கடமைக்காக பணித்தல், மற்றும்/அல்லது தகுதியான மற்றும் திறமையான ஓய்வுபெற்ற ஊழியர்களை நியமிப்பதன் மூலம் அமுல்படுத்தலின் எல்லா மட்டங்களிலுமான மனித வள அணிகளை வலுப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமென ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

9.138 மேற்குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் சிலவற்றின் அமுல்படுத்துதல் மேலதிக நிதி ஒதுக்கீடுகள் மற்றும் கால அவகாசங்களைத் தேவைப்படுத்தும் என்பதை ஆணைக்குழு உணர்கிறது. இருந்தபோதிலும், உத்தேசிக்கப்பட்ட மேலதிக நடவடிக்கைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்துதலை வலுப்படுத்துமென்பதுடன், சமூகத்திற்கான நன்மைகளை அதிகரிக்கும் என்பது ஆணைக்குழுவின் கருத்தாகும்.

9.139 நிகழ்ச்சித்திட்டமானது வடக்கு மற்றும் கிழக்கில் உண்மையாகவே காணிகளற்ற குடும்பங்களுக்கு காணிகளை வழங்கவதற்கு எதிர்பார்ப்பதையும் ஆணைக்குழு கவனத்தில் கொள்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டளைப்படியோ அல்லது இன்றியோ இரண்டாவது குடியிருப்பாளர்களாக இருந்த அனைத்துக் குடும்பங்களுக்கும், விசாரணைக் குழுத் தீர்மானங்களின் விளைவாக தற்போது அவர்கள் குடியிருக்கும் காணிகள் உண்மையான அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு திரும்ப அளிக்கப்படின், காணிகள் வழங்கப்படுவதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கிறது. எவ்வாறாயினும், சில மோசடியான ஆட்கள் இடைக்காலத்தில் மேலும் காணிகளைப் பெற்றுக் கொள்வதற்காக இரண்டாவது குடியிருப்புநிலையை உபயோகிக்கலாம் என்பதால், இரண்டாம் நிலைக் குடியிருப்பாளர்கள் உண்மையிலேயே காணியற்றவர்கள் தானா என்பதை, சந்தேகத்திற்கு இடமின்றி விசாரணைக்குழுக்கள் தெளிவுபடுத்துதல் வேண்டும்.

9.140 உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படும் வரை, ஏனைய அனுமதிக்கப்பட்ட நோக்கங்களுக்காக அரச காணிகள் தேவைப்பட்டாலன்றி, உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் தவிர்ந்த ஏனையவற்றுக்கு அரச காணிகளின் ஏதேனும் பராதீனப்படுத்தலைத் தவிர்ப்பதற்கு கடுமையான கட்டுப்பாடுகள் பிரயோகிக்கப்படுவதற்கும் ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. மோசடி உறுதிகள் மூலம் அரச காணிகளின் பராதீனப்படுத்தல் தொடர்பாக தகவல்கள் உள்ளதினால், அத்தகைய சட்ட விரோத நடவடிக்கைகளைப் புரியும் அல்லது அத்தகைய நடவடிக்கைகளுக்கு உடந்தையாக இருக்கும் வேறு எவரேனும் நபர்களுக்கு எதிராக பொருத்தமான சம்பவங்களில் விசாரணைகளை

மேற்கொள்ளவும் மற்றும் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இயலுமான வகையில் சம்பந்தப்பட்ட அதிகாரங்களுக்க சட்ட ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.

9.141 பல்தரப்பு அல்லது இருதரப்பு அபிவிருத்திப் பங்காளர்கள் மூலம் தேசிய எதிரிணை நிதியைக் குறைநிரப்புவதற்கு அமைக்கப்பட்ட சர்வதேச நிதி உதவிகள் நிகழ்ச்சித் திட்டத்தின் அமுல்படுத்துதலில் உதவமுடியுமென ஆணைக்குழு நம்புகின்றது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கான போட்டித் தன்மையான கேள்விகள் காணித்துறைக்கான நிதி அளித்தல்களை எதிர்மறையான வகையில் பாதிக்கக் கூடுமென்பதால் அத்தகையதொரு ஏற்பாடு நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்துதலில் ஏதேனும் மந்தநிலையடைதலுக்கான சாத்தியத்தை தவிர்க்கலாம். நிகழ்ச்சித்திட்டத்தின் கொள்கை, தீர்மானம் மேற்கொள்ளுதல் மற்றும் அமுல்படுத்தல் என்பவற்றுக்கு பொறுப்பாக இலங்கை அரசாங்கம் இருக்கும் என்ற புரிந்துகொள்ளுதலின் அடிப்படையில், நிகழ்ச்சித்திட்டத்தின் உதவிக்கு ஒரு அபிவிருத்திப் பங்காளியின் ஒத்துழைப்பை இலங்கை அரசாங்கம் ஆர்வத்துடன் நாடுதல் வேண்டுமென ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

9.142 பலாலி மற்றும் திருகோணமலை-சம்பூர் என்பவற்றிலான உயர் பாதுகாப்பு வலயங்கள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு சுமார் 21,491 பேர்கள் தங்கள் இடங்களுக்கு மீள் திரும்பியிருப்பதாக கணிக்கபட்டிருப்பதை ஆணைக்குழு பாராட்டுகிறது. எவ்வாறாயினும், குறைக்கப்பட்ட இரண்டு உயர் பாதுகாப்பு வலயங்களினுள் இன்னமும் 26,755 பேர்கள் இடம்பெயர்திருப்பதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. பலாலி மற்றும் திருகோணமலை-சம்பூர் ஆகிய இடங்களிலுள்ள இரண்டு உயர் பாதுகாப்பு வலயங்களும், அதே போன்று மாவட்டங்களில் பாதுகாப்பு நோக்கங்களுக்காக தற்போது உபயோகிக்கப்பட்டு வரும் சிறியளவிலான தனியார் காணிகளும் தேசிய பாதுகாப்புக்கான தேவைகள் என்ற கண்ணோட்டத்தில் வைத்திருக்கப்படும் அதேவேளை கூடுதலான காணிகளை விடுவிக்கும் ஓர் நோக்குடன் அவை மீள்பரிசீலணைக்கு உட்படுத்தப்படல் வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. முறைசார் வகையிலான உயர் பாதுகாப்பு வலயங்கள் அல்லது ஏனைய முறைசார் வகையிலில்லாத அல்லது பாதுகாப்புத் தொடர்பான தற்காலிகத் தேவைகளுக்காக தங்கள் நிலங்கள் மற்றும் அல்லது வீடுகளை இழந்த குடும்பங்கள் அனைத்தும் மாற்றுக் காணிகள் வழங்கப்படுவதற்கும் அல்லது பொருத்தமான சட்டங்களுக்கு அமைவாக இழப்பீடுகள் அளிக்கப்படுவதற்கும் ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. மேலும், மாற்றுக் காணிகள் மற்றும் அல்லது இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் என்பவற்றுக்கான ஏற்பாடுகள் ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் பூர்த்தி செய்யப்படுவதற்கும் ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

9.143 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதற்காக, அரசாங்கம் அபிவிருத்திப் பங்காளிகளின் உதவியுடன், திட்டமிட்ட காலப் பகுதிகளுக்கும் நீண்டதான ஒரு காலத்திற்கு பிரதேசத்திற்கு பிரதேசம் என்றதொரு அடிப்படையில், 'புதிய இடம்பெயர்ந்த' குடும்பங்களுக்கு தேவையானவாறு வாழ்வாதார உதவிகளை நீடித்தல் வேண்டுமென ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. வட மாகாணத்தின் சில பிரதேசங்களில் வாழ்வாதார உதவிகளுக்கான முன்னெடுப்புகள் அதன் உண்மையான 6 மாதங்களிலிருந்து 9 மாதங்கள் வரை நீடிக்கப்பட்டிருப்பதை ஆணைக்குழு மகிழ்ச்சியுடன் கவனத்தில் கொள்கிறது. பயிர்செய்கையில் ஈடுபடும் விவசாயிக் குழுக்களுக்கு சிறு கடன்கள், விவசாயக் கூட்டுறவுகளுக்கு உழவு இயந்திரங்கள், அதே போன்று வடக்கில் நீர்ப்பாசனமில்லாத பகுதிகளில் மேட்டுநிலப் பயிர்ச்செய்கைக்கான உலர்-விவசாய முறைகளின் பாவனை மீது சாத்தியமான முன்மாதிரி செயல்திட்டங்களை அறிமுகப் படுத்தல் போன்ற விஸ்தரிப்பு ஆலோசனைகள் மற்றும் ஏனைய உதவிகள் உட்பட

வாழ்வாதார உதவிகளின் மேலும் விஸ்தரிப்புகளுக்கு ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. (வட மாவட்டங்களிலுள்ள அரசாங்க அதிபர்கள் சமர்ப்பித்த தரவுகளுக்கு அமைவாக) தற்போது வட மாகாணத்தில் கணிசமான அளவிலான நீர்ப்பாசன குளங்கள் செயற்படுவதை ஆணைக்குழு கவனத்தில் கொள்கிறது. மாகாணத்தில் நீர்ப்பாசனக் குளங்களைத் திருத்தியமைக்கும் பணிகளின் தற்போதைய வேகம், அநேகம் ஐக்கிய நாடுகள் முறைமையின் உதவியுடன், எஞ்சியுள்ள அனைத்து சிறிய நீர்ப்பாசனக் குளங்களும் செயல்படும் நிலைக்கு கொண்டுவரப்படும் வரை தொடரப்படுவதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

9.144 கிழக்கில் மோதல்கள் முடிவுற்று 04 வருடங்கள் கடந்துள்ள போதிலும், விசேடமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகக் குறைந்தளவிலான முன்னேற்றங்களே மேற்கொள்ளப் பட்டுள்ளதினால், கிழக்கு மாகாணத்தில் தங்களது விவசாய நிலங்களிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளினால் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டதனொரு விளைவாக வாழ்க்கை நிலைமைகள் மிகவும் மோசமடைந்த முஸ்லிம் குடும்பங்களின் காணிப் பிரச்சினைகள், பயனுறுதியான வகையிலும் மற்றும் விரைவாகவும் தீர்க்கப்படுவதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

9.145 யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்ட சிங்களக் குடும்பங்கள் தொடர்பாக உள்ள உத்தியோகபூர்வத் தரவுகள் தவறானவையாகக் காணப்படுவதை ஆணைக்குழு கவனத்தில் கொள்கிறது. கூடுதல் துல்லியத்துடனான தரவுகளைப் பெறும் முகமாக, இந்த விடயம் உணர்ச்சிகளுக்கு ஆட்படாத வகையிலும் மற்றும் குறைந்த கவனயீர்ப்புடன் ஆனால் சீரான முறையில் ஏதேனும் இனரீதியான உணர்வுகள் அல்லது பதட்டங்களைத் தூண்டாமல் பரிசீலிக்கப்படுவதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. யாழ்ப்பாணத்தில் இருந்தும் மற்றும் வட மாகாணத்தின் ஏனைய பகுதிகளிலிருந்தும் வெளியேற்றப்பட்ட சிங்களக் குடும்பங்களில் தன்னிச்சையாக திரும்பிச் செல்வதற்கு விரும்பியவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றங்கள் திருப்திகரமானவையல்ல என்பதால், இயலுமான விரைவில் அவர்கள் தங்களது சொந்தக் காணிகளுக்கு மீள்திரும்புவதற்கு அல்லது மாற்றுக் காணிகளில் மீள்குடியேற்றப்படுவதற்கும் ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

9.146 யாழ்ப்பாணம் மற்றும் வட மாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் தொடர்பில், யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர்களால் வழங்கப்பட்ட தகவல்கள்படி மீள்திரும்புதல் மற்றும் மீள்குடியேற்றம் என்பவற்றில் நல்ல முன்னேற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதை ஆணைக்குழு கவனத்தில் கொள்கிறது. யாழ்ப்பாணம் மற்றும் வட மாகாணத்திற்கு தன்னிச்சையாக மீள்திரும்புவதற்கு விரும்பும் எஞ்சிய முஸ்லிம் குடும்பங்களின் மீள்திரும்புதல் மற்றும் மீள்குடியேற்றங்கள் என்பன விரைவுபடுத்தப்படுவதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

9.147 முன்னர் அச்சுறுத்துலுக்குள்ளாகிய கிராமங்களில் வசிக்கின்ற, விசேடமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் வருமானமீட்டும் குடும்பத் தலைவர்களை இழந்த அல்லது குடும்பப் பாதுகாப்புக்காக ‘இரவு வேளைகளில் இடம்பெயர்வதற்கு’ கட்டாயப்படுத்தப்பட்ட சில குடும்பங்களின் காணிப்பிரச்சினைகள் மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் என்பன பெரிதும் மறுக்கப்பட்டோ அல்லது கவனம் செலுத்தப் படாதிருப்பதை ஆணைக்குழு கவலையுடன் கவனத்தில் கொள்கிறது. இந்த அறிக்கையைப் பூர்த்தி செய்யும் வரை, பெண்கள், பேரப் பெற்றொர்கள், வயதில் மூத்த சகோதரங்கள், மற்றும் தாரமிழந்த தந்தைகள் போன்றவர்களால் தலைமை தாங்கப்படுவதாக கருதப்படும் ஓர் கணிசமான வீதத்தினரான இக்குடும்பங்களின்

தற்போதைய நிலைமைகள் குறித்து போதியளவான தகவல்களை ஆணைக்குழு பெறவில்லை. இத்தகைய பிரிவினர் இருக்கின்ற அரசாங்க நிர்வாகப் பொறிமுறைகளில், அதே போன்று மோதலிற்கு பின் பரிணாமம் பெறும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் அரசியல் ஆதரவோ அல்லது செல்வாக்குக்கான சக்தியையோ கொண்டிராததினாலும், அவர்களது தற்போதைய பிரச்சினைகளை விரைவாகத் தீர்ப்பதற்கு ஒரு விசேட பொறிமுறையை வடிவமைக்கும் ஒரு நோக்கில், அச்சுறுத்தல்களுக்கு உள்ளான முன்னைய கிராமங்களிலுள்ள குடும்பங்களின் பிரச்சினைகள் மற்றும் இடம்பெயர்தல்களின் விசேட தன்மைகளை ஆராய்வதற்கு ஓர் கவனம் செலுத்தும் அமைப்பு நியமிக்கப் படுவதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

9.148 பலவந்தமான வெளியேற்றம் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கில் தனியார் காணிகளில் இரண்டாம்நிலைக் குடியிருத்தல்களை சட்டரீதியானதாக்குவதை தவிர்க்கும் முகமாக, மோதல் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட காணி மாற்றங்கள்/குடியிருத்தல்கள் என்பவற்றுக்கான அதன் பிரயோகங்களில் ஆட்சியுரிமை தொடர்பான சட்டம் திருத்தப்படல் வேண்டுமென்பது ஆணைக்குழுவின் கருத்தாகும்.

9149 ஏப்பிரல் 2008 இற்கு முன்னதாக இடம்பெயர்ந்தவர்கள், அவர்களுள் ஒரு கணிசமான வீதத்தினர் 1980களிலிருந்து இடம்பெயர்பவர்களாக 'பழைய இடம்பெயர்ந்த மக்கள்' என அழைக்கப்படுபவர்களால் முகங் கொடுக்கப்படும் நிலைமைகளையிட்டு ஆணைக்குழு கவலை கொள்கிறது. பழைய இடம்பெயர்ந்த மக்கள் அரசு மற்றும் ஏனைய அக்கறை கொண்ட செயற்பாட்டாளர்களின் நடவடிக்கையின்மை அல்லது மந்தமான நடவடிக்கை என்பவற்றினால் தாங்கள் பாரபட்சப்படுத்தப்பட்டதாக உணர்கின்றனர். இந்தப் பரிந்துரையானது, 'பழைய இடம்பெயர்ந்த மக்களின்' மீள்திரும்புதல் மற்றும் மீள்குடியேற்றம் என்பவற்றுக்காக வாதாடும் மொத்தப் பரிந்துரையாக, பரிந்துரைகள் [9.151, 9.153, 9.154, 9.155, மற்றும் 9.156] என்பவற்றுடன் தொடர்புபட்டுள்ளது. 'பழைய இடம் பெயர்ந்த மக்களின்' பிரச்சினைகளின் அளவை அரசாங்கம் உறுதி செய்து கொள்ள வேண்மென்பதுடன் ஐக்கிய நாடுகளின் உதவியுடன், தன்னிச்சையாக மீள்திரும்புவதற்கு விரும்பும் இந்த இடம்பெயர்ந்த ஆட்கள் மீள்திரும்புவதற்கு அல்லது மீள்குடியேறுவதற்கு ஒரு திட்டத்தை ஆரம்பித்தல் வேண்டுமென்பது ஆணைக்குழுவின் கருத்தாகும். மேலே [9.138] இல் விபரிக்கப்பட்டுள்ள உத்தேசிக்கப்பட்ட வேலைத்திட்டமும் பழைய இடம்பெயர்ந்த மக்களின் தன்னிச்சையான மீள்திரும்புதல் அல்லது மீள்குடியேற்றம் மற்றும் அவர்களது தோட்டம் மற்றும் விவசாய நிலங்களின் மீளளித்தலுக்கு உதவுவதற்கு பயன்படுத்தப்படலாம். அவர்களது இதயம் மற்றும் நெஞ்சிலிருந்து தாம் அநீதியாக அல்லது பாரபட்சமாக நடாத்தப்படுகிறோம் என வெளிப்படும் ஏதேனும் உணர்வு இன ஒற்றுமை மற்றும் தேசிய நல்லிணக்கத்தைப் போஷிப்பதில் மோசமான பாதிப்பை ஏற்படுத்தலாம். இடம்பெயர்தல்கள் மீதான ஐக்கிய நாடுகளின் வழிகாட்டல் கோட்பாடுகள் அதே போன்று இடம்பெயர்ந்தவர்களின் காணி மீளளித்தல்கள் மீதான ஐக்கிய நாடுகளின் வழிகாட்டல் கோட்பாடுகள் என்பன இடம்பெயர்ந்திருந்த காலங்கள் அல்லது இடம்பெயர்ந்ததிற்கான காரணங்கள் என்பவற்றால் இடம்பெயர்ந்தவர்களை தகுதிப் படுத்தவில்லை என்பதைக் கவனத்தில் கொள்வதும் முக்கியமானதாகும். நிதிக் கட்டுப்பாடுகள், அரசியல் கரிசனைகள் அல்லது சர்வதேச அழுத்தங்கள் என்பவற்றின் காரணமாக நன்மைகளை மட்டுப்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட சௌகரியமான நிர்வாக வரைவிலக்கணங்களைக் கவனத்தில் கொள்ளாது, இடம்பெயர்ந்த அனைத்து ஆட்களும் சமனான உரிமையை அனுபவிக்கின்றனர்.

9.150 எதிர்காலத்திற்குப் பொருத்தமான தேசிய காணிக் கொள்கை வழிகாட்டல்களைப் பிரேரிக்கும் முகமாக ஓர் தேசிய காணி ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதன் மீதான நடவடிக்கையை அரசாங்கம் விரைவுபடுத்த வேண்டுமென்பது ஆணைக்குழுவின் கருத்தாகும். காணிக் கொள்கையை உருவாக்குவதில், உத்தேசிக்கப்பட்ட தேசிய காணிகள் ஆணைக்குழு அரச காணிகளின் ஒப்புரவான விநியோகத்திற்கான வழிகாட்டல்களை உள்ளடக்குதல் வேண்டும். 13ஆவது திருத்தத்தின் கீழ் இதுவொரு தேவைப்பாடாகவும், மற்றும் இதற்காக ஒரு சட்ட மூலம் உருவாக்கப்பட்டபோதிலும், அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் அதனை பாராளுமன்றம் மூலம் சட்டமாக்குவதற்கு தவறியதை ஆணைக்குழு வருத்தத்துடன் கவனத்தில் கொள்கிறது.

9.151 தற்போதையதும் மற்றும் எதிர்காலச் சந்ததிகளின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்தும் நோக்குடன் சுற்றுச்சூழல் மற்றும் உயிரியல் பன்மைத்துவம்; நிலையான பொருளாதார அபிவிருத்தி; ஓய்வு மற்றும் பொழுதுபோக்குத் தரங்கள்; மத, கலாச்சார மற்றும் தொல்லியல் புராதனத் தலங்கள் என்பவற்றைப் பாதுகாக்கும் முகமாக காணிப் பாதுகாப்பு மற்றும் பராதீனப்படுத்தலில் மாவட்ட நிர்வாகத்தை வழிகாட்டுவதற்கு சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளிலிருந்தும் மாவட்ட மற்றும் தேசிய நிபுணர்களின் பங்குபற்றுதலுடன் வடக்கு மற்றும் கிழக்கின் ஒவ்வொரு மாவட்டங்களிற்குமான காணிப் பாவனைக்கான ஒரு திட்டம் உருவாக்கப்படல் வேண்டுமென ஆணைக்குழு கருதுகிறது.

9.152 'வன்னி மற்றும் யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்த ஆட்கள் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விவசாய நிலங்களையும் மற்றும் அச்சுறுத்தலுககுள்ளாகிய கிராமங்களில் வீடுகளையும் இழந்த ஆட்களுக்கான (அதாவது புதியது மற்றும் பழையது ஆகிய இரண்டிற்குமான) காணி மீளளிப்பு', ஓர் தேசிய பிரச்சினையாக அங்கீகரிக்கபடுவதும் மற்றும் அரசாங்கம் மற்றும் எதிர்க் கட்சியிலுள்ள அரசியல் கட்சிகளால் குறுகிய அரசியல் ஆதாயங்களுக்கான ஒரு கருவியாக உபயோகிக்கப்படமாட்டாது என்பதில் இரு தரப்பு புரிந்து கொள்ளுதலுக்கு வருவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளிடமும் ஆணைக்குழு வேண்டுவதுடன் பரிந்துரைக்கின்றது. அத்தகையதொரு இருதரப்பு அணுகுமுறை தேசிய நல்லிணக்கத்தை முன்னேற்றுவதில் முக்கியமானதொன்றெ ஆணைக்குழு பலமாகக் கருதுகின்றது.

## *அத்தியாயம் ஏழு: மீளளிப்பு /இழப்பீட்டு நிவாரணங்கள் மீதான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள்*

9.153 ஓர் சட்டரீதியிலான கோட்பாடாக மீளளிப்பு முதனிலையை அனுபவிக்கையில் இழப்பீடு மற்றும் நிதிரீதியிலான நிவாரணம் போன்ற ஏனைய வடிவிலான நிவாரணங்கள் பொதுவாக நாடப்படுவது நன்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மீள்குடியேற்றம் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கு வசதியளிப்பதில் குறிப்பாக, இழப்பீட்டு நிவாரணங்களின் பாத்திரம், இருக்கின்ற கட்டமைப்புகள் மற்றும் கொடுப்பனவுகளின் தற்போதைய நிலை என்பவற்றை ஆணைக்குழு கவனத்தில் கொண்டது. கொடுப்பனவுகளுக்குத் தகுதியானவர்கள் ஒரு நியாயமான காலவெல்லைக்குள் அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளை கொண்டிருப்பதை உறுதிசெய்வதற்கு ஆணைக்குழுவின் பரிந்துரைகள் முயல்கின்றன.

9.154 ரேப்பியா (ஆட்கள், சொத்துக்கள் மற்றும் கைத்தொழில்களின் புனருத்தாரண அதிகாரசபை - REPPIA) என்பது பயங்கரவாதிகளின் வன்முறை மற்றும் அரசாங்கப் பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கை காரணமாக இழப்புகள்/சேதங்களால் பாதிக்கப்பட்ட ஆள்/ஆட்களுக்கான இழப்பீட்டு நிவாரணங்கள் மீது இலங்கை அரசாங்கத்தின் கொள்கை அமுல்படுத்தலுக்குப் பொறுப்பான விசேட நிறுவனமாகும். ரேப்பியா நிறவனத்தின் தலைவர் அதனால் வழங்கப்படும் இழப்பீட்டு நிவாரணங்களை 'ஆறுதல் மற்றும் நிவாரணம்' என பொருள்வாதம் கொள்கிறார். அதன் நோக்கம் நடைமுறையிலுள்ள பல்வேறு நிவாரண மற்றும் மீள்நிர்மாண நிகழ்ச்சித்திட்டங்களை முழுமையாக்குவதாகும்.

9.155 ஆணைக்குழுவின் முன் மேற்கொள்ளப்பட்ட முறையீடுகளின் அடிப்படையிலும் மற்றும் இழப்பீட்டு நிவாரணங்களின் சம்பந்தப்பட்ட நெறிகள் மற்றும் நியமங்கள் என்பவை தொடர்பான ஆணைக்குழுவின் கவனத்தின் பேரிலும், மோதலின் பின்னான தேவைப்பாடுகளைப் பொறுப்பேற்பதற்கான அதன் பாத்திரம் மற்றும் வளங்களை சீராக்கவும் மற்றும் அதிகப்படுத்தும் ஒரு நோக்குடன் ரேப்பியாவின் பாத்திரம் மற்றும் அதன் செயற்திறன்களை அரசு நோக்குவதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

9.156 தகுதியான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு மோசமான நிதியின்மையே பாதிக்கப்பட்ட ஆட்களுக்கு நிவாரணங்களை வழங்குவதிலுள்ள மிக முக்கியமான தனியொரு பிரச்சினையாகும். ஏதேனும் முன்னேற்றங்களை ஏற்படுத்துவதற்கு இந்தப் பிரச்சினைக்கு ஒரு அவசர தீர்வை வழங்குவது அத்தியாவசியமாகும். ஏனைய நிர்வாகரீதியிலான தடைகள் சமாளிக்கக்கூடிய மட்டத்திலுள்ளதாகத் தோன்றுகிறது.

9.157 கொடுப்பனவுகளை முழுமையாகவும், மற்றும் உரிய நேரத்திலும் முன்னுரிமைப் படுத்துவதற்கான பொறுப்பை அரசாங்கம் எடுத்தல் வேண்டும். கொடுப்பனவுகளுக்காகத் தேங்கிக் கிடக்கும் விண்ணப்பங்களை தீர்த்து வைப்பதற்கும் மற்றும் அதே போன்று எதிர்காலத்தில் தாமதங்கள் மற்றும் கொடுப்பனவின்மைக்கான காரணமாக நிதியின்மையைத் தவிர்க்கும் முகமாகவும் நிதி பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

9.158 கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தும் பொறுப்பு ரேப்பியாவினால் எடுத்துக் கொள்ளப்படல் வேண்டும். தங்களுக்கான உரித்துக்களைப் பெற்றுக் கொள்வது தனிப்பட்டவரின் பொறுப்பாக இருத்தல் கூடாது. அனைத்துக் கொடுப்பனவிற்கான உரித்துக்களும் கொடுப்பனவு செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு ஒரு கால இலக்கை ரேப்பியா தானகவே நிர்ணயித்துக் கொள்ளுதல் வேண்டும்.

9.159 இறுதி மோதல்களில் ஏற்பட்ட இழப்புகளக்கான கொடுப்பனவுகளை பூர்த்தி செய்வதற்கான ஒரு கால எல்லை நிர்ணயிக்கப்படல் வேண்டும். இது இரண்டு காரணங்களுக்காகச் செய்யப்படல் வேண்டும். அவை: 1) நிதிக்கான தேவை தீவிரமாக இருக்கையில் கொடுப்பனவுகளுக்கு உரித்தானவர்கள் அதைப் பெற்றுக்கொள்வதற்கு. 2) மோதல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரேப்பியா அதன் பொறுப்பகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு, என்பவையாகும்.

9.160 கொடுப்பனவுகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு கால எல்லையை நிர்ணயிக்கும் போது பின்வருவன கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்: 1) விண்ணப்பங்களை மேற்கொள்வோர்களுக்கு நியாயமான கால அவகாசம் தேவை. காலவெல்லை ஒன்றைத் தீர்மானிக்கும் பொழுது இடம்பெயர்ந்த மக்களின் குறித்த சந்தர்ப்ப சூழ்நிலைகள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட பகுதிகளில் வாழ்ந்தவர்கள் போன்ற காரணிகள் கவனத்திற்கு எடுக்கப்படல் வேண்டும். 2) ரேப்பியாவின் செயற்திறன்

மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட காரணிகளையும் கவனத்தில் கொண்டு விண்ணப்பங்கள் மற்றும் கொடுப்பனவுகளைப் படிமுறைப்படுத்துவதற்கு எடுக்கும் ஓர் நியாயமான குறைந்த பட்ச மற்றும் அதிகூடிய கால அவகாசம். தகுதியான அனைத்து ஆட்களும் விண்ணப்பிப்பதை உறுதிப்படுத்துவதற்கு அதிகளவிலான விளம்பரப்படுத்தல் அளிக்கப்படுதல் வேண்டும்.

9.161 பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களின் தேவைகளுக்கு கல்வி மற்றும் வாழ்வாதார செயல்திட்டங்கள் என்பவை முக்கியமானவை என்பதை ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, மோதல்களினால் பாதிக்கப்பட்ட ஆட்களுக்கு இழப்பீட்டு நிவாரணங்களை அளிப்பதே ரேப்பியாவின் முதன்மைக் கவனமாக இருத்தல் வேண்டும். ஆதலால், துணை செயல்திட்டங்கள் சம்பந்தபட்ட ஏனைய அரச அதிகாரங்களால் பொறுப்பேற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

9.162 ‘பொது மக்கள்’ மற்றும் ‘அரச சேவகர்களின்’ இறப்பு, காயம் மற்றும் வீட்டு உரித்துக்களுக்கான கொடுப்பனவுகளை ரேப்பியா அவசரமாக முன்னுரிமைப்படுத்துதல் வேண்டும். அரச சார்பற்ற ஸ்தாபனங்களின் உதவி நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து, குறிப்பாக வீட்டு உதவிகளிலிருந்து அரச சேவகர்கள் தகுதியற்றவர்களாக ஆக்கப்படுவது, மீள்பரிசீலிக்கப்படுதல் வேண்டும்.

9.163 இழப்பீட்டுத் தொகைகளை அதிகரிப்பதற்கான வேண்டுகோள்கள் ரேப்பியாவிடம் விடுக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், தேக்கமடைந்துள்ள கொடுப்பனவுகள் மற்றும் நிலுவையிலுள்ள விண்ணப்பங்களை தீர்த்து முடிப்பதற்கு தேவையான நிதி உறுதிப்பாட்டைக் கவனத்தில் கொண்டு, ஆணைக்குழு இழப்பீட்டுத் தொகைக்கான அதிகரிப்பை முக்கியமானதொரு படியாகக் கவனத்தில் கொள்ளவில்லை. மேலும், இழப்பீடுகளின் கொள்கைகளைக் கவனத்தில் கொள்ளும் போது அரசாங்கத்திற்கு உள்ள மிகவும் நியாயமான உபாயம் மீள்கட்டியெழுப்புதல் மற்றும் மீள்குடியேற்றம் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு ஈடுசெய்யும் திட்டங்களை வழங்குவதாகும்.

9.164 தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் சம்பந்தப்பட்டவர்களின் இறப்பு மற்றும் காயம் என்பவற்றுக்கான இழப்பீட்டு நிவாரணம் மீதானதொரு தீர்மானம் எடுக்கப்படுதல் வேண்டும். பரந்த நல்லிணக்கக் கண்ணோட்டத்திலிருந்து, முன்னாள் போராளிகள் மற்றும் நெருங்கிய இரத்த உறவினர்களும் கூட இழப்பீட்டு நிவாரணங்களுக்கு தகுதியானவர்களாக கருதப்படல் வேண்டுமெனும் கருத்தை ஆணைக்குழு எடுக்கின்றது. எவ்வாறாயினும், ரேப்பியாவின் முன்னுரிமை மிகவும் தேவையைக் கொண்ட பாதிக்கப்பட்ட பொதுமக்களுடனானதாக இருத்தல் வேண்டும்.

9.165 வீட்டுவசதிகளுக்கான தேவைகள் அவசரமாகக் கவனிக்கப்படல் வேண்டும். மீள் திரும்பகின்ற இடம்பெயர்ந்த மக்களுக்கு வீட்டுவசதி ஓர் அடிப்படையான பிரச்சினையாகும், அது இழப்பீட்டு நிவாரணங்கள் மற்றும் ரேப்பியாவின் ஆணைக்கு மேற்பட்ட, விசேட உதவிகளின் தேவையைக் கொண்டதாகவுள்ளது. தேவையான வீடுகளின் எண்ணிக்கையையும் மற்றும் அவற்றுக்கான பெரும் செலவையும் கருத்தில் கொண்டு தேசிய மற்றும் சர்வதேசம் ஆகிய இரண்டு அளவிலும் நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களிடமிருந்தான அனைத்துச் சாத்தியமான உதவிகளின் மூலங்களை அரசாங்கம் மதிப்பிடுதல் வேண்டும்.

9.166 முடிவாக, இழப்பீட்டு நிவாரணங்களை வழங்குவது தனிப்படுத்தப்பட்டு கவனத்தில் கொள்ளப்படமுடியாது என ஆணைக்குழு கருதுகின்றது. இழப்பீட்டு நிவாரணங்களின் குறித்த பாத்திரமானது, மோதலின் மையமாகத் திகழந்த பகுதிகளில் செயற்படுத்தப்பட்டு

வருகின்ற ஒட்டுமொத்த மீள்குடியேற்ற மற்றும் அபிவிருத்தி உபாயங்களுக்கெதிராக நோக்கப்படல் வேண்டும். இவை சுகாதாரம், கல்வி, உணவு, நீர் மற்றும் விவசாயம், உட்கட்டுமானம் போன்ற அடிப்படைத் தேசிய நலன்புரி சேவைகளின் செயற்பாடுகள், அதேபோன்று வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

## *அத்தியாயம் எட்டு: நல்லிணக்கம் - பிரிவு I: மோதலிற்குப் பின்னான நல்லிணக்கம் மீது தாக்கங்களை ஏற்படுத்தும் விடயங்கள் மீதான அவதானிப்புகள்*

9.167 மோதல்கள் காரணமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிக்கப்பட்ட ஆட்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக, கொழும்பிலான அமர்வுகளின் போதும் மற்றும் குறிப்பாக கள விஜயங்களின் போதும் ஆணைக்குழுவின் முன் முறையீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

9.168 நல்லிணக்கம் மற்றும் நல்லெண்ணம், தேசிய ஒற்றுமை என்பவற்றை கட்டியெழுப்பும் சூழ்நிலையில் இந்த விடயங்களை கவனத்தில் கொள்வது அவசியம் என ஆணைக்குழு கருதியது. நாளாந்த வாழ்க்கையுடன் நேரடியாகத் தொடர்புபட்டதாக சுட்டிக்காட்டப்பட்ட பல விடயங்கள் தொடர்பாக, ஆணைக்குழு சிவில் நிர்வாகத்தினர்கள் (அரசாங்க அதிபர்கள்) மற்றும் பாதுகாப்புப் படைகள் என்பவற்றிடமிருந்து இற்றைப்படுத்தல்களைக் கோரியது, அத்துடன் அது 2011 இல் வெளியிட்ட வட மாகாணத்தில் மீள்குடியேற்றம், அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான ஜனாதிபதி செயலணியின் அறிக்கை, மத்திய வங்கி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு என்பவற்றின் அறிக்கைகள், அதே போன்று மனிதாபிமான முகவரமைப்புகளை ஒருங்கிணைப்பதற்கான அலுவலகத்தினால் தயார் செய்யப்பட்ட இணைந்த மனிதாபிமான மற்றும் முன்கூட்டிய மீட்சி இற்றைப்படுத்தல் அறிக்கைகள் என்பவற்றையும் கவனத்தில் எடுத்தது. இவ்வறிக்கைகள் அனைத்துமே குறிப்பிடத்தக்க கணிசமான முன்னேற்றம் மேற்கொள்ளப்பட்டிருப்பதையும் மற்றும் கேள்வி எழுப்பப்பட்ட விடயங்கள் மீது முன்னேற்றங்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதாகக் குறிப்பிட்டன.

9.169 அரசாங்க அதிபர்களின் பதில்கள் உட்பட, அதனால் பரிசீலிக்கப்பட்ட ஆவணங்களிலிரந்து ஆணைக்குழு பின்வருவனவற்றை அவதானிக்கின்றது:

- அனைத்துப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலும் மக்களின் மீள்குடியேற்றம், வாழ்வாதாரம், கல்வி, மருத்துவம், போக்குவரத்து மற்றும் நிரந்தர குடியிருப்புத் தேவைகள் என்பவற்றின் மீது கவனம் செலுத்துவதற்கு ஒன்றுபட்டுத் திட்டமிடப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதிக முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளன (நிதி மற்றும் ஏனைய உதவிப் பொதிகளின் வழங்கல்கள் ஊடானவை உட்பட). அநேகமான பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் பிரதான தொழிலான விவசாயம் அதிகரித்த உற்பத்தியைக் கண்டுள்ளதுடன் மீன்பிடி உற்பத்தியும் முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது. உட்கட்டுமான அபிவிருத்திகள் நன்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எவ்வாறாயினும், இந்தப் பகுதிகளில் இன்னமும் கவனிக்கப்படாத தேவைகள் தொடர்ந்துமுள்ளன. சில மீன்பிடிக்கும் இடங்கள் இன்னமும் அணுகப்பட முடியாதவையாகவும் மற்றும் சில மாவட்டங்களில் மீன்பிடிப்பதற்கு கடற்படையிடமிருந்து அனுமதியும் தேவைப்

படுவதாகவுள்ளது. கணிசமான எண்ணிக்கையிலான நீர்ப்பாசனக் குளங்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டு உபயோகிக்கப்பட்டு வருகையில், எஞ்சியுள்ள குளங்களின் புனருத்தாரணம் தொடர்பான ஒரு துரித திட்டம் விவசாய உற்பத்திகளுக்கு மேலும் உதவும். சில சந்தர்ப்பங்களில் மீள்குடியேற்றத்திற்கான உதவிகள் இன்னமும் நிலுவையாக உள்ளதுடன் தகுதியாவதற்குத் தேவையான ஆவணங்களை வழங்குவதில் சிரமங்கள் உள்ளதாகக் காணப்படுகின்றது. ஆசிரியர்களுக்கான இடவசதி மாவட்டங்கள் முழுவதற்குமான ஒரு பொதுவான பிரச்சினையாக உள்ளது.

- காணி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்ந்தும் ஒரு சவாலாக உள்ளன.

- உண்மையான பொறுப்பேற்றல்கள் மற்றும் விநியோகங்கள் என்பவற்றுக்கு எதிரான நிரந்தர குடியிருப்புத் தேவைப்பாடுகள் ஒரு தீவிர கரிசனைக்குரியவையாக உள்ளன.

- சில இடர்நேரல் ஆபத்துக் கொண்ட குழுக்களின் தேவைகள் கூடுதல் கவனத்துடனான அணுகுமுறையைத் தேவைப்படுத்துகின்றது.

- சில மாவட்டங்களில் சிவில் நிர்வாகத்தின் மீள் ஸ்தாபித்தல் இன்னமும் பின்தங்கியதாகவுள்ளது. கிராம சேவகர் பதவிநிலைகளில் பல வெற்றிடங்கள் காணப்படுகின்றன – கீழ் மட்டத்திலான சிவில் நிர்வாகத்தில் கிராம சேவகர் பதவி ஒரு முக்கியமான நிலை என்பதால் இந்த வெற்றிடங்களை நிரப்புவதில் ஓர் முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டுமென்பது ஆணைக்குழுவின் கருத்தாகும்.

9.170 எவ்வாறாயினும், முப்பது வருட காலத்திற்கு நீடித்த மோதல்களின் தன்மையைக் கவனத்தில் கொள்ளும் போது, அத்தகைய பிரச்சினைகள் அனைத்தையும் தீர்ப்பதென்பது இயல்பாகவே கால அவகாசத்தையும் மற்றும் கணிசமான வளங்கள் மற்றும் நிதியளித்தலைத் தேவைப்படுத்தும் என்ற யதார்த்தத்தை ஆணைக்குழு ஏற்றுக்கொள்கின்றது. வடக்கு மற்றும் கிழக்கிற்கு கணிசமான நிதி மற்றும் வளங்களை அளிப்பதற்கு இலங்கை அரசாங்கம் உண்மையில் பற்றுறுதி கொண்டுள்ளதுடன் இலங்கையின் அபிவிருத்திப் பங்காளர்கள் இந்த முயற்சிகளுக்காக பங்களிப்பதுடன் அரசாங்க முகவரமைப்புகளுடன் கூட்டுறவாகச் செயற்படுகின்றன. இலங்கை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள் நாடு முழுவதிலும் பிரஜைகள் அவர்களது அடிப்படைத் தேவைகளுடன் உதவி செய்யப்படுவதையும் மற்றும் பொருளாதார நன்மைகளை சமத்துவமாகப் பகிர்ந்து கொள்ள முடிவதையும் உறுதிப்படுத்துவதிலான அதன் பங்கின் ஓர் ஏற்றுக்கொள்ளுதலையும் மற்றும் பற்றுறுதியையும் எடுத்துக் காட்டுகின்றன. அதே வேளை, வளங்கள், விடய அறிவு மற்றும் அனுபவம் என்பவற்றை ஒன்றுதிரட்டுவதில் அதன் அபிவிருத்திப் பங்காளர்களின் முழுமையான உள்ளாற்றலைப் பெற்றுக்கொள்ளும் முகமாக உள்நாடு மற்றும் வெளிநாட்டிலுள்ள அபிவிருத்திப் பங்காளர்கள் நோக்கியதாக கூடுதல் ஈடுபாட்டுடனான ஆக்கபூர்வமான கொள்கையொன்றை இலங்கை அரசாங்கம் கடைப்பிடித்தல் வேண்டுமெனும் கருத்தை ஆணைக்குழு கொள்கிறது. அத்தகையதொரு கொள்கை மீள்நிர்மாணம், அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கம் என்பவற்றில் எஞ்சியுள்ள சவால்களை எதிர்கொள்வதில் சிறந்த உறுதிப்பாடுடையதாக இருக்கும்.

9.171 பாதுகாப்பு படைகள் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்கு பணியாற்றி தொடர்ந்து பங்களித்து வருகையில், சில மாவட்டங்களிலுள்ள தனியார் காணிகளில்

அவர்கள் சிறிய வியாபாரங்கள் மற்றும் விவசாய நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுவதாக கரிசனைகள் தெரிவிக்கப்படுவதை, சிவில் நிர்வாகிகள் மற்றும் ஏனையவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பதில்களிலிருந்து ஆணைக்குழு மேலும் அறிந்து கொள்கிறது. இவற்றைவிட சில சந்தர்ப்பங்களில், வீட்டுவசதி உதவிகளுக்கான பயனாளிகளைத் தெரிவு செய்வது உட்பட பல்வேறு நடவடிக்கைகளுக்கு சில மாவட்டங்களில் பாதுகாப்புப் படைகளின் அனுமதி தேவைப்படுவதாகத் தோன்றுகிறது. சில அரச கட்டிடங்கள் மற்றும் தனியார் காணிகள்/கட்டிடங்கள் தொடர்ந்தும் பாதுகாப்புப் படைகளினால் உபயோகிக்கப்பட்டு வருவதை கிடைக்கப் பெற்ற பதில்கள் சுட்டிக்காட்டின. பாதுகாப்புப் படைகளினால் சிவில் நடவடிக்கைகளிலான ஈடுபடுதல் மற்றும் தனியார் காணிகளின் உபயோகித்தல் என்பவற்றிலிருந்து விலகுவதற்கு நியாயமான ஒரு காலக்கெடு அளிக்கப்படுவதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

9.172 தரவுகளை, குறிப்பாக சிவில் நிர்வாகிகளால் வழங்கப்பட்டவற்றை பகுப்பாயும் போது, ஒவ்வொரு மாவட்டத்தினாலும் முன்னேற்றங்கள்/பிரச்சினைகளை அறிவிப்பதில், ஓர் நியம அறிக்கையிடல் பொறிமுறையினூடாக, அடையப்பெற்ற முன்னேற்றத்திற்கு எதிராக தேவைகளின் இடைவெளிக்கானதொரு பகுப்பாய்வுடன், ஒரு சீரானதும் மற்றும் ஒளிவுமறைவற்ற அணுகுமுறைக்கான ஓர் தேவையுள்ளது. சம்பந்தப்பட்ட பிரச்சினைகளின் பன்முகத்தன்மையைக் கவனத்தில் கொள்ளும் போது இதுவொரு கடினமான பணியாக இருக்கலாம், ஆனாலும் அது இன்னமும் கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கியமான பிரச்சினைகளை பேரின அதே போன்று நுண் மட்டங்களில் ஓர் பரந்தளவில் புரிந்து கொள்வதற்கு இயலச் செய்வதில் நீண்ட தூரம் உதவும்.

## *அத்தியாயம் எட்டு: நல்லிணக்கம் - பிரிவு II: நல்லிணக்கம் மீதான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள்*

9.173 சுமார் மூன்று தசாப்தங்களுக்கு நீடித்த மோசமான மோதல்களின் முடிவு வெவ்வேறுபட்ட சமூகங்களுக்கிடையே, விசேடமாக சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பல வாய்ப்புகளைத் திறந்து விட்டுள்ளது. சுதந்திரமான, நீதியான, சமத்துவமான, திறந்த மற்றும் பன்மைத்துவமான ஒரு சமுதாயத்திற்காக ஓர் பொதுவான தொலைநோக்கை வெளிப்படுத்துவது அவசியமாகின்றது. பகிர்ந்து கொள்ளும் ஓர் எதிர்காலத்திற்கான ஒரு தொலைநோக்கின் உருவாக்கம் முழுச் சமுதாயத்தினதும் ஈடுபாட்டைத் தேவைப்படுத்துகிறது. கடந்த காலத்தின் இழப்புக்கள் மற்றும் துயரங்களை ஏற்றுக்கொண்டும் மற்றும் இழப்பீடு, சமூகநீதி மற்றும் இயல்புநிலைக்கான மீள்நிலைநாட்டல் மற்றும் பச்சாதாபம், ஒற்றுமை என்பவற்றுக்கான வெளிக்காட்டல் என்பன நிவாரணத்தை இலக்காகக் கொண்ட படிமுறைகளாகும். பொதுவானதன்மை மற்றும் வேறுபாடுகளை ஏற்றுக்கொள்ளும் அதே வேளை வன்முறை மோதல்களைத் தொடர்ந்து உறவுமுறைகளைக் கட்டியெழுப்புதல், நம்பிக்கையீனம், தப்பபிப்பிராயம் மற்றும் சகிப்புத்தன்மையின்மை போன்ற விடயங்கள் மீது கவனம் செலுத்துதல் என்பன நல்லிணக்கத்திற்கு இன்றியமையாதவையாகும்.

9.174 சந்தேகம், அச்சம், அவநம்பிக்கை மற்றும் வன்முறை என்பவற்றுக்கான கலாச்சாரம் நீக்கப்பட்டு மக்கள் ஒருவரையொருவர் கேட்பதற்கும் மற்றும் கேட்கப்படுவதற்குமான வாய்ப்புகளும் இடைவெளிகளும் திறக்கப்படல் வேண்டும்.

9.175 ஆணைக்குழுவின் முன் தோன்றிய நூற்றுக்கணக்கான ஆட்கள் அல்லது வேறுவகையில் அதனுடன் தொடர்பு கொண்டவர்கள் அனைவரும் அநேகம் ஓர் ஏகமனதானதும் மற்றும் தவறாகக் கொள்ள முடியாததுமான செய்தியை ஆணைக்குழுவிற்குத் தெரிவித்தனர். அந்தச் செய்தி இரண்டு விடயங்களைக் கொண்டிருந்தது.

9.176 முதலாவதாக, சுமார் மூன்று தசாப்தங்கள் நீடித்த துன்பம் நிறைந்ததும் மற்றும் சோர்வடையச் செய்யும் மோதல்களிலிருந்து வெளிப்பட்டு, அனைத்துச் சமூகத்தைச் சேர்ந்த மக்களும் தற்போது நிலையான சமாதானம், பாதுகாப்பு, நட்புறவு மற்றும் ஒற்றுமைக்காக ஏங்குகின்றனர். இந்த நாட்டின் அரசியல் தலைவர்களால் தீர்க்க இயலாத அல்லது தீர்ப்பதற்கு விரும்பாத பிரச்சினைகளுக்கான தீர்வைக் காணும் முகமாக இந்த ஆசீர்வதிக்கப்பட்ட பூமியில் மீண்டும் இரத்தம் சிந்துதலை அனுமதித்தல் கூடாது என்பதை உறுதிப்படுத்துவதற்கு தங்களால் முடிந்த அனைத்தையும் செய்வதற்கும் அவர்கள் அதேயளவிற்கு உறுதியாகவிருந்தனர்.

9.177 இரண்டாவது, தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வந்ததும் மற்றும் ஓர் நிறைவேற்று ஜனாதிபதியால் தலைமை தாங்கப்படும் ஒரு உறுதியானதும் மற்றும் பரந்த அடிப்படையிலுமான அரசாங்கத்தின் அவதாரம் வாய்ப்புகளுக்கான பெரியதொரு சாளரத்தை திறந்துள்ளது என்பதாகும். அது, அனைத்து சமூகங்களுக்கும் மத்தியிலான நல்லிணக்கம், நல்லெண்ணம் மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றை முன்னேற்றி, சிறுபான்மையினரின் மனக்குறைகளுக்கு அரசியல் தீர்வுகளை வழங்கியும் மற்றும் அனைத்துப் பிரஜைகளின் சட்டபூர்வமான உரிமைகளின் மெய்யுறுதலை உறுதிப்படுத்தும் ஓர் விதத்தில் ஒரு தொகுதி அதிகாரப் பிரச்சினைகள் மீது கவனம் செலுத்துவதற்கு ஓர் கருத்தொருமித்த முன்செல்லும் வழியை ஏற்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாகும்.

9.178 நல்லிணக்கம் மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புதலிற்கு செய்ய வேண்டியது என்னவெனில் அரசு சிறுபான்மையினர்களை அண்மித்தல் வேண்டுமென்பதுடன் பதிலுக்கு சிறுபான்மையினர் அரசு மற்றும் நாட்டிலான தங்களது பாத்திரங்களில் தங்களை மீள் நிலைப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

9.179 அனைத்து அரசியல் கட்சிகளினதும் தரப்பிலும் விரோத அரசியலைக் கைவிட்டு தேசியப் பிரச்சினைகள் மீது கருத்தொருமித்து தீர்மானம் மேற்கொள்ளுவதற்கான ஆர்வம் இருத்தல் வேண்டும். இந்த சந்தர்ப்பத்தின் சவால்களுக்கு முகங் கொடுப்பதற்கு அனைத்து அரசியல் கட்சிகளினதும் தரப்பில் உறுதியும் அரசியல் துணிவும் இருத்தல் வேண்டும்.

9.180 ஆணைக்குழுவின் முன் தோன்றிய பலரும் பாதுகாப்புப் படைகளினால் அடையப்பட்ட இந்த வெற்றியானது தேசத்திற்கான நிலையான சமாதானம் மற்றும் பாதுகாப்பு மற்றும் இரு சமூகங்களுக்கிடையில் நீடித்த நல்லெண்ணம், நட்புறவு மற்றும் ஒற்றுமை என்பவற்றுக்கான ஒரு சகாப்தத்திற்கு இட்டுச் செலவதற்காக முதலீடு செய்யப்படல் வேண்டும் என வலியுறுத்தினர். ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் நாட்டின் இறையாண்மை என்பவற்றைப் பேணி இலங்கை நீண்ட காலமாகப் போற்றி வளர்க்கும் ஜனநாயக விழுமியங்கள், சகிப்புத்தன்மை மற்றும் அதிகாரப் பகிர்வு என்பவற்றைப் பாதுகாக்கும் அதேசமயம் இந்தப் பொறுப்பு அடையப்பட முடியும் மற்றும் அடையப்படல்

வேண்டுமெனும் ஒரு முக்கியமான பொதுவான நிலைப்பாட்டை அதன் முன் முறையீடுகள் செய்த பல்வகையான மக்களிடையே ஆணைக்குழு மீண்டும் கண்டது.

9.181 மோதல்கள் முடிவுற்று இரண்டு வருடங்கள் கழிந்த பின்னரும் கூட வன்முறை, சந்தேகம் மற்றும் பாரபட்ச உணர்வு என்பன இன்னமும் சமூக மற்றும் அரசியல் வாழ்க்கையில் நிலவுகிறது என்பது குறித்து ஆணைக்குழு நினைவுபடுத்தப்பட்டது. மோதல்களுக்கு பின் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் ஓர் தெளிவான திட்டமிட்ட நிகழ்ச்சிநிரலை நடைமுறைப்படுத்துவதிலான தாமதம் இந்த நிலைமைகளுக்கு பங்களித்திருக்கக்கூடும்.

9.182 ஆகையால், கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள்/பரிந்துரைகள் என்பன ஆணைக் குழுவின் முன் தோன்றிய பலராலும் தெரிவிக்கப்பட்ட தெளிவான தற்போதைய ஆபத்துக்கள் மற்றும் அதே போன்று வாய்ப்புக்கள் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட ஆணைக்குழுவின் கவனத்திற்குரிய கண்ணோட்டங்களைப் பிரதிபலிக்கின்றன. அத்துடன் அவை அனைத்து இலங்கையர்களாலும் மூன்று மட்டங்களில், அதாவது, அரசியல் தலைமைத்துவ மட்டத்தில்; சிவில சமூக மட்டங்களில் மற்றும் தனிப்பட்ட பிரஜைகள் மட்டத்திலுமாக பொறுப்பேற்கப்படுவதற்கான ஓர் கூட்டு முயற்சியை ஏற்படுத்துவதற்கு நாடுகின்றன.

9.183 எவ்வாறாயினும், இந்தச் செயன்முறையைப் பிரதானமாக முன்னெடுக்கும் பொறுப்பு முற்றிலுமாக அரசாங்கத்திலேயே தங்கியுள்ளதை ஆணைக்குழு வலியுறுத்த விரும்புகின்றது. நல்லிணக்கம் என்பது தனியே ஒரு நேர நிகழ்வாக இல்லாமல் ஓர் தொடர்ச்சியான செயன்முறையாக உள்ளதினால், அந்தக் குறிக்கோள் நோக்கியதான முயற்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தால் முழுவதுமாக ஆதரவளிக்கப்படும் அதே வேளை தொடர்ச்சியானதாகவும் மற்றும் பரந்துபட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

9.184 இலங்கையில் இன மோதல்களுக்கான மூல காரணம் தமிழ் மக்களின் உண்மையான மனக்குறைகள் மீது அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் கவனம் செலுத்தத் தவறியமை மீதேயுள்ளது என்ற கண்ணோட்டத்தையே ஆணைக்குழுவும் எடுக்கின்றது.

9.185 மோதல்களின் மூலகாரணங்கள் மீது கவனம் செலுத்தும் ஒரு அரசியல் தீர்வு முக்கியமானதாகும். அது பற்றி அனைவரும் பேசுகின்றனர், இருந்தாலும் அதனை ஆய்ந்துணர்ந்து தீர்த்து வைப்பதில் இணக்கப்பாடு இன்னமும் இல்லை.

**தமிழ் சமூகத்தின் மனக்குறைகள்**

9.186 தமிழ் சமூகத்தின் மனக்குறைகள் இன மோதல்கள் மற்றும் அதற்கான காரணங்கள் மீதான விளக்கங்களில் வெளிப்படையாகவே உருவகப்படுத்தப்பட்டன.

9.187 தமிழ் மக்களினால் மனக்குறைகளுக்கான வெளிப்படுத்தல் தொடர்ந்தும் தமிழ் - சிங்கள உறவுகளின் மையத்தில் தங்கியுள்ளதுடன் அது அங்கீகரிக்கப்பட்டு மோதலின் பின்னான நல்லிணக்கச் செயன்முறை மற்றும் சமாதானமான சகவாழ்வு என்பவற்றின் ஒரு முதல் படியாக நேரடியாகவும் மற்றும் நியாயமான வகையிலும் கவனம் செலுத்தப்படல் வேண்டும். கால ஓட்டத்தில் இந்தக் குறைகள் மாற்றம் பெற்றிருக்கும் என்பதில் சந்தேகமில்லை என்பதுடன் அவற்றில் சில பகுதியளவிலேனும் கையாளப்பட்டிருக்கலாம். எவ்வாறாயினும், மோதல்கள் அதிகரித்த போது புதிய பல குறைகளும் கூடியிருக்கலாம். அந்தச் செயன்முறையில் பெரும்பான்மைச் சமூகம் மற்றும் ஏனைய சிறுபான்மைச் சமூகங்களும் கூட தங்கள் பங்கிற்கான குறைகளைக் கொண்டிருக்கலாம்.

### இலங்கையில் பெரும்பான்மை – சிறுபான்மை இனங்களுக்கிடையிலான உறவுகள் தொடர்பான வரலாற்றுப் பின்னணி

9.188 சோல்பரி ஆணைக்குழு அறிக்கை சிறுபான்மையினத்தின் குறைபாடுகள் என அழைக்கப்படுபவற்றுக்கு கணிசமான இடத்தை ஒதுக்கியுள்ளது.

9.189 ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைகளைக் கையாள்வதற்கு நிர்வாக மற்றும் அரசியலமைப்பு ரீதியான பாதுகாப்புகள் அவசியமானவையென சோல்பரி ஆணைக்குழு முடிவு செய்த வேளை, பெரும்பான்மையினம் மற்றும் சிறுபான்மையினம் ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று கொண்டுள்ள முற்சார்பு நிலையில் ஓர் அடிப்படை மாற்றமின்றி இவையெதுவும் போதுமானதாக இருக்காது. இலங்கை நல்லிணக்கச் செயன்முறைகளில் தற்போது உள்ளதினால் இரு தரப்பிலுமான இந்தக் கண்ணோட்டங்கள் இரண்டு சமூகங்களுக்குமிடையிலான உறவுகளில் ஒரு காத்திரமான தாக்கத்தைக் கொண்டுள்ளதுடன் தற்போது முடிவுற்ற மோதல்களுக்கு காரணமானவை எவை எனும் கேள்விகளுக்கு பதிலளிக்க முயல்வதென்பது, ஆணைக்குழுவின் பார்வையில் மிகவும் பொருத்தமானதாகும்.

9.190 குறைகள் மீது கவனம் செலுத்தும் செயன்முறைகள் இன்றைய அரசியல் தலைவர்களால் சுமுகமாகவும் மற்றும் நன்நோக்குடனும் செயற்படுத்தப்படவில்லை. அது, தமிழ் பேசும் சமூகங்களும் மற்றும் அனுகூலமற்ற நிலையிலான ஏனைய சமூகங்களும் கௌரவத்துடன் நடாத்தப்பட்ட ஒரு செயன்முறையாக இருக்கவில்லை. தமிழ் சமூகத்தின் மத்தியில் நிலவும் குறைகளுக்கான வலுவான உணர்வு அச்செயன்முறையின் வலிகள் மற்றும் அநீதிகளிலிருந்த எழுந்தவையாகும்.

9.191 இனங்களுக்கிடையிலான உறவுகளில் தீர்க்கமான பிளவு முதலில் 1958ஆம் ஆண்டுக் கலவரத்தில் தோன்றி பின்னர் 1977 இலும், மற்றும் 'கறுப்பு ஜூலை' எனப்படும் 1983ஆம் ஆண்டுக் கலவரத்தில், அப்போதைய அரசாங்கம், தமிழ் பிரஜைகளுக்கு போதுமான பாதுகாப்பை வழங்குவதற்கு மோசமாகத் தவறியதில் உச்ச நிலையை அடைந்தது. தமிழ் சமூகம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அவர்களது மனக்குறைகள் என்பன தமிழ் மற்றும் சிங்கள சமூகங்களுக்கிடையிலான உறவுகளை நாசப்படுத்திய இந்த வன்முறைக் கலாச்சாரம் பற்றிய ஓர் முழுமையான புரிந்து கொள்ளல் இல்லாமல் முழுமையாகக் கவனம் செலுத்தப்பட முடியாது.

தமிழ் சமூகத்தின் குறைகள் மற்றும் மோதலிற்கு பின்னர் அனைத்துச் சமூகங்களுக்கும் பொதுவான மனக்குறைகள் என்பவை மீதான முக்கியமான அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் என்பன பந்தி 9.200 இலிருந்து குறிப்பிடப்பட்டுள்ளது.

### முஸ்லிம் சமூகத்தின் மனக்குறைகள்

9.192 ஒக்டோபர் 30, 1990 அன்று தமிழீழ விடுதலைப் புலிகளால் முஸ்லிம் சமூகத்தின் வலுக்கட்டாயமான வெளியேற்றத்துடன் வடக்கில் வாழும் முஸ்லிம்களின் பிரச்சினை ஆரம்பமாகியது. இந்தப் பிரதேசங்களில் (வடக்கு மற்றும் கிழக்கு) தமிழீழ விடுதலைப் புலிகளினால் துப்பாக்கி முனையில் மேற்கொள்ளப்பட்ட இனத்துடைப்பினால் பாதிக்கப்பட்டவர்களாக முஸ்லிம்கள் இருந்தனர்.

9.193 வட மாகாணத்தில் முஸ்லிம் சமூகங்கள் மீதாக காண்பிக்கப்பட்ட நடாத்துதல்கள், அவர்கள் அரசாங்கம், சர்வதேச அரசசார்பற்ற ஸ்தாபனங்கள், அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் மற்றும் சர்வதேச சமூகம் என்பவற்றின் முன்னுரிமைக்கான பட்டியலில் கீழ்மட்டத்திலிருப்பதாக நம்புவதற்கு அவர்களை இட்டுச் சென்றது.

9.194 இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் வட மாகாணத்தில் தங்களது சொந்த இடங்களுக்கு விரைவாக மீள்திரும்புவதற்கு அரசாங்கம் வசதியளித்தல் வேண்டும்.

9.195 தமிழீழ விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்ட அல்லது சேதமாக்கப்பட்ட பள்ளிவாசல்கள், வீடுகள் மற்றும் பாடசாலைகள் என்பவற்றை மீள்கட்டுவதற்கு உதவுவதற்கான உடனடி நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்தல் வேண்டும்.

9.196 உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் நலன்புரி திட்டங்களை அமுல்படுத்தும் தேசிய மற்றும் சர்வதேச முகவரமைப்புகள் 'பழைய இடம்பெயர்ந்த மக்கள்' என்றழைக்கப்படுவர்கள் மற்றும் ஏனைய இடம்பெயர்ந்த மக்கள் ஆகியோர்களுக்கிடையில் நிலவுகின்ற பாரபட்சக் கண்ணோட்டங்கள் குறித்தான எண்ணத்தை மனதில் கொண்டிருத்தல் வேண்டும். சர்வதேசம் மற்றும் உள்ளூர் கவனங்கள் என்பன புதிதாக இடம்பெயர்ந்த மக்கள் மீது செலுத்தப்பட்டதுடன், சந்தேகத்திற்கிடமின்றிய வகையில் அவை அவர்களுக்குத் தேவையானவையாக இருந்தமையால், அதன் பயனான பரிந்துரைத்தல்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்ட முன்னெடுப்புகள் என்பன அவர்கள் சார்பில் அமுல்படுத்தப்பட்டமை, 'பழைய இடம்பெயர்ந்த மக்களால்' உணரப்பட்ட பாரபட்ச உணர்வை அநேகம் அதிகரித்து விட்டிருக்கலாம். சமத்துவமின்மை தொடர்பாக பழைய இடம்பெயர்ந்த மக்களின் கண்ணோட்டங்கள் சில நியாயங்களைக் கொண்டுள்ளது எனும் கருத்துடன் ஆணைக்குழு உடன்படுகின்றது. சமத்துவமும் பாரபட்சமின்மையும் இலங்கை ஏற்று அங்கீகரித்த ஐக்கிய நாடுகளின் அனைத்து மனித உரிமை உடன்படிக்கைகளினதும் முக்கியமான கோட்பாடுகளாகும். இவ்விதமாக, 'பழைய இடம்பெயர்ந்த மக்கள்' தொடர்பான கையாளுதல்களில் சமத்துவம், பாரபட்சமின்மை என்பவற்றை இலங்கை அரசாங்கம் அதன் அபிவிருத்திப் பங்காளிகளுடன் சேர்ந்து கவனத்தில் கொள்வதற்கான பொறுப்பு அதன் மேல் அது சுமத்தப்பட்டுள்ளது.

### முன்னைய மோதல் பிரதேசங்களை அடுத்துள்ள சிங்கள கிராமங்களின் குறைகள்

9.197 இந்த கிராமங்களில் வசித்ததும் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப் பட்ட பயங்கரவாதத்தில் தப்பிப்பிழைத்ததுமான பொதுமக்களை இலங்கை அரசாங்கம் புறக்கணிக்க முயல்கின்றது என்பதே இந்தப் பகுதிகளிலுள்ள மக்களின் கருத்தாகும். இந்தக் கிராமங்களிலுள்ள மக்கள் தெற்கின் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயராது தங்கள் உயிர்களுக்கான பெரும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தொடர்ந்து வசித்தனர். பாதுகாப்பு அபாயங்களை எதிர்நோக்குவதற்கு அப்பால், இந்தக் கிராமங்களில் வாழுகின்ற மக்கள் கல்வி, தகர்ந்தும் மற்றும் முறிந்து போனதுமான ஜீவனோபாயங்கள், போதியளவில் இல்லாத சுகாதார மற்றும் போக்குவரத்து வசதிகள் என்பவற்றில் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்தனர். சமாதானத்தின் பயன்களை அனுபவிப்பதற்கு சமனாக நடாத்தப்படுவதற்கான தேவையை இந்தக் கிராமத்தவர்கள் எடுத்துக் கூறினர்.

9.198 இந்தப் பிரதேசங்களிலுள்ள மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்கான கவனத்தில் அவர்களின் தேவைகளை இனங் காண்பதற்கு ஆழமானதொரு ஆய்வை அரசாங்கம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

9.199 இக்கிராமங்களிற்கு சமனான வள ஒதுக்கீடு மற்றும் அபிவிருத்தி என்பவற்றை அரசாங்கம் உறுதி செய்தல் வேண்டும் எனும் கருத்தை ஆணைக்குழு கொண்டுள்ளது. அன்றேல், வேறுபட்ட இனக்குழுக்களால் ஆதிக்கம் செலுத்தப்படும் கொத்தணிக் கிராமங்களில், குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் ஏமாற்றம் மற்றும் இனப் பதட்டங்களுக்கு இது இட்டுச் செல்லலாம்.

## இந்திய வம்சாவளித் தமிழர்களின் மனக்குறைகள்

9.200 ஆணைக்குழுவுக்கு இந்திய வம்சாவளித் தமிழர்களினாலும் முறையீடுகள் செய்யப்பட்டன என்பதுடன் அவர்கள் வாழும் பகுதிகளில் கல்வி மற்றும் சுகாதார வசதிகளின்மை தொடர்பான அவர்களது கரிசனைகளைத் தெரிவித்தனர், மேலும் தோட்டங்களில் நிலவும் வாழ்க்கை நிலைமைகளையும் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டுவந்தனர். ஆணைக்குழு இந்தக் கரிசனைகளைப் பாராட்டுவதுடன் சுகாதாரம் மற்றும் கல்வி வசதிகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் தோட்டப்புறங்களில் சிறந்த வாழ்க்கை நிமைமைகளை வழங்குவதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு அரசாங்கத்திற்கு பரிந்துரைக்கின்றது.

9.201 மோதலின் பின் ஓர் பாரிய அபிவிருத்திக்கான நிகழ்ச்சிநிரல் மற்றும் நல்லிணக்கத்திறகான நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன இந்திய வமசாவளித் தமிழர்களின் அத்தியாவசியத் தேவைகளையும் கவனத்தில் கொள்வதற்கும் ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

### மனக்குறைகள் மீது கவனம் செலுத்துதல் மற்றும் நல்லிணக்கத்தை முன்னேற்றுதல் தொடர்பான பிரச்சினைகள்

### சட்டவாட்சிக்கான பயனுறுதியை அளிக்கத் தவறுதல்

9.202 ஆணைக்குழு முன் முறையீடுகளை மேற்கொண்ட பலரும், அரசியல் ஆதரவு கொண்ட ஒரு பெரும் எண்ணிக்கையிலானோரே குற்றங்களைப் புரிந்தனர், ஆனாலும் சட்டத்தினை அமுல்படுத்தும் அதிகாரங்கள் மீது பிரயோகிக்கப்பட்ட அரசியல் அழுத்தங்கள் காரணமாக சட்டத்தின் நீண்ட கரங்கள் அவர்களை எட்டவில்லை எனத் தெரிவித்தனர். ஏதேனும் அர்த்தமுள்ள நல்லிணக்கம் இருக்க வேண்டியதாயின், அதன் சாராம்சமாகிய சமாதானம் மற்றும் ஸ்திரத்தன்மை என்பவற்றுக்கு சுயாதீனமானதொரு நீதித்துறையோடு சட்டவாட்சியைக் கடுமையாகக் கடைப்பிடிக்கும் ஓர் ஒளிவுமறைவற்ற சட்டச் செயன்முறை அவசியமானதொன்றாகும். அர்த்தமுள்ள ஒரு அதிகாரப் பகிர்வின்மையோடு இணைந்ததாக நல்லாட்சியின்மை மற்றும் சட்டவாட்சியை மதிக்காமை என்பன சமூகங்களுக்கிடையில் பதட்டங்கள் ஏற்படுவதற்கான காரணங்களாக அமைகின்றன என சொல்லப்படுகின்றது.

9.203 ஆணைக்குழுவின் தீர்க்காலோசனையின் போது தோன்றிய விடயங்கள் பின்வருமாறு:

அ. அரசியல் தொடர்புகள் கொண்ட நபர்களால் குற்றங்கள் புரியப்பட்டவிடத்து, குற்றங்களைப் புலன்விசாரித்து குற்றமிழைத்தவர்களை சட்டத்தின் முன்கொண்டு வருவதற்கு சட்டத்தை அமுல்படுத்தும் உத்தியோகத்தர்கள் தரப்பிலான தவறுதல்.

ஆ. மோதல்கள் முடிவடைந்துள்ள போதிலும் சட்டமும் ஒழுங்கும் தொடர்பிலான முக்கியமான பிரச்சினைகள் தொடர்ந்து இன்னமும் உள்ளன. ஆயுதக் குழுக்களால் தொடரும் பணம் பறித்தல் மற்றும் ஆட்கடத்தல்கள், காணாமற்போதல்கள், கொள்ளையடித்தல் போன்ற ஏனைய குற்றவியல் நடவடிக்கைகளால் வடக்கு மற்றும் கிழக்கில் வாழுகின்ற மக்களின் மனங்களில் அச்சவுணர்வு உள்ளது. எண்ணற்ற அரசியல்வாதிகள் சட்டத்தின் விளிம்பில் நின்று செயற்படுவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. சமுதாயத்திலுள்ள குற்றவாளிகளுடனான அவர்களது தொடர்புகள் காரணமாக பொலிசார் மீது முறையற்ற செல்வாக்கைப் பிரயோகிப்பதன் மூலம் நீதியின் போக்கையே சீர்கெடச்செய்து விளைவாக பொலிஸ்துறையை அவர்கள் அரசியல் மயப்படுத்துகின்றனர்.

இ. சூட்டாயுதங்களின் பாவனையுடன் இணைந்த அரசியல் வன்முறைகள் இந்த நாட்டின் சட்டத்திற்கு கட்டுப்பட்ட மக்கள் மத்தியில் பெரும் கரிசனைகளை ஏற்படுத்தியுள்ளது. அரசியல் வன்முறைகளின் அதிகரிப்பு மற்றும் அரசியல்வாதிகள் மற்றும் அவர்களது ஆதரவாளர்களால் சட்ட விரோத ஆயுதங்கள் வைக்கப்பட்டிருத்தலையும் மற்றும் பாவனைகளையும் ஆணைக்குழு கரிசனையுடன் நோக்குகின்றது.

9.204 சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்பவர்களின் ஆயுதங்களைக் களைவதற்கும் மற்றும் அத்தகைய குற்றமிழைத்தவர்கள் மீது சட்ட நடவடிக்கையை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ளுதல் வேண்டுமென ஆணைக்குழு பலமாக பரிந்துரைக்கின்றது.

9.205 இந்த அறிக்கையை எழுதும் சமயத்தில், அண்மையில் முடிவடைந்த உள்ளூராட்சிமன்ற தேர்தல்களைத் தொடர்ந்து, ஒரு தொகை இறப்புக்கள் மற்றும் காயங்களை ஏற்படுத்திய, ஒரே அரசியல் கட்சியைச் சேர்ந்த இரண்டு அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்ட ஒரு மோசமான சூட்டுச் சம்பவம் பற்றி அறிய நேர்ந்தது. அரசியல்வாதிகளால் பரஸ்பரம் இடமளிப்பதற்குத் தவறியதும் மற்றும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இத்தகைய அப்பட்டமான வன்முறைகளை நாடுகின்ற சம்பவங்கள், இந்த தேசிய நல்லிணக்கச் செயன்முறை சமயத்தில் மக்கள் பிரதிநிதிகளிடம் இருந்து எதிர்பார்க்கப்படுவதற்கு எதிரான ஓர் மோசமான எடுத்துக் காட்டாகவே அமைகின்றது.

9.206 ஆணைக்குழு, முறையீடு செய்த பலரினாலும் அதன் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட பின்வரும் சம்பவங்களை குறிப்பாகச் சுட்டிக்காட்டுவதற்கு விரும்புகின்றது.

9.207 கிழக்கு மாகாணத்தில் பாரதி எனப்படும் ஒரு நபர் ஆட்கடத்தல், பணம் பறித்தல், கொள்ளை போன்ற பல குற்றங்களைப் புரிந்ததாக குற்றஞ் சாட்டி பல குற்றச்சாட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த விடயம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு ஆணைக்குழுவினால் கொண்டுவரப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்ட குற்றமிழைத்தவருக்கு எதிராக எந்தவொரு அர்த்தமுள்ள நடவடிக்கையும் எடுக்கப்படாமை குறித்து ஆணைக்குழு தன் கவலையைத் தெரிவிக்கின்றது. சுமார் அறுநூறு பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் ஆட்கடத்தல்களுக்கு உள்ளாகிய ஓய்வு பெற்ற இரண்டு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் முறையீடுகளை மேற்கொண்ட இருவர், ஆயுதங்களைக் கைவிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சரணடைவதற்கு கட்டளையிடப்பட்டு, கொலை செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பாக, ஏனைய பல தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உறுப்பினர்களோடு கிழக்கு மாகாணத்தின் அப்போதைய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவராக இருந்த கருணாவின் ஈடுபாடு தொடர்பாக குற்றஞ் சாட்டிக் குறிப்பிட்டனர்.

முறையீட்டாளர்களால் மேற்கொள்ளப்பட்ட குற்றச்சாட்டுக்களை அனுசரித்து ஆணைக்குழு கருணா எனப்படும் திரு. முரளிதரனை, அவருக்கெதிராக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டு குறித்து வினவியது. கொலைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை அவர் மறுத்தார்.

எவ்வாறாயினும், இற்றைவரை கொல்லப்பட்ட அறுநூறு பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பாக புலன்விசாரணைகள் எதுவும் நடாத்தப்படவில்லை என்பது குறித்து ஆணைக்குழு கவலை தெரிவிக்கின்றது. குற்றங்களின் தன்மை மற்றும் நல்லிணக்கத்தில் அது கொண்டுள்ள தாக்கம் என்பவற்றினால் இந்த விடயத்தில் ஓர் முழுமையான புலன்விசாரணை தேவையென்பது ஆணைக்குழுவின் கருத்தாகும்.

9.208 ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களால் புரியப்பட்ட பணம் பறித்தல் நடவடிக்கைகள் பற்றி பல முறையீட்டாளர்கள் முறைப்பாடு செய்தனர். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கெதிராக பல முறைப்பாடுகள் உள்ளதினால், இந்தக் குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக ஒரு முழுமையான புலன்விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டுமென்பது ஆணைக்குழுவின் கருத்தாகும். புலன்விசாரணையின்மை குற்ற விலக்களிப்புக்கான ஓர் உணர்வை உருவாக்கும்.

9.209 பாதுகாப்புப் படைகளின் வசதிகளை ஓர் பாதுகாப்பாகப் உபயோகித்து, ஆட்கடத்தல்கள், பணம் பறித்தல்கள் மற்றும் கொள்ளை போன்ற குற்றங்களுடன் தொடர்புபட்டதாக, மேஜர் சீலன் என்படும் நபரொருவரினால் தலைமை தாங்கப்படும் ஓர் குழுவின் சட்ட விரோத நடவடிக்கைகளை முறையீடு செய்த பலரும் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். ஆணைக்குழு இந்த விடயத்தை பிரதேசத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்தது. இதன் பயனாக, மேஜர் சீலனின் ஓர் உதவியாளர் கைது செய்யப்பட்டுள்ளார். எவ்வாறாயினும், குற்றஞ் சாட்டப்படும் பிரதான நபர் இன்னமும் கைது செய்யப்படாமலே உள்ளார்.

9.210 இது தொடர்பில், சட்ட விரோத ஆயுதக் குழுக்கள் பற்றி அதனது இடைக்காலப் பரிந்துரைகள் அனைத்திற்கும் முழுமையான பயனுறுதியை அளிப்பதன் முக்கியத்துவத்தை ஆணைக்குழு மீள வலியுறுத்துகின்றது.

9.211 அதன் இடைக்காலப் பரிந்துரைகளுக்கு முழுமையான பயனுறுதி இன்னமும் வழங்கப்படாமை குறித்து ஆணைக்குழு வருத்தம் தெரிவிக்கின்றது.

9.212 மாகாணங்களில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் புலன்விசாரணைகள் மற்றும் வழக்குதொடர்தலை மேற்கொள்ளுதல் தொடர்பாக போதுமான சட்ட நிபுணத்துவத்திற்கான வழிவகைகளைக் கொண்டிருக்கவில்லையென ஆணைக்குழு அவதானிக்கின்றது. இத்தகைய சூழ்நிலையில், குற்றவியல் புலன்விசாரணைகள், வழக்குத் தொடர்தல் மற்றும் குற்றவியல் நீதி முறைமைகள் தொடர்பிலான ஏனைய விடயங்கள் என்பவற்றில் வழிகாட்டுவதற்கும் மற்றும் ஆலோசனை அளிப்பதற்கும் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பிரிவுகளை மாகாணங்களில் ஸ்தாபிப்பதற்கு ஆணைக்குழு பலமாகப் பரிந்துரைக்கின்றது.

9.213 நீதி நிர்வாகத்தில் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக, குற்றம் செய்தவர்களின் அரசியல் தொடர்புகளைக் கவனத்தில் கொள்ளாது குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் புலன்விசாரணை செய்யப்பட்டும் மற்றும் தவறிழைத்தவர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தண்டனையளிக்கப்படல் வேண்டுமென ஆணைக்குழு வலியுறுத்துகின்றது.

9.214 பொலிஸ் திணைக்களமென்பது சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட பொதுமக்களுக்கான ஒரு நிறுவனமாகும். ஆதலால், நாட்டின் பாதுகாப்புக்கான பொறுப்பான பாதுகாப்புப் படைகளுடன் சம்பந்தப்படும் நிறுவனங்களிலிருந்து பொலிஸ் திணைக்களம் தொடர்புபடாதிருப்பது விரும்பத்தக்கதாகும்.

9.215 பொலிஸ் துறையின் பயனுறுதியான செயற்பாட்டுக்கு உத்தரவாதமளிக்கவும் மற்றும் பொதுமக்களின் நம்பிக்கையை ஏற்படுத்தவும் சுயாதீனமான நிரந்தர பொலிஸ் ஆணைக்குழு ஓர் முன் நிபந்தணையாகவுள்ளது என்பது இந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் கருத்தாகும். அத்தகையதொரு ஆணைக்குழு பொலிஸ் சேவைகளின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கும் மற்றும் அனைத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களும் சுயாதீனமான முறையில் செயற்பட்டு, ஓர் உயர் தரத்திலான தொழில்சார் நடத்தையைப் பேணுகின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கும் அதிகாரமளிக்கப்படல் வேண்டும்.

### ஆட்சி தொடர்பான விடயங்கள்

9.126 இனத்துவரீதியான வேறுபாடின்றி அனைத்துப் பிரஜைகளையும் பாதிக்கும் நிர்வாக முறைகளிலான குறைபாடுகள் மற்றும் நல்லாட்சியின்மை என்பவற்றிலிருந்தே சிறுபான்மையினரின் சில மனக்குறைகள் உருவானதாக குறிப்பிட்ட சமர்ப்பணங்களை ஆணைக்குழு கேட்டது. இந்தக் குறைபாடுகள், அக்கறை கொண்ட அனைத்துச் செயற்பாட்டாளர்களினாலும் ஆன ஒன்றிணைந்த நடவடிக்கைகளைத் தேவைப் படுத்துகின்றது. எவ்வாறாயினும், ஆட்சி முறைமைகள் குறிப்பாக சிறுபான்மை இனத்தவர்களிற்கு பாதகமாகச் செயற்படுமிடத்து குறித்த நடவடிக்கைகள் தேவையாகவுள்ளன.

9.217 நாட்டின் அரசியல் கலாச்சாரமானது, தங்களுக்கு உரித்தான பல சேவைகள் மற்றும் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு அரசியல்வாதிகளில் தங்கியிருக்கும் விதத்தில் பொதுமக்களை அதிகாரமற்றவர்களாகவும் மற்றும் பயனற்றவர்களாகவும் ஆக்கியுள்ளது.

### பிரஜைகளின் மனக்குறைகளைக் கையாள்வதற்கான ஒரு விசேட நிறுவனம்

9.218 மக்கள் மனுக்கள் நடைமுறையை மேம்படுத்துவதற்காக 1994 ஆம் ஆண்டு 26ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், அரசின் நடவடிக்கைகளிலிருந்து எழும் பிரஜைகளின் மனக்குறைகளை பயனுறுதியான முறையில் கையாள்வதற்கு நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் அலுவலகத்துடன் சம்பந்தப்பட்ட தற்போதைய சட்டம் போதுமானதல்ல. ஆகையால், அரசாங்க அதிகாரிகள் மற்றும் நாட்டின் ஆட்சியில் ஈடுபட்டுள்ள ஏனைய தனிப்பட்டவர்கள் ஆகியோர்களின் அதிகார துஷ்பிரயோகத்திலிருந்து எழுகின்ற, அனைத்துப் பிரஜைகளினதும், குறிப்பாக சிறுபான்மையினரின் மனக்குறைகள் மீது கவனம் செலுத்துவதற்கு ஓர் சுயாதீன நிறுவனத்தை அரசாங்கம் ஸ்தாபித்தல் வேண்டுமென ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. இந்தப் பொறிமுறை, அதன் செயற்பாடுகளை பயனுறுதியான வகையில் நிறைவேற்றுவதற்கு ஏதுவாக ஓர் வலுவான புலன்விசாரணை அங்கத்தைக் கொண்டிருக்கும் வகையில் உருவாக்கப்படுதல் வேண்டும்.

9.219 ஏதேனும் நிறைவேற்று அல்லது நிர்வாக நடவடிக்கையிலிருந்து, குறிப்பாக மதம் அல்லது இனத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாக எழுகின்ற குறையைக் கொண்டுள்ள இந்த நாட்டின் எந்தவொரு பிரஜையும், இந்த சுயாதீன நிறுவனத்தின் முன் பரிகாரத்தை நாடுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

9.220 இந்த நிறுவனத்தின் தீர்மானங்களுக்கு பயனுறுதியை அளிப்பதற்கான ஏற்பாடுகளும் இருத்தல் வேண்டும். மேலும், உத்தேசிக்கப்பட்ட நிறுவனத்தை பயனறுதியானதாக ஆக்கும் முகமாக, அதிகாரத்தை துஷ்பிரயோகித்த நபர்கள் தொடர்பில் தடைகளை விதிப்பதற்கும் சட்டம் ஏற்பாடளித்தல் வேண்டும்.

9.221 குறிப்பாக, இனங்களுக்கிடையிலானதும் மற்றும் மதங்களுக்கிடையிலானதுமான ஒற்றுமையை இலக்காகக் கொண்ட முறைகளின் அமுல்படுத்துதலில் கீழ் மட்டத்திலான உள்ளீடுகளை வழங்குவதன் மூலம், விசேட நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு உதவியளிப்பதற்கு ஓர் ஊட்டும் பொறிமுறையாக செயற்படுக்கூடிய வகையில் மாவட்ட் மற்றும் மாகாண மட்டங்களில் நல்லிணக்க நம்பிக்கை மற்றும் சமாதானக் குழுக்கள் ஸ்தாபிக்கப்படலாம்.

**ஏனைய முறைகள்**

9.222 அனைத்துப் பிரஜைகளினதும், குறிப்பாக சிறுபான்மையினத்தவர்களினது கரிசனைகள் மற்றும் அச்சங்கள் என்பவற்றுக்கு கூருணர்வு கொண்டதாக அரச சேவையிலான முறைகள் மற்றும் நடைமுறைகள் என்பன நெறிமுறைகள், விதிகள் மற்றும் நடத்தைக் கோவைகள என்பவற்றால் வழிகாட்டப்படல் வேண்டும். மனக்குறைக்கான ஓர் உணர்வு தோன்றுவதற்கு இடமளிக்கக்கூடிய தவறான கண்ணோட்டங்கள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு அரசாங்கத் தீர்மானங்களின் நியாயத்தன்மை குறித்தான முழுமையான ஒளிவு மறைவற்றதாக தகவல்கள் கிடைக்கும் வகையில் இருத்தல் வேண்டும். இதை நோக்கியதாக தற்போதுள்ள நடைமுறைகள் மற்றும் வழக்கங்கள் என்பன மீள் பரிசீலிக்கப்படல் வேண்டும்.

9.223 உள்ளூர் மக்களின் பங்கேற்றலுடனான கலந்தாலோசனையுடன் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை அரசாங்கம் உறுதிப்படுத்துதல் வேண்டும். நிர்வாகத்தில் அத்தகையதொரு ஒளிவுமறைவற்ற அணுகுமுறை, அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஓர் சொந்த உரிமைக்கான உணர்வையும், அதே போன்று தேசத்தைக் கட்டியெழுப்புவதில் தாம் பங்கேற்கின்றதொரு உணர்வையும் அவர்களுக்கு அளிக்கும்.

9.224 பொதுச் சேவைகளின் வேலை ஒழுக்கவியலை மேம்படுத்துவதற்கான பயிற்சித் திட்டங்கள் உட்பட, இவற்றினூடாக மனப்பாங்குகளிலான மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு ஒரு குறித்த நிகழ்ச்சித்திட்டம் உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்படுவதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

9.225 பொதுத்துறை உத்தியோகத்தர்களின் நியமனங்கள், இடமாற்றங்கள் போன்றவை தொடர்பாக ஆளும் கட்சி அரசியல்வாதிகளால் அதிகரித்த மட்டங்களிலான தலையீடுகள் பற்றிய ஒரு அதிர்ச்சி தருகின்ற நிலைப்பாடும் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

9.226 பொதுச் சேவைத்துறையில் அரசியல் தலையீடுகள் இல்லாதிருப்பதை உறுதிப் படுத்துவதற்கும் மற்றும் பொதுச் சேவைகளிலான நியமனங்கள் மற்றும் பதவியுயர்வுகள் என்பன அரசியலமைப்பின் சமத்துவ ஏற்பாடுகளுடன் இணங்கியதாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்குமாக தாமதமின்றி ஓர் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கு இந்த ஆணைக்குழு பலமாகப் பரிந்துரைக்கின்றது.

9.227 வட மாகாணத்தின் சிவில் நிர்வாகம் மக்களின் நாளாந்த வாழ்க்கை தொடர்பான, குறிப்பாக விவசாயம், மீன்பிடி இடங்கள் போன்ற பொருளாதார நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக மீள்செயற்படுவது முக்கியமானதாகும். மக்கள்

வழமையான சிவில் வாழ்க்கைக்கு மீள்திரும்பி சமாதானத்தின் நன்மைகளை அனுபவிப்பதற்கு இயலுமான பின்னணியில் இராணுவப் பிரசன்னம் படிப்படியாக குறைதல் வேண்டும்.

9.228 சட்டவாக்கங்களின் நீதிமுறையிலான மீள்பரிசீலணைக்காக அரசியலமைப்புரீதியிலான ஏற்பாடுகளின்மை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறையீடுகளை ஆணைக்குழு கவனத்தில் கொள்கின்றது. எந்தவொரு உத்தேசிக்கப்பட்ட சட்டவாக்கத்தினதும் அரசியலமைப்புரீதியான தன்மையை உயர் நீதிமன்றத்தின் முன்பாக பயனுறுதியான வகையில் ஆராய்வதற்கு பொதுமக்கள் மற்றும் ஏனைய ஸ்தாபனங்களுக்கும் போதுமான சட்ட ஏற்பாடுகள் இருத்தல் வேண்டும். உத்தேசிக்கப்பட்ட சட்டவாக்கங்களை, குறிப்பாக அவசர சட்ட மூலங்களை உயர் நீதிமன்றத்தின் முன் ஆராய்வதற்கு, அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள கால அவகாசம் முற்றிலும் போதுமானதல்ல. அவசரச் சட்ட மூலங்கள் தொடர்பில், 24 மணித்தியால நேரத்தில் அல்லது ஜனாதிபதியால் குறிப்பிடப்படும் மூன்று நாட்களுக்கு பிந்தாத ஒரு தினத்தில் (அரசியலமைப்பின் உறுப்புரை 122(1)) தீர்மானத்தை தெரிவிப்பதற்கு உயர் நீதிமன்றம் கேட்கப்படும். உத்தேசிக்கப்பட்ட சட்டவாக்கம் தொடர்பில் பொதுமக்கள் தலையீடு உயிரோட்டமான ஜனநாயகத்தின் ஓர் உள்ளார்ந்த பகுதியாகும். ஆகையால், அரசாங்கம் மற்றும் எதிர்க் கட்சி என்பன, உத்தேசிக்கப்படும் சட்டவாக்கங்களை சவாலுக்குட்படுத்துவதற்கு போதுமான ஒரு காலவரையறைக்காக ஓர் பொருத்தமான அரசியலமைப்புத் திருத்தத்திற்கான கருத்தொருமித்தலை எட்டுவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

### அதிகாரப்பகிர்வுக்கான தேவை

9.229 ஓர் நீண்ட காலமாக அரசியல்ரீதியான கருத்தொருமித்தலை எட்டுவதற்கு எதிரான பிரதான தடையாகவிருந்த தமிழீழ விடுதலைப் புலிப் பயங்கரவாதம் முடிவுற்றதன் பின்னர், நல்லிணக்கச் செயன்முறைகளை மேலும் முன்கொண்டு செல்வதற்கான அதிகாரப் பகிர்வுக்கு வசதியளிக்கும் ஓர் அரசியல் கருத்தொற்றுமையை எட்டுவது மிகவும் முக்கியமானதாக இருக்குமென ஆணைக்குழுவின் முன் தோன்றிய பலரும் மிகத் தெளிவாகக் தெரிவித்திருந்தனர்,

9.230 மோதலிற்குப் பின்னான ஒரு சூழலில் நிலையான சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கான ஒரு கட்டமைப்பை ஸ்தாபிக்கும் நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு அரசியல் செயன்முறைக்கான தலைமைத்துவத்தை அரசாங்கம் வழங்குதல் வேண்டுமென்பது முக்கியமானதாகும். இந்த முயற்சியில், தமிழீழ விடுதலைப் புலி அமைப்பின உறுப்பினர்களாக இருந்தவர்கள் உட்பட, அனைத்துச் சமூகங்களினதும் உரிமைகள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இதற்கு, அதிகாரப் பகிர்வை அடிப்படையாகக் கொண்ட ஒரு அரசியல் தீர்வு இனப் பிரச்சினை, அதே போன்று ஜனநாயக அமைப்புகளை அச்சுறுத்தும் ஏனைய பிரச்சினைகள் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். இந்த அரசியல் செயன்முறை, அபிவிருத்திக்கான வாய்ப்புகள் மற்றும் அவசியமான சமூக-பொருளாதார கொள்கைகளின் அமுல்படுத்துதல் என்பவற்றை அளிக்கின்ற ஒரு அரசியலமைப்புரீதியான கட்டமைப்பு மற்றும் பொறிமுறைகளில் முடிவடைதல் வேண்டும்.

9.231 அதிகாரப் பகிர்வு அவசியம் மக்களை மையமாகக் கொண்டிருக்கும் தன்மையுடையதாக இருத்தல் வேண்டுமென்பதோடு பின்வரும் கரிசனைகளை மனதில் கொண்டிருத்தல் வேண்டும்:

அ. அதிகாரப்பகிர்வு நாட்டின் மக்கள் மத்தியில் கூடுதலான இணக்கப்பாடு மற்றும் ஒற்றுமையை அவசியம் முன்னேற்றுதல் வேண்டுமேயன்றி இணக்கப்பாடின்மை மற்றும் ஒற்றுமையின்மையை அல்ல. வளமான பன்மைத்துவத்தைப் பாதுகாத்து, பாராட்டும் அதே வேளை இந்த ‘ஐக்கியம்’ மற்றும் ஒரு பொது அடையாளம் என்பவற்றை முன்னேற்றுவதே அதிகாரப் பகிர்வின் எந்தவொரு வடிவத்தினதும் முக்கிய இலக்காக இருத்தல் வேண்டும்.

ஆ. அனைத்துச் சமூகத்தைச் சேர்ந்த மக்களும் ஒவ்வொரு மட்டத்திலும், விசேடமாக அரசாங்கத்தின் அனைத்து அடுக்குகளிலும் அதிகாரமளிக்கப்படுவதை உறுதி செய்வதிலே கவனம் இருத்தல் வேண்டும். அதிகாரப் பகிர்வு எந்தவொரு இனச் சமூகத்தையும் அனுகூலத்திற்கு அல்லது பிரதிகூலத்திற்கு உட்படுத்துவதாக இருத்தல் கூடாது. இந்தக் கருத்தில், அது, நாட்டிலுள்ள எந்தவொரு இனச் சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கும் பாரபட்சமானதாக இருத்தல் கூடாது அல்லது அவர்களால் பாரபட்சமானதாக காணப்படல் கூடாது.

இ. மக்களின் ஜனநாயக வலுப்படுத்தலானது, மனித உரிமைகளின் மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு என்பவற்றின் பரந்ததொரு கட்டமைப்பினுள் இடம் பெறுதல் வேண்டும். மனித உரிமைகளின் மேம்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் என்பது அரசியலமைப்பு மற்றும் நாடு தன்னார்வத்துடன் பொறுப்பேற்றுக் கொண்ட உடன்படிக்கை கடப்பாடுகள் என்பவற்றின் குறித்த ஏற்பாடுகளிலிருந்து வருவதுடன் அவை தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் ஓர் அடிப்படைக் கடப்பாடாகவும் ஆகின்றது.

ஈ. அதிகாரப் பகிர்வு தொடர்பான கேள்வி மீது கவனம் செலுத்தும் பொழுது இரண்டு விடயங்கள் அரசாங்கத்தின் கவனத்தை தேவைப்படுத்துகின்றன. முதலாவது, கீழ் மட்டத்தில் கூடுதலான மக்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்துவதற்கு உள்ளூராட்சி மன்றங்களை வலுவாக்கம் செய்தல். இரண்டாவது, மக்களின் தேவைகள் மீது கவனம் செலுத்தும் ஒரு பொருத்தமான அதிகாரப் பகிர்வு முறையை வடிவமைப்பதில் மாகாண சபைகள் முறையின் செயற்பாட்டிலுள்ள குறைபாடுகளிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களை கவனத்தில் எடுத்துக் கொள்வதும் முக்கியமானதாகும். பன்மைத்துவத்தின வளத்தைப் பேணும் அதே சமயம் இலங்கையின் ஆட்புல ஒருமை மற்றும் ஐக்கியம் என்பவற்றுக்கு ஒருங்கே பாதுகாப்பையும் அளித்தல் வேண்டும்.

9.232 மாகாணங்களிலிருந்தான பிரதிநிதிகளை உள்ளடக்கியதான ஒரு இரண்டாவது சபையை ஸ்தாபிப்பதன் சாத்தியம் ஓர் மேலதிக பொறிமுறையாக கவனத்தில் கொள்ளப்படலாம். அத்தகையதொரு பொறிமுறை, மாகாணங்கள் தொடர்பில் குறிப்பிட்ட சம்பந்தங்களை கொண்டுள்ள சட்டவாக்க முறைகளை ஆராய்வதனூடாக, சட்டவாக்க தீர்மானம் மேற்கொள்ளும் செய்முறைகளில் தாங்களும் கூட ஒரு முக்கியமான பாத்திரத்தை வகிப்பதற்கு உள்ளது, எனும் ஒரு நம்பிக்கை உணர்வை அரசியல் தலைமைத்துவங்கள் மத்தியிலும் மற்றும் மாகாணத்தின் மக்கள் மத்தியிலும் அநேகம் உருவாக்கும்.

9.233 மக்களை வலுப்படுத்தல் மற்றும் அரசியல் தலைவர்களை மக்களுக்கு பொறுப்புக் கூறுபவர்களாக ஆக்குதலுமே அதிகாரப் பகிர்வு மற்றும் அரசாங்கத்தில் பங்குபற்றுதல் என்பவற்றின் உண்மையான பிரச்சினையென்பதை அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். இது இலங்கைக்கு முழுமையாக பொருத்தமாவதுடன் சிங்களம், தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய அனைத்துச் சமூகங்களினதும் பிரஜைகளின் தேவைகளை உள்ளடக்குகின்றது. அதிகாரப் பகிர்வுக்கான உறுதியுடன் ஒரு

கருத்தொருமித்த கட்டமைப்புடன் கூடியதாக, அதற்கான பண்புகள் மற்றும் உள்ளமைந்த அமைப்புகளுடன், இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஜனநாயக முறையின் பயனுறுதியான செயற்பாடும், சிறுபான்மையினரின் மனக்குறைகளுக்கான பதில்களை வழங்கும்.

9.234 ஒன்றோடொன்றுடனான பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வுகளை உள்ளகவாரியாக காண்பதற்கு அனைத்து தரப்புகளும் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளுதல் வேண்டும். இனப் பிரச்சினையின் தேவையற்ற சர்வதேசமயப்படுத்தலையும் மற்றும் புலம் பெயர்ந்தவர்களால் பிரயோகிக்கப்படும் வெளி அழுத்தங்கள் மற்றும் ஓர் அரசியல் தீர்வுக்கான பேச்சு வார்த்தைகள் மீதான அதன் தாக்கத்தையும் தமிழ் அரசியல் தலைவர்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். வெளிவாரியான அச்சுறுத்தல் மற்றும் தலையீடு என்பவை குறித்தான ஊகங்கள் ஓர் பாதுகாப்பற்ற உணர்வை உருவாக்கி அவை ஓர் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை நோக்கிய முன்னேற்றத்திற்கு கடுமையான முட்டுகட்டைகளை இடலாம்.

9.235 எந்தவொரு அதிகார மாற்றம் அல்லது அதிகாரப் பகிர்வுப் பொறிமுறையும் ஓர் இறையாண்மை, அரசியல் சுயாதீனம் மற்றும் பல்லின இலங்கை நாடு என்ற பரந்த கட்டமைப்பினுள் பயனறுதல் வேண்டுமென்பது கட்டாயமானதென ஆணைக்குழு கருதுகிறது. சுற்றியுள்ள நிலைகளுக்கு அதிகாரங்களின் அர்த்தமுள்ள பகிர்வு அத்தியாவசியமானதாக இருக்கையில், அரசின் மத்திய பொறுப்புகளிலிருந்தான அதிகாரம் பகிரப்பட முடியாது, அது மத்தியிலுள்ள அரசாங்கத்தால் தக்க வைக்கப்பட்டு அப்பியாசிக்கபடல் வேண்டும். எந்தவொரு அதிகாரப் பகிர்வுக்கான ஏற்பாடுகளும் பிரிவினைவாதப் போக்குகளை பயனுறுதியான வகையில் கவனம் செலுத்தி ஊக்கப்படுத்தாதிருப்பதற்கும் மற்றும் நாட்டின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் உட்கட்டமைக்கப்பட்ட பொறிமுறைகளைக் கொண்டிருப்பதை உறுதிப் படுத்துவதும் முக்கியமானதாகும்.

9.236 நிலையானதும் மற்றும் நீடிக்கின்றதுமான நல்லிணக்கத்தின் எந்தச் செயன்முறைகளின் வெற்றியையும் உறுதிப்படுத்தும் முகமாக, அதிகாரப் பகிர்வு விடயம் மீது தெளிவான முன்னேற்றங்களை ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தை கோடிட்டுக் காட்டுவதற்கு ஆணைக்குழு விரும்புகின்றது. ஆதலால், சுற்றுநிலைகளுக்கான, விசேடமாக கீழ் மட்டங்களிலான அதிகூடிய அதிகாரப் பகிர்வு, அதே போன்று மத்தியலான அதிகாரப் பகிர்வு, ஆகிய இரண்டிலும் என்ன உள்ளன என்பதன் அடிப்படையில் கட்டப்பட்டதான, அதிகாரப்பகிர்வு மீது ஒரு கருத்தொற்றுமையை உருவாக்குவதற்கான நம்பிக்கை முயற்சியை ஆரம்பிப்பதற்கு தற்போதைய சந்தர்ப்பங்கள் பயன்படுத்தப்படல் வேண்டுமென ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. இந்தக் கருத்தொற்றுமையானது, அவர்களைப் பாதிக்கின்றதும் மற்றும் பயனுறுதியான, செலவுக்கான பயனுறுதி கொண்ட மற்றும் ஒளிவுமறைவற்ற ஆட்சியைத் தடை செய்கின்ற செலவுமிக்கதும் மற்றும் அநாவசியமான அரசியல் இருமடிப்படுத்தல், பணித்துறை முறையான மற்றும் ஏனைய அமைப்புரீதியான கட்டமைப்புகளைத் தவிர்ப்பதற்கான ஆட்சித் தீர்மானங்களில் மக்களின் பங்குபற்றுதலுக்கு இயலச் செய்யுமொன்றாக இருத்தல் வேண்டுமென்பதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

9.237 இதற்கு, எதிர்பார்க்கப்படுகின்ற பேச்சுவார்த்தைச் செயன்முறையின் வடிவம் மற்றும் உள்ளடக்கம் என்பவை மீது அரசாங்கத்தின் சொந்த எண்ணங்களை உள்ளடக்கியதான ஒரு பிரேரணையின் அடிப்படையில், அனைத்து அரசியல் கட்சிகளுடனும், குறிப்பாக சிறுபான்மையினத்தவர்களைப் பிரதிநிதித்துவம் செய்பவற்றுடன் ஒரு கருத்தார்ந்ததும் மற்றும் கட்டமைக்கப்பட்ட வகையிலுமான பேச்சுவார்த்தைகளைக் கொண்டிருப்பதற்கு

அரசாங்கம் முன்னெடுப்புகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இந்தப் பேச்சுவார்த்தைகள் உயர் அரசியல் மட்டத்தில், போதுமான விடயச் சிறப்பறிவுடனான பின்னணியுடன் நடைபெறுதல் வேண்டும்.

**மொழிக் கொள்கை**

9.238 மொழிக் கொள்கை மற்றும் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களினால் அதன் அமுல்படுத்துதலிலான குறைபாடுகள் காரணமாக தெரிவிக்கப்பட்ட ஓரங்கட்டப்படுகின்ற உணர்வுகளை ஆணைக்குழு கவனத்தில் கொண்டதுடன் அது குறித்து பல தமிழ் ஆட்களிடமிருந்து அறிந்து கொண்டது.

9.239 இன்றும் கூட, சிறுபான்மையினத்தைச் சேர்ந்த பல பேரும் தங்களது காரியங்களை அவர்களது தெரிவிற்குரிய மொழியில் இல்லாது நிறைவேற்றுவதற்கு நிர்ப்பந்திக்கப் படுவதை, பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான விஜயங்களின் போது ஆணைக்குழு நேரடியாகக் கண்டு கொண்டது.

9.240 தமிழ் பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதை அங்கீகரிக்கும் அதே வேளை, ஜனாதிபதிக்கான அதன் இடைக்கால தொடர்பாடல்களில் அவசரமான விடயங்கள் தொடர்பில் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் இன்னமும் அமுல்படுத்தப்படாதிருப்பதை ஆணைக்குழு வருத்தத்துடன் அவதானிக்கின்றது.

9.241 மொழிக் கொள்கைகளை நிறைவேற்றுதல் மற்றும் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் உத்தியோகபூர்வ அமைப்புகள் தமிழ் மொழி பேசுவோர்கள் மற்றும் தமிழ் மொழி பேசும் பிரதேசங்களின் போதுமான பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். மொழிக்கொள்கையின் முழுமையான அமுல்படுத்தலானது, மக்களின் பங்கேற்றலுடன் கண்காணிக்கபடக்கூடிய இலக்குகளோடு பொருத்தமான வகையில் பிரதேச மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளை உள்ளடக்கியதாக, சமூக மட்டத்திற்கு பிரிவடைந்த வேலைத்திட்டங்களை உள்ளடக்குதல் வேண்டும்.

9.242 தொடர்பாடுதலிலான தடைகளின் காரணத்தால் வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள மக்கள் தெற்கிலுள்ள மக்களிலிருந்து வேறாகியுள்ளனர். அனைத்துப் பிரஜைகளிடையேயும் அவர்களது சாதி, சமயம் அல்லது சமூக அந்தஸ்து என்பவற்றைக் கவனத்தில் கொள்ளாது நாட்டிற்கு உரியவராக இருக்கும் ஓர் உணர்வை உருவாக்குவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும். மொழியே ஒரு தேசத்தை ஒன்றிணைத்துப் பிணைக்கின்றது. ஆகையால், மொழி தொடர்பான கொள்கைகள் இந்த நோக்கம் நோக்கியதாக உருவாக்கப்படுவது அத்தியாவசியமாகும். புரிந்து கொள்ளுதல், பன்மைத்துவம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு என்பவற்றை ஓர் பயனுறுதியான வகையில் முன்னேற்றுவதற்கு உத்தியோகபூர்வ மொழிக்கொள்கை அமுல்படுத்தப்படுவது கட்டாயமானதாகும்.

9.243 ஒவ்வொருவரும் மற்றவரின் மொழிகளைக் கற்பது பாடசாலைப் பாடவிதானத்தின் ஒரு கட்டாயப் பகுதியாக்கப்டுதல் வேண்டும். இது, இரண்டு சமூகங்களிற்கிடையேயும் உளப்பாங்குரீதியிலான மாற்றத்தை உறுதிப்படுத்துவதற்கான ஒரு முதன்மைச் சாதனமாக அமையும். சிங்களச் சிறார்களுக்குத் தமிழையும் மற்றும் தமிழ்ச் சிறார்களுக்கு சிங்களத்தையும் கற்பிப்பது ஒவ்வொருவரும் மற்றவரின் கலாச்சாரங்களை கூடுதலாக புரிந்துகொள்ளவதற்கு வைக்கும்.

9.244 மொழிக் கொள்கையின் சரியான அமுல்படுத்துதலும் மற்றும் எதிர்காலச் சந்ததிகளின் மும்மொழிகளிலான (தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம்) சரளமான தன்மையை உறுதிப்படுத்துதலும் மிகவும் முக்கியமானதாகின்றது. ஓர் மும்மொழிக் கல்வி மிகச் சிறிய வயதிலிருந்தே பிள்ளைகள் ஒருவரை மற்றொருவர் புரிந்து கொள்வதற்கு அனுமதிக்கின்றது.

9.245 2020ஆம் ஆண்டு ஓர் மும்மொழித் தேசமாகுவதற்கான அரசாங்கத்தின் முன்னெடுப்பை ஆணைக்குழு வரவேற்கின்றது. இந்த நோக்கத்திற்காக, ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆட்சேர்தலுக்காக ஓர் முன்னுரிமை அடிப்படையில் அவசியமான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கும் வகையில் செய்தல் வேண்டும்.

9.246 எந்தவொரு மாவட்டமும் அல்லது மாகாணமும் மொழியின் அடிப்படைகளில் வகைப் படுத்தப்படுதல் கூடாது. அரச சேவைகளிலுள்ள உத்தியோகத்தர்கள் நாட்டின் எந்தப் பாகத்திலும் சேவையாற்றுவதற்கான மொழித் தேர்ச்சியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

9.247 அனைத்து அரசாங்க அலுவலகங்களும் தமிழ் பேசும் உத்தியோகத்தர்களை எல்லா வேளைகளிலும் கொண்டிருப்பதை கட்டாயமாக்குதல் வேண்டும். பொலிஸ் நிலையங்களைப் பொறுத்த வரை அவை, இரு மொழித் தேர்ச்சி பெற்ற உத்தியோகத்தர்களை 24 மணித்தியாலங்களும் கொண்டிருத்தல் வேண்டும். முறைப்பாட்டாளர் ஒருவர் தனக்கு விரும்பிய மொழியில் தனது வாக்குமூலத்தை பதிவு செய்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

9.248 உத்தியோகபூர்வ மொழிகள் ஆணைக்குழு அதிகார மையப்படுத்தப்பட்டதாகவும் மற்றும் கொழும்பைத் தளமாகவும் கொண்டு அமைந்துள்ளதினால் கிராமப்புற மக்களால் இலகுவாக அணுகப்பட முடியாததாகவுள்ளது. மொழி ஆணைக்குழு அமுல்படுத்துதலிற்கு பயனுறுதியான அதிகாரங்களைக் கொண்டவொரு அதிகாரமாகவும், மற்றும் அனைத்து மாகாணங்களிலும் கிளைகளைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

9.249 மொழிரீதியான தடைகளைக் கடப்பதற்கான ஓர் சாதனமாக தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு கூடுதலான கவனம் செலுத்தப்படல் வேண்டும். இந்த நோக்கத்திற்காக, ஓர் தற்காலிக முறையாக, நீண்டகாலக் கொள்கைகள் மற்றும் செயல்முறைகள் பயனுறும் வரை, ஒரு மொழியிலிருந்து மற்றைய மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்வதற்கான மென்பொருள் செய்நிரல்கள் பயன்படுத்தப்படலாம்.

9.250 இது தொடர்பில், பொலிஸ் நிலையங்களில், இரு மொழித் தேர்ச்சி கொண்ட ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களை நிலைய உரைபெயர்ப்பாளர்களாக உபயோகிப்பதற்கு அதன் இடைக்கால பரிந்துரைகளிலான கவனத்தையீர்ப்பதற்கும் ஆணைக்குழு விரும்புகின்றது.

### கல்வி

#### சம வாய்ப்புக்கள்

9.251 ஓர் ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்கள் மற்றும் சிங்களவர்களுக்கும் இடையிலான நல்லிணக்கத்திற்கு பாரபட்ச உணர்வுகளின் நீக்கம் ஓர் முன்நிபந்தணையாகும். வேறுபட்ட சமூகங்களுக்கு அளிக்கப்பட்ட கல்வி வாய்ப்புகளிலான சமனின்மையைக் குறைப்பதற்கு அரசினாலான ஓர் உறுதிப்படுத்தும் நடவடிக்கை முறையாக தரப்படுத்தல்

அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து அதிளவிலானோர் பாதிப்புக்குட்பட்டுவிட்டனர். ஆதலால், எதிர்காலச் சந்திகளின் சிறந்த நன்மை கருதி, தகுதி அடிப்படையிலான ஒரு அனுமதி முறையை அறிமுகப்படுத்தும் நோக்கோடு, இந்த பங்கீட்டு முறை மீதான ஒரு மீள்பரிசீலனை காலப் பொருத்தமானதாகும். அத்தகையதொரு மீள்பரசீலனை கல்வித்துறை நிபுணர்கள் அடங்கியதொரு குழுவினால் மேற்கொள்ளப்படுவதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

9.252 சிறுபான்மையினத்தவர்களால் உணரப்பட்ட பாரபட்ச உணர்வை குறைப்பதற்கான ஓர் ஒன்றிணைந்த முயற்சிக்கு பங்களிக்கின்றதாக, கல்வி வசதிகளின் ஒரு ஒப்புரவான பகிர்வுக்கு ஒரு புதிய திறன் கொண்ட திட்டத்துடன் அரசாங்கம் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். தற்போது, 2011 இலிருந்து நாடு முழுவதிலுமாகவுள்ள ஆயிரம் இரண்டாம் நிலை பாடசாலைகளைத் தரமுயர்த்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட திட்டம், மற்றொரு வாய்ப்பை அளிக்கும் என்பதுடன் ஈற்றில் சமனின்மையை இல்லாதாக்கும். இந்தக் கொள்கை சமுதாயத்தில் பதட்டங்களையும், பிளவுகளையும் ஏற்படுத்தாத வகையில் அமுல்படுத்தப்படல் வேண்டும். இந்தப் பாடசாலைகள் குறிக்கோளின் அடிப்படையிலும் மற்றும் ஓர் அரசியல்மயமல்லாத தெரிவுச் செயன்முறையினால் இனங் காணப்பட்டால் மட்டுமே இந்த முயற்சி ஓர் வெற்றிகரமானதாக நிரூபிக்கப்பட முடியும். நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் கல்வி வசதிகளில் காணப் படுகின்ற சமனின்மை குறைக்கப்பட்டு இறுதியில் இல்லாதொழிக்கப்படல் வேண்டுமென ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

9.253 வெவ்வேறுபட்ட இன மற்றும் மதப் பின்னணிகளிலிருந்தான பிள்ளைகளுக்கு சேவையாற்றும் கலவன் பாடசாலைகளை ஊக்குவிப்பதற்கு ஒரு செயற்றிறன் கொண்ட கொள்கையை அரசாங்கம் கொண்டிருத்தல் வேண்டுமென ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. இது தொடர்பாக, இந்தப் பாடசாலைகளுக்கு வெவ்வேறுபட்ட இன மற்றும் மதக் குழுக்களிலிருந்து பிள்ளைகளின் அனுமதிக்கு வசதியளிக்கும் வகையில் கவனமாக உருவாக்கப்பட்ட ஒரு கொள்கையை அரசாங்கம் விருத்தி செய்தல் வேண்டும். பாடசாலைகளுக்கான அனுமதிகளைப் பொறுத்த வரை, இன மற்றும் மத அடிப்படையில் தகுதி பெறாத மாணவர்கள் நல்லிணக்கத்திற்காக நன்கு உரைக்க மாட்டார். அத்தகைய ஏதேனும் நடைமுறைகள் ஊக்கவிக்கப்படல் கூடாது.

9.254 வெவ்வேறுபட்ட சமூகங்களின் வளமான கலாச்சாரப் பன்மைத்துவம் பற்றி பரஸ்பரம் புரிந்து கொள்ளுதல் மற்றும் போற்றுதல் என்பன பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் மனதில் பதிய வைக்கப்படல் வேண்டும், இதன் மூலம் நாட்டின் சமூகக் கட்டமைப்பில் நல்லிணக்கச் செயன்முறைகள் தாமாகவே ஆழமாக வேரூன்றிக் கொள்கின்றது. ஆகையால், வெவ்வேறு மாகாணங்களிலிருந்தான பாடசாலைகளை இணைத்தல், மாணவர் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பாடசாலைகளில் நல்லிணக்கச் சங்கங்களை உருவாக்குதல் போன்ற பொறிமுறைகள் ஊடாக, மாணவர்கள் மத்தியில் கூடுதல் இடைச் செயற்பாடுகளையும் உருவாக்குவதற்கான அனைத்து ஊக்குவித்தல்களுக்கும் அளிக்கப்படுவதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. மேலதிகமாக தேசிய இளைஞர் மன்றம், இளைஞர் மட்டத்தில் கூடுதல் தீவிரமான பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களை அனுசரித்தல் வேண்டும்.

## சமாதானக் கல்வி

9.255 ஓர் பிரசித்தமான சர்வதேச நீதியாளர், ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்கையில், ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை முன்னேற்றுவதில் சமாதானக் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். பாட விதானத்தில் சாத்தியமான மாற்றங்கள் மீதான ஆணைக்குழுவின் கருத்துக்கள் இந்த அறிக்கையின் உள்ளடக்கத்தில் பிரதிபலிக்கப் பட்டுள்ளது.

9.256 ஒரு மும்மொழி கொள்கைக்கு பயனுறுதி அளிப்பதில், வேறுபட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள், சாத்தியமான வரைக்கும் இடைச் செயற்பாடுடையதாக இருப்பதற்கான அனைத்து வாய்ப்புகளையும் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படல் வேண்டும். நடைமுறைச் சாத்தியமான வரை, ஒரே வகுப்பறையிலேயே இடைச் செயற்பாடுகள் ஊக்குவிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், வெவ்வேறான மொழிகளில் கற்பிக்கப்படும் பாடங்களுக்காக அவர்கள் வேறுபட்ட வகுப்பறைகளுக்கு பிரிந்து செல்ல முடியுமாக இருத்தல் வேண்டும்.

9.257 அனைத்து மூன்று மொழிகளிலும் வழங்கப்படும் கற்கை நெறிகளின் ஒரு தெரிவுடன் இனரீதியாக கலப்புக் கொண்ட மாணவர் தொகைகளை அரச பல்கலைக்கழகங்கள் கொண்டிருப்பதை உறுதிசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். அண்மைக் காலம் வரை, தமிழ் பேசும் பல்கலைக் கழக மாணவர்களில் பெரும்பாலானவர்கள் வடக்கு மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களிற்கும், அதே போன்று சிங்கள மொழி பேசும் பட்டதாரி மாணவர்கள் தெற்கிலுள்ள பல்கலைக் கழகங்களிற்குமே வரையறுக்கப்பட்டவர்களாக இருக்கக் காணப்பட்டது.

9.258 நல்லிணக்கச் செயன்முறைகளில் அத்தியாவசியமான வெவ்வேறுபட்ட சமூகங்களைச் சேர்ந்த மக்களிடையேயான தனிப்பட்ட தொடர்புகளை விளையாட்டுகள் கட்டியெழுப்பு கின்றன என ஆணைக்குழு கருதுகின்றது. இந்தக் கருத்திற்கமைவாக, மாகாண மட்டங்களிலான விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்படுவதற்கும் மற்றும் நாடு முழுவதிலுமாக, விசேடமாக வடக்கு மற்றும் கிழக்கில் முக்கியமான தேசிய விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்படுவதற்கும் ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

### புலம்பெயரந்தவர்கள்

9.259 சில ‘புலம்பெயர்ந்த தமிழ் குழுக்கள்’ நல்லிணக்கச் செயன்முறைகளை பரந்து பட்டதாக்குவதற்கு ஆக்கபூர்வமான வகையில் பங்களிப்பதற்கு நாடும் அதேவேளை, ஏனைய சில புலம்பெயர் குழுக்கள், விசேடமாக, தமழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை ஆதரிப்பவர்களாக கூறப்படுகின்றவர்கள், ஓர் பாதகமான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதற்கு காணப்பட்டனர்.

9.260 இந்த ‘விரோதப் போக்குக் கொண்ட புலம்பெயர்ந்தவர்கள்’’ நல்லிணக்கம் நோக்கிய இலங்கையின் உண்மையான முயற்சிகளை அநேகம் பாழ்படுத்தலாம் என ஆணைக் குழுவிற்கு தெளிவாகின்றது. ஆதலால், அரசாங்கம் சம்பந்தப்பட்ட அக்கறை கொண்ட செயற்பாட்டாளரகளுடன், விசேடமாக சிவில் சமூகங்களுடன் இணைந்து சாத்தியமான நாடு கடந்து வாழும் சமூகத்தின் பயன்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு விரிவான அணுகுமுறையை உருவாக்குதல் வேண்டுமென ஆணைக்குழு உணர்கின்றது.

9.261 அத்தகையதொரு அணுகுமுறையின் பிரதான அம்சங்கள் பின்வருமாறு அமைதல் வேண்டும்:

அ. அதிகாரப் பகிர்வு மற்றும் ஏனைய குறைகள் மீது அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைகளில் சிறுபான்மையினக் கட்சிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை ஈடுபடச் செய்யவும். 'விரோதப்போக்குக் கொண்ட புலம்பெயர் குழுக்களை' சம்பந்தம் அற்றவர்களாக்குவதற்கு மிகவும் பயனறுதியான வழி, ஓர் உயர் அரசியல் மட்டத்திலான நோக்கு மற்றும் அங்கீகாரம் என்பவற்றைக் கொண்ட ஒரு கட்டமைக்கப்பட்ட கலந்துரையாடல் மூலமாக உள்ளூர் சிறுபான்மைக் கட்சிகளை சம்பந்தம் உடையதாக ஆக்குவதாகும்;

ஆ. விரோத மனப்பாங்குகளை இன்னமும் கொண்டிருக்கின்றதும் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரிவினைவாத அணுகுமுறையைக் கொண்டுள்ள குழுக்களுடன் ஆக்கபூர்வமான வகையில் சம்பந்தப்படுவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதுடன், உள்நாட்டு நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி முயற்சிகளில் அத்தகைய குழுக்கள் பங்களிப்பதற்கான இடைவெளியைக் காணுதல்.

இ. சர்வதேச சமூகங்களுடன், விசேடமாக இந்தப் புலம்பெயர் குழுக்களுக்கு புகலிடம் வழங்கும் நாடுகளுடன் செயற்றிறன் கொண்ட ராஜதந்திர முன்னெடுப்புகளில் ஈடுபடுதல். இந்த முன்னெடுப்பின் நோக்கம் மேற் குறிப்பிட்ட அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைகள் மற்றும் தற்போதைய ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அமுல்படுத்துதல் உட்பட, மோதலிற்கு பின்னான பிரச்சினைகள் மீத கவனம் செலுத்துவதற்கு பயனுறுதியானதும் மற்றும் புலப்படும் வகையிலுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவது குறித்து அந்த நாடுகளுக்கு விளக்கம் அளிப்பதாகும். இவ்வாறு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், விரோதப் போக்குக் கொண்ட இந்த புலம்பெயர் குழுக்கள் மீது குறைந்த கவனம் செலுத்துவதற்கு புகலிடம் வழங்கும் இந்த நாடுகளை அரசாங்கம் இணங்கச் செய்வதற்கு முடிகின்ற, அதேவேளை அரசாங்கத்தால் வழங்கப்படும் தகவல்களுக்கு கூடுதல் ஏற்றுக்கொள்ளும் தன்மையைக் கொண்டதாக இருக்கச் செய்யலாம். மேலதிகமாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்முறை மற்றும் பிரிவினைவாதம் எனும் கைவிடப்பட்ட கருத்தியல்களை ஆதரிக்காத மற்றும் இன ஒற்றுமை மற்றும் கருத்தொருமித்த அரசியல் எனும் ஜனநாயகக் கோட்பாடுகளை ஆதரிக்கும் நாடு கடந்து வாழ்வோர்களின் பணிகளை ஊக்குவித்து ஆதரிப்பதில் அரசாங்கமும் செயற்றிறன் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

ஈ. உதாரணத்திற்கு, இரட்டைக் குடியுரிமை அந்தஸ்தை பெற்றுக் கொள்வதை இலகுவாக்குதல், பணம் அனுப்தல்கள் மற்றும் தேவையற்ற கட்டுப்பாடுகள் இன்றி நாடு முழுவதிலுமாகப் பயணிப்பதற்கு இயலச் செய்தல் என்பவை மூலம் இலங்கையில் முதலீடு செய்வதற்கும் மற்றும் பணியாற்றுவதற்கும் விரும்பும் நாடு கடந்து வாழும் அத்தகையோர்களுக்கு அரசாங்கமும் கூடுதல் சுதந்திரமான கொள்கைகள் மற்றும் மனப்போக்கை கொண்டிருத்தல் வேண்டும்.

உ. இந்த அம்சங்கள், இங்கு இலங்கையில் ஒரு பரந்த அடிப்படையிலும் மற்றும் இங்கேயும் மற்றும் வெளிநாடுகளிலும் உள்ள இலங்கை இராஜதந்திர குழுக்கள் மற்றும் சிவில் சமூகங்கள் என்பவற்றினூடான ஒரு கவனமாகத் திட்டமிடப்பட்ட ஒரு நிகழ்ச்சித்திட்டததை தேவைப்படுத்துகின்றன.

9.262 நல்லிணக்க சமூக உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கும் மற்றும் நிலைத்திருக்கச் செய்வதற்குமான திறந்த மனங்களுடன், வன்னியில் ஒரு சுயமாகச் சார்ந்திருக்கும் தன்மை கொண்ட, எதிர்காலம் நோக்கியதான சமூகத்தை வளர்ச்சியடையச் செய்யும் முகமாக இலங்கையிலும் மற்றும் வெளிநாட்டிலுமான அதன் அபிவிருத்திப் பங்காளிகளை ஆக்கபூர்வாமான வகையில் ஈடுபடுத்துவதற்கான முன்னெடுப்புகளை அரசாங்கம் மேற்கொள்வது கட்டாயமானதாகும். வீடமைப்பு, பாடசாலை அமைத்தல், சுகாதாரம் மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகள் போன்ற விடயங்களில் அபிவிருத்திப் பங்காளிகளுடனான ஒத்துழைப்புடன் பணியாற்றுவதில், இலங்கை அரசாங்கத்திற்கு இலங்கையின் 'புலம்பெயர்' சமூகம் ஆதரவளிப்பதற்கானதோர் இடம் இதுவாகும்.

9.263 புலம்பெயர் சமூகத்தின் பயன்படுத்தாதிருக்கும் ஆற்றல்களை பயன்படுத்திக்கொள்வதற்கு ஒரு நடவடிக்கைத் திட்டத்தை பிரேரிப்பதற்கும், மற்றும் 'விரோதப் போக்குக் கொண்ட புலம்பெயர் குழுக்கள்' என அழைக்கப்படுபவர்களின் கரிசனைகளுக்கு பதிலளிப்பதற்கும், மற்றும் நல்லிணக்கச் செயன்முறைகளில் ஈடுபட்டுள்ள அரசாங்கம் மற்றும் ஏனைய அக்கறை கொண்ட செயற்பாட்டாளர்களுடன் அவர்களை ஆக்கபூர்வமான விதத்தில் ஈடுபடுத்துவதற்குமாக ஜனாதிபதி செயலகம், வெளிவிவகாரங்கள், பாதுகாப்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, தனியார் துறை மற்றும் கல்வித்துறை என்பவற்றிலிருந்து பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு பல்துறை செயலணிக் குழுவை அரசாங்கம் உருவாக்குவதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. அத்தகையதொரு விரிவான அணுகுமுறை அவசரமான முறையில் அனுசரிக்கப்படாவிட்டால், ஓர் வெளிவாரியான விரோதப் போக்கை உருவாக்குவதிலான தற்போதைய வேகம் அதிகரிக்கலாமென்பதுடன், அத்தகையதொரு செயன்முறையை ஆதரிக்கும் அக்குழுக்கள் பிரிந்து தனியாகுதலை தொடர்ந்து முன்னேற்றுவதுடன், அது இலங்கையில் நல்லிணக்கத்தை ஆதரிக்கும் ஏனையவர்களின் உண்மையான முயற்சிகளைக் கணிசமாகப் பலமிழக்கச் செய்யும்.

**நம்பிக்கைகளுக்கிடையிலான நடவடிக்கைகள் - நல்லிணக்கத்தில் மதங்களின் பங்கு**

9.264 உலகின் நான்கு பிரதான சமயங்களான இந்துமதம், பௌத்தம், இஸ்லாம் மற்றும் கத்தோலிக்கம் என்பவற்றின் பாரம்பரியங்களினால் இலங்கை வளம் பெற்றுள்ளதென ஆணைக்குழுவின் முன் முறையீடுகளை மேற்கொண்ட பல்வேறு மதப் பிரதிநிதிகளும் வலியுறுத்தினர்.

9.265 ஒரு நீண்டு நீடித்த மோதல்களை அடுத்து, நல்லிணக்கத்தை ஒரு குறுகிய காலத்திற்குள் எட்டுவது சிரமமானது எனச் சொல்லப்படுகிறது. ஆதலால், அது ஒரு நீண்ட கால மீள்கட்டியெழுப்பும் செய்முறையின் ஒரு பகுதியாகின்றது. நல்லிணக்கம் மீதான கவனக் குவிவைப் பேணுவதற்கு, சமூக ஒற்றுமையைக் குலைப்பதற்கான சாத்தியங்களை எதிர்பார்ப்பதற்கும், மற்றும் அவை அபாயகரமான அளவுகளை எட்டுவதற்கு முன் அவற்றை வலுவிழக்கச் செய்வதற்கு அமைப்புரீதியிலான ஏற்பாடுகள் தேவைப்படும்.

9.266 அடையாளம் தெரியாத குழுக்களால் பல வணக்க ஸ்தலங்கள் அண்மையில் சேதமாக்கப்பட்ட பல சம்பவங்களை செவிமடுப்பதில் ஆணைக்குழு ஆழ்ந்த கவலை கொள்கின்றது.

9.267 இந்தச் சம்பவங்கள் தொடர்வது நல்லிணக்கச் செயன்முறைகளுக்கு நிச்சயம் தீங்கை ஏற்படுத்துவதாக அமையும். இத்தகைய சம்பவங்களை தவிர்ப்பதற்கு கடுமையான அச்சுறுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு பொறுப்பான ஆட்கள் குறித்து புலன்விசாரணை செய்யவோ அல்லது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்கள் இதுவரை தவறியதை ஆணைக்குழு கவலையுடன் அவதானிக்கின்றது. இத்தகைய சம்பவங்கள் நிகழ்வதைத் தடுப்பதற்கு அரசாங்கம் அனைத்து முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும். அத்தகைய நடவடிக்கை, பாதிக்கப்பட்ட கழுக்கள் மத்தியில் பாதுகாப்பு மற்றும் நம்பிக்கை என்பவற்றுக்கான ஒரு உணர்வை உண்டு பண்ணும்.

9.268 அனைத்து மதத் தலைவர்களும் அனைத்து மதங்களுக்கும் உரிய மக்களை அறிவுபூர்வமாகவும் மற்றும் புரிந்து கொள்ளுதலுடன் செயற்படுவதற்கும், மற்றும் மோதல்கள் மற்றும் அதன் பின்விளைவுகளையும் சகிப்புத் தன்மை மற்றும் பரஸ்பரம் இடமளித்தல் என்பவற்றினொரு கண்ணோட்டத்துடன் நோக்குவதற்கு ஊக்கப்படுத்தி ஒன்றிணைந்து தலைமைத்துவத்தை வழங்குதல் வேண்டும். இது, மதரீதியான பொதுத் தன்மைகள், மற்றும் ஓர் பகிர்ந்து கொள்ளும் நோக்கு மற்றும் ஒன்றிணைந்த செயற்பாடு என்பவற்றுக்கு பங்களிக்கும் காரணிகள் மீதான கவனம் என்பவற்றை வலியுறுத்துவதன் மூலம் எட்டப்படுதல் வேண்டும்.

9.269 இந்த சூழ்நிலையில், ஒன்றிணைந்த மற்றும் கூட்டு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலம் இன மற்றும் மத ஒற்றுமையை முன்னேற்றுவதில், நம்பிக்கைகளுக்கிடையிலான மத குழுக்கள் வகிக்கக்கூடிய ஆக்கபூர்வமான பாத்திரத்தை ஆணைக்குழு வலியுறுத்துவதற்கு விரும்புகின்றது.

9.270 ஆணைக்குழுவின் முன் தோன்றிய வெவ்வேறு நம்பிக்கைகளுக்கிடையிலானதும் மற்றும் மதப் பிரதிநிதிகளால், சட்டமும் ஒழுங்கு, நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் நோக்கிய முயற்சிகளை இன அல்லது மத ரீதியான பதட்டங்கள் அல்லது முரண்பாடுகள் சீரழித்து மோதல்களுக்கு இட்டுச் செல்லாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு ஒரு பயனுள்ள தடுப்பு முறையாக செயற்படக்கூடிய ஓர் முன்கூட்டிய எச்சரிக்கைப் பொறிமுறை குறித்து ஒரு பொதுவான அங்கீகாரம் காணப்பட்டது. ஓர் முன்கூட்டிய எச்சரிக்கை மற்றும் முன்கூட்டிய வலுவிழக்கச் செய்யும் நடைமுறையாக செயலாற்றுவதற்கான ஒரு ஆணையுடன், நம்பிக்கைகளுக்கிடையிலான குழுக்களின் கலந்தாலோசனையோடு அத்தகையதொரு பொறிமுறையை ஸ்தாபிப்பதற்கு அரசாங்கம் வசதியளித்தல் வேண்டுமென ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

**கலையும் கலாச்சாரமும்**

***நல்லிணக்கத்தை முன்னேற்றுவதற்கான கருவிகளாக மொழி மற்றும் கலாச்சார ரீதியான தொடர்புகள்***

9.271 ஆணைக்குழு முன் முறையீடு கள் மேற்கொள்ளப்பட்டு வருகையில், ஒரு இலங்கையர் என்ற அடையாளத்தை ஸ்தாபிப்பதில் மொழி மற்றும் கலாச்சார பொதுத்தன்மைகள் மற்றும் தொடர்புகளை இனங் காண்பதன் தேவை, குறிப்பாக வலியுறுத்தப்பட்டது. கலைப் படைப்பாற்றல்களை ஊக்குவிப்பதன் மூலமான ஆற்றலை அரசாங்கம் மற்றும் பொதுமக்கள் ஆகிய இரண்டும் பயன்படுத்தத் தவறியமையும், மற்றும் சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வுகளை ஏற்படுத்துவதில் கலைகள் கணிசமானளவு பங்களிக்க முடியும் என்பதை உணர்வதற்கு தவறியமையும் கூட இதன் போது சுட்டிக்காட்டப்பட்டது.

9.272 ஆணைக்குழு முன் மேற்கொள்ளப்பட்ட முறையீடுகள், தேசிய நல்லிணக்கச் செயன் முறைகளில் கலாச்சாரத் தொடர்புகளின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டியதுடன், தமிழ், சிங்கள கலாச்சாரங்கள் மிகவும் செழுமையான வேர்களைக் கொண்டுள்ளன என்பதை வலியுறுத்தியதுடன், "1956 இல் நடைபெற்றதைப் போன்று" ஓவியம், நாடகம் மற்றும் இசை என்பவை மூலம் ஒரு கலாச்சார மறுமலர்ச்சி இருத்தல் வேண்டும் என்பதையும் வலியுறுத்தின.

9.273 வணக்கத்திற்குரிய மதத் தலைவர்கள், கலைஞர்கள் மற்றும் நாட்டின் ஏனைய சீர்தூக்கி சிந்திக்கும் பிரஜைகள் போன்ற பலரின் மத்தியிலும் ஒரு பொதுவான நிலைப்பாடு உருவாகியிருப்பதை அவதானிப்பதில் ஆணைக்குழு ஆறுதலடைகின்றது. அனைத்து தரப்பிலான அரசியல்வாதிகளும் தங்களது சுயநல அரசியலார்வங்களைக் கைவிட்டு நல்லிணக்கச் செயன்முறையை வெற்றிகரமானதாக மாற்றுவதற்கு கருத்தொருமித்த தலைமைத்துவத்தை அளிப்பார்களாயின், இத்தகைய அறிஞர்களின் பொதுவான நிலைப்பாடு ஒரு பயனுள்ள நல்லிணக்கச் செயன்முறை மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் என்பவற்றுக்கு நல்லதொரு சமிக்கையை நிச்சயம் அளிக்கும்.

9.274 வேறுபட்ட சமூகங்கள் மத்தியில் மொழி மற்றும் கலாச்சார ரீதியான தொடர்புகள் பற்றிய கூடுதல் விழிப்புணர்வுகளை உருவாக்குவது கூடுதலான நல்லிணக்கத்தை முன்னேற்றுவதில் ஒரு பயனுறுதியான சாதனமாக இருக்கும் என ஆணைக்குழு கருதுகின்றது. இதற்கு அரசினால் அதிகூடிய முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும் என்பதோடு அரசின் செயற்றின் கொண்ட கொள்கை மற்றும் திட்டங்களின் ஒரு அம்சமாகவும் ஆக்கப்படல் வேண்டும்.

9.275 தமிழ் மொழியிலுள்ள முக்கியமான இலக்கிய படைப்புகளை சிங்களத்திலும், அதே போன்று சிங்கள மொழியிலுள்ள இலக்கியப் படைப்புகளை தமிழ் மொழியிலும் மொழிபெயர்த்து வெளியிடுவதற்கு விசேட கவனம் அளிக்கப்படல் வேண்டும். குறிப்பாக பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் அத்தகைய வெளியீடுகளின் பரப்புதலானது, ஒருத்தர் மற்றொருவரின் கலாச்சாரங்களின் கூருணர்வுகள் மீதான புரிந்து கொள்ளுதலின் ஒரு கூடுதல் உணர்வைப் போஷிப்பதில் முக்கியத்துவம் கொண்டதாக இருக்கும்.

9.276 சமூகங்களுக்கிடையிலான பொதுவான தன்மைகள் மற்றும் பரஸ்பர புரிந்துணர்தல்கள் என்பவற்றை சுட்டிக்காட்டி வெளிப்படுத்தும் திரைப்படங்கள், தொலைக்காட்சி மற்றும் மேடை நாடகங்கள் என்பன ஊக்குவிக்கப்பட்டும் மற்றும் விசேடமாக இளஞ் சந்ததியினரின் நன்மைக்காக பரப்புரை செய்யப்படலும் வேண்டும்.

9.277 தேசிய கீதம் தொடர்பிலான கேள்வியில், ஒரே இசையில், இரண்டு மொழிகளிலும் ஒரே சமயத்தில் தேசிய கீதம் இசைக்கப்படும் நடைமுறை பேணப்பட்டு ஆதரவளிக்கப்படல் வேண்டும். தற்சமயத்தில் இந்த நடைமுறையிலான ஏதேனும் மாற்றம், ஓர் தீவிரமான

எரிச்சலை மட்டுமே உருவாக்குமென்பதோடு, மோதலிற்கு பின்னான நல்லிணக்கத்தைப் போஷிப்பதற்கு ஊக்குவிப்பாக இருக்காது.

### மக்களுடன் மக்களின் தொடர்பு

9.278 அதன் அமர்வுகளின் போது, விசேடமாக கள விஜயங்களின் போது, புரிந்துணர்வு, நல்லெண்ணம் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை முன்னேற்றுவதில் மக்களுடன் மக்களின் தொடர்பு குறித்து அனைத்துச் சமூகத்தைச் சேர்ந்த மக்களிடமிருந்தும் ஓர் தெளிவான கோரிக்கையை ஆணைக்குழு கேட்டது. கருத்தொருமித்தலைக் கட்டியெழுப்புதல் மற்றும் ஒற்றுமையை முன்னேற்றுதல் என்பவற்றில் நேருக்கு நேரான இடைச் செயற்பாடுகள் ஓர் நிரூபிக்கப்பட்ட முறையாகவுள்ளதினால், மக்களின் இந்தக் கண்ணோட்டத்தை ஆணைக்குழு உறுதியாக ஆதரிக்கின்றது.

9.279 இது தொடர்பில், குறிப்பாக மோதல்களினால் அவர்களே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதினால், இளைஞர்கள் ஓர் விசேட பாத்திரத்தை வகிக்க முடியும். அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த இளைஞர்களே மோதல்களின் தாக்கம் மற்றும் பின்விளைவுகளைத் தாங்க வேண்டியதாக இருந்தது. மோதல்கள் நிகழ்ந்த காலங்கள் முழுவதிலுமாக, இரத்தம் சிந்துகின்ற சந்தர்ப்பங்கள் தவிர, ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கோ அல்லது புரிந்து கொள்வதற்கான நேரம் மற்றும் இடைவெளிகளை அவர்கள் கொண்டிருக்கவில்லை.

9.280 இந்தச் சந்தர்ப்பத்தில், அரசாங்கம் மற்றும் சிவில் சமூகக் குழுக்களினால், குறிப்பாக இளைஞர் விவகார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகளை அவதானிப்பதில் ஆணைக்குழு மகிழ்ச்சியடைகின்றது. இளைஞர் விவகார அமைச்சு, ‘‘இளைஞர் பாராளுமன்றம்’’ எனும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ‘‘பனந் தோப்பிலிருந்து தென்னந் தோப்பிற்கு’’ எனும் இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டததையும் தற்போது நடாத்தி வருகின்றது.

9.281 அத்தகைய முயற்சிகளை ஆணைக்குழு ஊக்குவிப்பதுடன், சம்பந்தப்பட்ட துறைகளிலுள்ள அனைத்து அரசாங்க அமைச்சுகள் மற்றும் ஏனைய நிறுவனங்களை, அவர்களது அதிகாரத்திற்குட்படுகின்ற வகையில் அத்தகைய படைப்பாற்றல தன்மையான திட்டங்களை முன்னெடுப்பதற்கும் பரிந்துரைக்கின்றது. இத்தகைய பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் ஆதரவளிக்கப்பட்டு, விரிவாக்கப்பட்டும் மற்றும் பரந்துபட்ட அடிப்படையிலானதாகவும் செய்யப்பட முடியுமாதலால், இது, சிவில் சமூகக் குழுக்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் விருந்தினர் சமூகங்கள் அதே போன்று வரவேற்கும் சமூகங்களின் கலாச்சார மற்றும் மொழிரீதியான கூருணர்வுகளுக்கான உரிய மதிப்பளித்தல்களுடன் மேற்கொள்ளப்படுவதில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

### அரசியல் கருத்தொற்றுமைக்கான தேவை

9.282 அதிகாரப் பகிர்வு போன்ற, முக்கியமான தேசியப் பிரச்சினைகளில் அரசியல் கருத்தொற்றுமை மற்றும் பல் - தரப்பு அணுகுமுறை என்பவை இல்லாமை, இலங்கையின் நல்லிணக்கத்திற்கு தடை செய்யும் பிரதான காரணிகளிலொன்றாக உள்ளது.

9.283 கடந்த நான்கிலிருந்து ஐந்து தசாப்தங்களின் போது "குரோத உரைகள்" தீவிர சமூக ஒற்றுமையின்மைக்கு பங்களித்ததை ஆணைக்குழு அவதானிக்கின்றது. இனம், மதம் மற்றும் இலக்கியம் தொடர்பான இந்த "குரோத உரைகள்" இன மற்றும் மத ரீதியான பதட்டங்களைத் தூண்டிவிட்டு ஒற்றுமையின்மை மற்றும் மோதல்களை உருவாக்குகின்றதினால், அத்தகைய நடைமுறைகளைக் கையாள்வதற்கு கடுமையான சட்டங்கள் உருவாக்கப்படல் வேண்டுமென்பதோடு, இச்சட்டங்கள் கண்டிப்புடன் அமுல்படுத்தப்படல் வேண்டும்.

9.284 நல்லிணக்கச் செயன்முறை, மோதல்களின் துயரங்கள் மற்றும் சிங்கள, தமிழ் சமூகங்கள் ஆகிய இரண்டினதும் அரசியல் தலைவர்கள் மற்றும் சிவில் சமூகம் என்பவற்றின் ஒரு கூட்டான வேதனைப்படுதல் என்பவற்றுக்கானதொரு முழுமையான ஏற்றுக் கொள்ளுதலைத் தேவைப்படுத்துகின்றது. தெற்கின் இரு பிரதான அரசியல் கட்சிகளினதும் அரசியல் தலைவர்கள் ஓர் தேசிய நோக்கில் செயற்பட்டு தமிழ் மக்களுக்கு ஒரு ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை வழங்குவதற்கு அவர்களுக்கிடையில் ஒரு கருத்தொருமித்தலை ஏற்படுத்தியிருந்தால் இந்த மோதல்கள் தவிர்க்கப்பட்டிருக்க முடியும். பிரிவினைவாதம் நோக்கிய ஆயுதப் போராட்டத்தை ஊக்குவித்தமை, சிங்கள மற்றும் தமிழ் மக்கள் ஆகிய இரண்டுக்கும் எதிராக தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் மற்றும் பயங்கரவாத முறைகளுக்கு உடன்பட்டமை, மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள், மற்றும் அவர்களது கொடூரமான நடைமுறைகளுக்கு எதிராக உறுதியுடன் வெளிப்படத் தவறியமை போன்றவற்றுக்கு எதிராக செயற்பட்டிருப்பின் மோதல்கள் தவிர்க்கப் பட்டிருக்கலாமென்பதால் தமிழ் அரசியல் தலைவர்களும் கூட இதே அளவில் இந்த நிலைமைகளுக்கு பொறுப்பானவர்களாக ஆகின்றனர். நடைபெற்று முடிந்தவைக்கான ஒரு கூட்டான வேதனைப்படல் இரு தரப்புக்குமே இலகுவாக வந்துவிடாது. ஏற்பட்ட மனிதத் துயரங்களின் பின்புலத்தில் ஓர் முழுமையான, தார்மீக சுயமதிப்பீட்டை மேற்கொள்வதற்கு தயாராக இருந்தால் மட்டுமே அது வரும். மன்னிக்குந்தன்மையும், இரக்கமும் இருந்தால் மட்டுமே நல்லிணக்கத்திற்கான விதைகள் வேர் விடுவதற்கு முடியும். இத்தகையதொரு மோதல் ஏற்படுவதை தவிர்ப்பதில் அனைத்து தரப்பிலும் இருந்தான அரசியல் தலைமைத்துவங்களின் கூட்டுத் தவறுதலின் ஓர் விளைவாக, இந்த மோதல்களுக்குப் பலியான அப்பாவி பிரஜைகளிடம் ஓர் மன்னிப்பைக் கோரி அனைத்து தரப்புகளிலிருந்தான தலைவர்களும் ஒருவரையொருவர் பணிவுடன் அணுகி ஒரு கூட்டு அறிவித்தலை மேற்கொள்ளுதல் வேண்டும். இதற்காக மதத் தலைவர்களும் சிவில் சமூகங்களும் செயலாற்றுதல் வேண்டுமென்பதுடன் நல்லிணக்கத்தின் செயன்முறைகளில் முழுவதிலுமாக அது கொண்டிருக்கும் குணமளிக்கும் தாக்கங்களை வலியுறுத்துதல் வேண்டும்.

9.285 தேசிய தினத்தன்று, ஒருமைப்பாடு மற்றும் துயர் கொண்ட மோதலில் பாதிக்கப்பட்ட அனைவருடனான பச்சாதாபம் என்பவற்றை தெரிவிப்பதற்கும் மற்றும் நாட்டில் இத்தகையதொரு இரத்தம் சிந்தும் மோதல் மீண்டும் ஒரு போதும் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கான எங்களது கூட்டுப் பற்றுறுதியை உறுதியளிப்பதற்குமான ஒரு தனியான நிகழ்வுக்கு ஆணைக்குழு பலமாகப் பரிந்துரைக்கின்றது. ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்ற சான்றுரைகளின் அடிப்படையில், அத்தகையதொரு சிறப்பு வாய்ந்த நிகழ்வில், உயர் அரசியல் மட்டத்திலான, இந்த ஞாபகார்த்த உணர்வு, ஓர் தேசமாக

இப்பொழுது மேற்கொள்வதற்கு தயராகவுள்ள நல்லிணக்கச் செயன்முறைக்கு அவசியமான உத்வேகத்தை வழங்குமென ஆணைக்குழு உணர்கின்றது.

*****************************